www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

THAYAGAM

6 . 1 . 95

75¢

உண்மை:6
தேடல்:25/ 26

# தாயகம்

# யுத்த தவிர்ப்பு நீடிக்குமா?

## ரொறன்ரோவில் சமர்

## கனடா தமிழ் அமைப்புகளின் பாசிச நடவடிக்கை

## தனக்கு தானே தண்டனை விதித்து முகாமில் சமைக்கும்..

யுத்த நிறுத்தத்தின் போது இரு தரப்பும் தாக்குதல்களை நடத்துவதில்லை என்றும் தங்கள் நிலைகளிலேயே தொடர்ந்தும் இருப்பது என்றும் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இரு தரப்பினரும் தங்கள் எல்லைகளில் மற்ற தரப்பினரை விட 600 மீற்றர் தொலைவில் இருப்பர். ஆயினும் இரு தரப்பினரும் தங்கள் பங்கர்களுக்கு நூறு மீற்றர் தொலைவு வரை நடமாட முடியும். இதன் மூலம் 400 மீற்றர் இடைவெளி இரு தரப்பினருக்கும் இடையில் இருக்கும். இந்த பகுதிகளுள் நடமாடுவது தாக்குதல் நடத்துவதற்கான முஸ்தீபாக கருதப்படும். ஆயினும் கடற்படையும் விமானப்படையும் எந்த வித தாக்குதல்களும் இன்றி தங்கள் வழமையான நடவடிக்கைகளை தொடரும்.

இலங்கைக்கான
துரித பணமாற்றுச்சேவை
CD விற்பனையாளர்
SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தரத்தின் சின்னம்

# நிரு பிராண்ட்®

## Niru Brand®

**நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர் Niru Brand® தயாரிப்புகளே.**

**போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்**

நிரு பிராண்ட் தயாரிப்புகளின் தரம் பாவித்தவர்களுக்கு மட்டுமே புரியும்.

**உங்கள் கைகளில் கிடைப்பது தரமான நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை உறுதிப்படுத்துங்கள்**

Niru Enterprises Inc,

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323



# தாயகம்

'உண்மையைத் தேடி'

# தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வந்த தமிழறிஞர்கள் நாடு கடத்தப்பட்டனர்

தஞ்சாவூரில் நடைபெற்ற உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர் நரசிம்மராவ் பழங்காலத்தமிழர்கள் சர்வதேச ரீதியாக வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தது போல இந்தியர்கள் பொருளாதார வளர்ச்சிக்கு தமிழர்களின் வழியைப் பின்பற்ற வேண்டும் என்று தெரிவிததார்.

ரோம், கிரேக்கம், மலேசியா, சீனு, ஜாவா போன்ற நாடுகளுடன் கடல் கடந்து வாணிபம் செய்த தமிழர்களின் ஆர்வம் காரணமாகத்தான் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் தமிழர்கள் வர்த்தக ரீதியாக வெற்றி பெற்றுர்கள் என்று ராவ் தெரிவித்தார்.

ராவை மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம் என்று தமிழ் நாட்டுக் காங்கிரஸில் ஒரு பகுதியினர் கேட்டுக் கொண்ட போதும் இன்னெரு பகுதியினர் அவருக்கு திருச்சி விமான நிலையத்தில் வைத்து வரவேற்பு அளித்தனர். மாநாட்டின் ஏற்பாட்டு வேலைகளில் தாங்கள் புறக்கணிக்கப்பட்டதால் மாநாட்டிற்கு வரவேண்டாம் என்று வாழப்பாடி ராமமூர்த்தி பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார். ரங்கராஜன் குமாரமங்கலமும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். ஆனல் வாழப்பாடி எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு காரணம் அவர் அர்ஜுன் சிங்கின் ஆதரவாளர் என்றும் அர்ஜுன் சிங் வெளியேற்றப்பட்டதற்கான மிரட்டலே இது என்றும் காங்கிரசில் சிலர் கூறுகின்றனர்.

பூம்புகார் காலத்தில் தமிழ் துறைமுகம் செழித்ததற்கு காரணம் வெளியுலகுடனை அதன் மொழிக் கலாசார தொடர்புகளே, இந்த அடிப்படையில் நாட்டின் சில மக்கள் தங்களைத் தனிமைப்படுத்துவதற்கு விரும்புவது பற்றி ஆச்சரியப்படுகிறேன். அவர்கள் தங்கள் நாட்டின் வரலாறு பற்றி அறியாமையில் இருப்பது பற்றி

4ம் பக்கம் பார்க்க..

# பரீட்சார்ந்த முயற்சியாக இரண்டு வார யுத்ததவிர்ப்பு ஒப்பந்தம்

## 2ம் கட்ட பேச்சுவார்த்தையில் 4 பொலிசார் விடுதலை

இந்த வார இறுதியில் பரீட்சார்த்தமான இரண்டு வார யுத்த நிறுத்தம் அமுலாகும் என்று சந்திரிகா தெரிவித்திருக்கிறுர். முதலில் புலிகளுடன் அரசதரப்பினர் பேச்சுவார்த்தை நடத்திய போது யுத்த நிறுத்தத்திற்கு கடந்த செவ்வாய்க்கிழமை சம்மதித்திருந்தனர். ஆனல் சந்திரிகா இந்த யுத்த நிறுத்தம் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே என்று சந்திரிகா அறிவித்தது பெரும் ஆச்சரியத்தை தோற்றுவித்துள்ளது. இரு தரப்பினரும் தொடர்ந்தும் மற்ற தரப்பினரை நம்பாமல் இருக்கின்றனர் என்பதற்கான அறிகுறியே இது என்று கருதப்படுகிறது.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய சந்திரிகா 'நாங்கள் ஒப்பந்தம் ஒன்றுக்கு முதன் முதலாக வந்திருக்கிறேம். அது எப்படி செயற்படுகிறது என்று பார்ப்போம்.. இது ஒரு நம்பிக்கை ஏற்படுத்தும் முயற்சியாகவும் பரீட்சார்த்த முயற்சியாகவும் இருக்கும், நீண்ட காலமாக துன்புறும் எமது நாட்டுக்கு சமாதானத்தை ஏற்படுத்தும் யுகத்தின் விடிவாக இது இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்' என்று கூறினர். நாட்டில் ஸ்திரமான ஆட்சி நிலவுவதற்கு இனப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்று சந்திரிகா பாராளுமன்றத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை மூலம் பெறக் கூடிய சமாதானத்திற்கு முன்மாதிரியாக அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கம் பற்றிய கருத்துக்களை முன் வைக்கும் என்றும் தமது அரசு கௌரவத்துடன் கூடிய சமாதானத்தையே விரும்புகிறது தவிர, எந்த இழப்பிலும் சமாதானம் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என்றும் அவர் மேலும் கூறினர். புலிகள் தமது யோசனைகளை ஏற்றுக் கொண்டால் சமாதானம் வரும் என்று தாம் நம்புவராகவும் அவர் கூறினர்.

ஞாயிறு ஆரம்பிக்கும் இந்த யுத்த நிறுத்தம் பொங்கலன்று மீண்டும் பேச்சுவார்த்தைக் குழுவினர் சந்திக்கும்போது மீள்பரிசீலனை செய்யப்படும் என்று சந்திரிகா தெரிவித்தார். யுத்த நிறுத்தம் ஆரம்பிக்கும் நாள் சந்திரிகாவின் தந்தை பண்டாரநாயக்கவின் 96 ஆவது பிறந்த தினமாகும்.

பகைமையுணர்வை நிறுத்தும் இந்த முயற்சியை இனப்பிரச்சனைக்கான அம்சங்களை எதிர்கொள்ளும் பேச்சுவார்த்தைக்கான ஒரு முஸ்தீபாக தாம் கருதுவதாக சந்திரிகா மேலும் தெரிவித்தார். வடக்கு கிழக்கில் அதிகாரங்களைப் பகிர்வது பற்றிய தீர்மானங்கள் விரைவில் புலிகள் முன் வைக்கப்படும் என்றும் சமாதானத்தின் மூலம் பெருமளவு பணத்தைச் சேமிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். தற்போது வருடாந்தம் இலங்கைக்கு யுத்தத்திற்காக நாற்பது கோடி டொலர்கள் செலவிடப்படுகிறது. வெளிநாட்டு மூலதனம் அதிகளவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கிடைப்பதற்கு தடையாக இருப்பதற்கு நீண்ட காலமாக நடைபெறும் யுத்தம் ஒரு காரணம் என்று அவர் கூறினார்.

பாராளுமன்றத்திற்கு சந்திரிகா செல்லும் பாதையெங்கும் போக்குவரத்து தடை செய்யப்பட்டு பொலிஸ், இராணுவம் காவல் புரிந்தது. ஜனாதிபதியின் வாகன அணி சென்ற பின்பே போக்குவரத்துக்கு அனுமதிக்கப் பட்டது. பாராளுமன்றத்தைச் சூழ்ந்த ஏரியில் வள்ளங்களில் இராணுவத்தினரும் பொலிசாரும் காவல் புரிந்தனர்.

இந்த யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க உதவும்படி கனடா, நெதர்லாந்து, நோர்வே, செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றை இலங்கை கேட்டிருக்கிறது. நெதர்லாந்தும் நோர்வேயும் சம்மதித்த போதும் செஞ்சிலுவைச் சங்கம் மறுத்திருக்கிறது. இந்த யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்கக் கூடிய பலமும் அனுபவமும் மனிதாபிமான அமைப்பான தங்களுக்கு இல்லை என்று செஞ்சிலுவைச் சங்கம் கூறியது. கனடாவின் பதிலை அரசு எதிர்பார்த்த வண்ணம் உள்ளது. நோர்வே யிலிருந்து இராணுவ, பொலிஸ் பின்னணி கொண்ட ஒன்று அல்லது இரண்டு கண்காணிப்பாளர்கள் இந்த ஞாயிறுவருவார்கள் என நோர்வேயின் வெளிநாட்டு அமைச்சர் பிஜோர்ண் ரோர் கோடல் தெரிவித்தார். இந்தக் குழுக்கள் அந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் முறைப்பாடுகளை கேட்கும் என்றும் சம்பங்கள் நடைபெறும் பட்சத்தில் அது பற்றி விசாரிக்கும் என்றும் பிரச்சனைகளின் போது சமரசம் செய்ய முயலும் என்றும் அத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இது பற்றி அறிவிக்கும் என்றும் நோர்வேஜிய வெளிநாட்டமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுக்களுக்கு வெளிநாட்டினரே தலைமை தாங்குவர்.

யுத்த நிறுத்தத்தின் போது இரு தரப்பும் தாக்குதல்களை நடத்துவதில்லை என்றும் தங்கள் நிலைகளிலேயே தொடர்ந்தும் இருப்பது என்றும் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இரு தரப்பினரும் தங்கள் எல்லைகளில் மற்ற தரப்பினரை விட 600 மீற்றர் தொலைவில் இருப்பர். ஆயினும் இரு தரப்பினரும் தங்கள் பங்கர்களுக்கு நூறு மீற்றர் தொலைவு வரை நடமாட முடியும். இதன் மூலம் 400 மீற்றர் இடைவெளி இரு தரப்பினருக்கும் இடையில் இருக்கும். இந்த பகுதிகளுள் நடமாடுவது தாக்குதல் நடத்துவதற்கான முஸ்தீபாக கருதப்படும். ஆயினும் கடற்படையும் விமானப்படையும் எந்த வித தாக்குதல்களும் இன்றி தங்கள் வழமையான நடவடிக்கைகளை தொடரும். அத்துடன் யாழ். குடாநாட்டுக்கு மேலாக விமானம் செல்வதற்கான பாதை ஒன்றுக்கும் வழி விடப்படும். அந்தப் பாதைவழியே பறக்கும் பட்சத்தில் புலிகள் அவற்றைத் தாக்க மாட்டார்கள்.

தாங்கள் ஏற்கனவே இராணுவம் மூலம் கைப்பற்றிய பகுதிகளில் இருந்து இராணுவம் பின்வாங்க மாட்டாது என்று சந்திரிகா பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்திருந்தார்.

பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசிய சந்திரிகா புதிய யுத்த நிறுத்தத்தை ஆறு குழுக்கள் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்து கண்காணிக்கும் என்று தெரிவித்தார். இந்தக் குழுக்களில் அரச தரப்பில் இருவரும் புலிகள் தரப்பில் இருவரும் வெளிநாட்டு கண்காணிப்புக் குழு சார்பில் இருவரும் அங்கம் வகிப்பர்.

யுத்த நிறுத்தத்தை விட குண்டுவெடிப்புகள், கடத்தல்கள், அரசியல் படுகொலைகள், தனிப்பட்டவர்கள், அரசியல் தலைவர்களைக் கொல்வதும் பகைமையுணர்வை அகற்றும் முயற்சிக்குள் அடக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் தாக்குதல்கள் என்றே கருதப்படும். இரு தரப்பினரும் தங்கள் பகைமையுணர்வை நீக்கும் முயற்சியை விரும்பாத பட்சத்தில் மறு தரப்பினருக்கு 72 மணி நேர அவகாசம் கொடுக்க வேண்டும் என்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏழு நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் சம்மதத்திற்குள்ளானது. உளவு பார்ப்பதும் அதில் அடக்கப்பட்டிருக்கிறது.

பிந்திய செய்திகளின்படி சில வெளிநாட்டு அவதானிப்பாளர்கள் வந்து சேர்ந்துள்ளனர். இவர்கள் ஞாயிற்றுக்கிழமை இராணுவத் தளபதிகளுடன் யாழ்ப்பாணம் செல்வார்கள்.

பகைமையுணர்வு நீக்கப்படுவதே பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான முன்வழியாக இருக்க வேண்டும் என்று அரசு நிர்ப்பந்தித்துவந்ததாகவும் இப்போது அத்துடன் அபிவிருத்தி, புனர்வாழ்வு போன்றவற்றையும் சமாந்தரமான முன்னெடுப்பதே பேச்சுவார்த்தைக்கான முன்வழியாக அரசு கருதுவதாகவும் முன்பு அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்திருந்தார்.

# 2 ம் கட்டப் பேச்சுவார்த்தையில் அபிவிருத்திக்கு நான்காயிரம் கோடி

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பகைமையுணர்வை நீக்குவதற்கு இரு தரப்பினரும் சம்மதித்துள்ள போதிலும் சில விடயங்களில் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்க முடியவில்லை. ஆயினும் 4000 கோடி ரூபா செலவிலான சீரமைப்புத் திட்டங்களுக்கு இரு தரப்பினரும் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். இந்த திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கல், பாதை செப்பனிடல், நீர்பாசனத்திட்டங்களை திருத்துதல், தொலைத்தொடர்பு, போக்குவரத்து, பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பன திருத்தப்படும்.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் வடபகுதியில் புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட நவின் குணவர்த்தன தெரிவித்திருக்கிறார். கடந்த புதன்கிழமை வெளிவந்த உதயன் பத்திரிகையில் இவர் கூறியதாக இந்த தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தின் புதிய நிர்மாணத் திட்டம் யாழ்ப்பாணத்தை ஆசியாவிலேயே சிறந்த நகரங்களில் ஒன்றாக மாற்றும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். புதிய யாழ். நூலகத்தை அமைப்பதற்கான பொறுப்பு இவரிடமே வழங்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் புலிகள் சார்பில் தமிழ்செல்வன், கரிகாலன்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இளம்பரிதி, ரவி, டொமினிக் ஆகியோர் கலந்துகொண்டனர். அரச தரப்பில் லயனல் பெர்ணண்டோ கலந்து கொள்ளவில்லை. தன் மீது புலிகள் குற்றம் சாட்டியதால் ஏற்பட்ட அதிருப்தியே இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. அரச தரப்பில் முன்பு சென்ற பாலபட்டபெந்தி, ராஜன் ஆசீர்வாதம், நவின் குணரத்தினவுடன் பிரிகேடியர் சிறி பீரிஸ், கடற்படையைச் சேர்ந்த கப்டன் ராஜரத்தின ஆகியோர் கலந்து கொண்டனர்.

புலிகளின் அலுவலகத்தில் இந்த பேச்சுவார்த்தை நடந்த போதும் புலிகளின் தலைவர்கள் அதே கட்டடத்தில் இருந்தார்கள் என்று அரச தரப்பைச் சேர்ந்த ராஜன் ஆசீர்வாதம் தெரிவித்தார். பேச்சுவார்த்தை நடந்த போது பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்கள் பேச்சுவார்த்தை பற்றி விடயங்களை சிறிய துண்டில் எழுதி வெளியே அனுப்பி அங்கிருந்து வந்த குறிப்புகளின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தனர்.

இந்த பேச்சுவார்த்தைக்கு பாப்பரசரின் வருகையும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. தங்கள் மீது பழி விழுந்து விடாதிருக்க இரு தரப்பினரும் சமாதான விரும்பிகளாகக் காட்டும் முயற்சியே இந்த அவசரம் என்று கூறப்படுகிறது.

பலாலியிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் சென்ற தூதுக்குழுவினரை மக்கள் சந்திப்பதற்கு புலிகள் அனுமதிக்கவில்லை. பல்கலைக்கழகத்தில் அல்லாது பரி.யோவான் கல்லூரி மைதானத்திலேயே ஹெலிகொப்டர் இறங்கியது.

நடந்த பேச்சுவார்த்தையின் போது பூனகரிப் பாதையை திறக்க அரசு சம்மதிக்கவில்லை. ஆனையிறவுப் பாதையைத் திறக்க புலிகள் சம்மதிக்கவில்லை. இந்த வேறுபாட்டை விட, புனர்நிர்மாணத்திற்காக வழங்கப்படும் தொகையை சமாதானம் ஏற்பட்ட பின்பே அரசு செலவிட விரும்புகிறது. ஆனால் புலிகளோ தமிழ் மக்களின் பிரச்சனைகளை முதலில் தீர்க்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர்.

இந்த பேச்சுவார்த்தைகளின் போது புலிகள் நல்லெண்ண முயற்சியாக நான்கு பொலிசாரை விடுவித்தனர். முதலில் இருவரை விடுவிப்பதாக கூறிய போதும் பின்னர் மதிய உணவின் பின்னர் தாம் நால்வரை விடுவிப்பதாக புலிகளின் பேச்சாளர்கள் தெரிவித்தனர். தற்போது 22 பொலிசார் புலிகளின் பிடியில் நான்கு வருடங்களாக உள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தை மிகவும் சுமுகமானதாயும் சென்ற தடவையை விட நம்பிக்கை தரக் கூடியதாகவும் இருந்ததாக பாலபட்டபெந்தி தெரிவித்தார்.

# யுத்த நிறுத்தம் பற்றி சந்தேகம்

இந்த யுத்த நிறுத்தம் பற்றி சந்தேகங்களும் எழுந்துள்ளன. யுத்த நிறுத்தம் தற்போது வரவேற்கப் பட்டாலும், சமாதானத்தை அடைவதற்கு கடுமையான பேச்சுவார்த்தைகள் அவசியம் என்று கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித் துள்ளார்.

இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான உத்வேகத்தை தொடர்ந்தும் கொண்டிருக்க இந்த யுத்த நிறுத்தம் உதவுகின்ற போதிலும் சமாதானம் இலகுவாக வந்து விடாது என்பதே பலரின் அபிப்பிராயமாகும்.

புலிகள் சமாதானம் பற்றிய தங்கள் முயற்சிகளில் உண்மையாக இருக்கிறார்களா அல்லது யுத்த நிறுத்தத்தை பயன்படுத்தி தங்களை பலப்படுத்துவார்களா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்கிறார் இராணுவ அதிகாரி ஒருவர்.

சந்திரிகா கவனமாக முக்கிய பிரச்சனைகளை கலந்துரையாடுவதற்கான அடிப்படையை முன்வைக் கிறார் என்கிறார் அரசியல் ஆய்வாளரான ஹெக்டர் அபேவர்த்தன.

பகைமையுணர்வை நிறுத்திக் கொள்வதற்கான ஒப்பந்தத்தை வரவேற்கிறேன், அது யுத்த நிறுத்தத்திற்கு வழிவகுக்கும் என்றும் தமிழ் மக்களின் துயரத்தைப் போக்கும் என்றும் நம்புகிறேன் என்று கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் தெரிவித்திருக்கிறார்.

பகைமையுணர்வு நீக்கப்பட்டாலும் அதன் அர்த்தம் யுத்த நின்று விடுமல்ல என்பதே சிலரின் கருத்தாக உள்ளது. ஏனெனில் தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைக்கான தீர்வு எதையும் அரசு முன்வைக்கவில்லை. 'இது மிகவும் மெதுவான நடவடிக்கை' என்கிறார் நீலன் திருச்செல்வம்.

# புதிய பொருளாதாரக் கொள்கை பற்றி ஜனாதிபதி

பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சந்திரிகா பொருளாதார நிலை பற்றியும் பேசினார். வெளிநாட்டு முதலீட்டாளர்களால் ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்ட கொள்கை விளக்கம் பற்றிய இந்த உரையில் தனியார், கூட்டுத்தாபன வரிகளை தான் உயர்த்தப் போவதில்லை என்று சந்திரிகா தெரிவித்தார்.

முதலீட்டு வரி, செல்வ வரி, முத்திரை வரி போன்றன மீளவும் அறிமுகப்படுத்தப்பட மாட்டாது என்றும் அடுத்த மாத வரவு செலவுத் திட்டத்தில் இது பற்றிய மேலதிக விபரங்கள் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

அடுத்த வருடத்தில் துண்டு விழும் தொகை மொத்த உற்பத்தியில் எட்டு வீதமாக குறைக்கப்படும் என்றும் அடுத்த இரண்டு வருடங்களுக்கு மேலும் குறைக்கப்படும் என்றும் அவர் கூறினார். கடந்த வருடம் துண்டு விழுந்த தொகை 7600 கோடி ரூபாவாகும். இது மொத்த உற்பத்தியில் பத்து வீதமாகும்.

அரச நிறுவனங்கள் சில தனியார் மயமாக்கப்படும். விமான சேவை, காப்புறுதி, சீனி, பால், உர உற்பத்தி போன்ற நிறுவனங்களில் அரசின் முதலீடு குறைக்கப்படும்.

பொருளாதாரம் முன்னேக்கிச் செல்ல தனது அரசுக்கு இரண்டு வருடங்கள் என்றாலும் தேவை என்று சந்திரிகா தெரிவித்தார். தொழிலாளர்களின் எழுச்சியை சாந்தப்படுத்தும் முயற்சியில் தொழிலாளர்கள் இரண்டு வருடங்களுக்கு சம்பள உயர்வை வற்புறுத்த வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## தமிழாராய்ச்சி மாநாடு..

ஆச்சரியப்படுகிறேன் என்று ராவ் தெரிவித்தார்.

ஆறு நாள் நடைபெற்ற இந்த மாநாடு வியாழக்கிழமை முடிவடைந்தது.

தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வருகை தந்த 24 வெளிநாட்டு ஆய்வாளர்களை தமிழகப் பொலிசார் நாடு கடத்தினர். இவர்கள் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள் என்று குற்றம் சாட்டியே கடத்தப்பட்டிருக்கிறார்கள். இதில் 23 பேர் இலங்கையைச் சேர்ந்தவர்கள். மற்றவர் சுவீடனைச் சேர்ந்த பேராசிரியர் ஆவர்.

இவர்கள் கடந்த புதன்கிழமை நாடு கடத்தப்பட்ட போது, எட்டு இலங்கைப் பத்திரிகையாளர்களை வெளியேறும்படி கேட்கப்பட்டிருந்தது.

தன்னை நாடு கடத்தியதற்கு சுவீடிஷ் பேராசிரியர் பீற்றர் ஷால்க் கண்டனம் தெரிவித்திருக்கிறார். சுவீடனின் உப்சாலா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இவர் டிசம்பர் 31ம்திகதி தனது அறைக்கு வந்த ஐந்து பொலிசார் தன்னை தஞ்சாவூரில் இருந்து மறுநாள் காலை ஆறு மணிக்கு முன்னர் வெளியேற வேண்டும் என்று கட்டளையிட்டதாகவும் ஏன் என்று தான் கேட்ட போது தன்னை புலிகளுக்கு ஆதரவாளர் என்று குற்றம்சாட்டியதாகவும்தெரிவித்தார். இந்திய வெளிநாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் இரண்டு பிரதிநிதிகளை வெளியேறும்படி கேட்டுக் கொண்டதாக ஒத்துக் கொண்டார். காரணம் எதுவும் அவர் தெரிவிக்கவில்லை. பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரை வெளியேறும்படி இந்தியா கூறியதாக சுவீடன் தூதுவராகம் தெரிவித்திருக்கிறது. ஷால்க்கும் அவரது மனைவி, பிள்ளைகளும் நாட்டை விட்டுவெளியேறினர். தான் ஒரு குடும்பஸ்தர் என்றும் எந்த விதமான ஆயுதப்போராட்டத்திற்கும் உதவி செய்ய தான் விரும்பவில்லை என்றும் பேராசிரியர் கூறினார். யாழ். பல்கலைக்கழகமும் உப்சாலாப் பல்கலைக்கழகமும் மாற்றீட்டு திட்டம் ஒன்றைக் கொண்டிருக்கின்றன.

இலங்கையிலிருந்து கலந்து கொண்ட கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை, கா.சிவத்தம்பி ஆகியோருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. இவர்கள் இலங்கையின் உத்தியோகபூர்வக் குழுவில் இல்லை என்றே இவர்களை வெளியேற்றியதாக விளக்கம் கூறப்பட்டது. சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ், வைகுந்தவாசன் போன்றோர் உட்பட நாற்பதுபேர் வெளியேற்றப்பட்டனர். இதில் கா.சிவத்தம்பி தான் மாநாட்டில் கட்டுரை வாசிக்க வந்திருப்பதாகக் கூறிய போதும் அவர் வெளியேற்றப்பட்டார்.

இது யாழ்ப்பாணக் கல்விமான்களுக்கு வழங்கப்பட்ட கூட்டுத் தண்டனை என்று ஷால்க் கண்டித்தார். தஞ்சாவூர் ஹோட்டல்களில் புலிகள் இருக்கக் கூடும்என்றுபொலிசார் கடும்சோதனை நடத்தினர். சமீபத்தில் பாரிஸில் புலிகள் நடத்திய மாநாடு ஒன்றில் பேராசிரியர் ஷால்க் கலந்து கொண்டிருந்தார்.

## கொழும்பில் கரவை கந்தசாமி சுட்டுக் கொலை

கொழும்பில் புளொட் இயக்க முக்கியஸ்தரான கரவை கந்தசாமி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். தெகிவளையில் உள்ள தனது இல்லத்தில் வைத்து கடந்த வருட இறுதி தினத்தன்று கழுத்தில் சுடப்பட்ட இவர் உடனடியாக கொல்லப்பட்டார். கொலையாளிகள் கிரனெட் ஒன்றை வீசியதில் இவரது இருபது வயதான மகள் கடும் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

வீட்டில் மின் தொடர்புகளைத் துண்டித்த பின்னர் துப்பாக்கியால் சுட்டு விட்டு குண்டை வீசிக் கொலையாளிகள் சென்றுள்ளனர். இவரது கொலைக்கு காரணங்களாக பலவேறு ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. புலிகள் செய்திருக்கலாம் என்ற அபிப்பிராயமும் புளொட்டுக்குள் உள்ள உட்கட்சி மோதலே இதற்குக்காரணம் என்றகருத்தும்தற்போது நிலவுகிறது.

புளட் இயக்கத்தின் அரசியல் கட்சியின் செயலாளரான இவர் இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டவர். தொழிற்சங்கச் செயற்பாடுகளில் ஆர்வம் கொண்டிருந்த இவர் முற்போக்குச் சிந்தனை கொண்டவராக விளங்கியிருந்தார்.

## வேலை நிறுத்தங்களுக்கு நாம் காரணமல்ல.. ரணில் கூற்று

தற்போது தொழிற் சாலைகளில் நடைபெறும் வேலைநிறுத்தங்களின் பின்னால் ஐ.தே.கட்சி உள்ளது என்று அரசு சுமத்திய குற்றச்சாட்டை ரணில் விக்கிரமசிங்க மறுத்திருக்கிறார். தனது கட்சி பற்றி சந்திரிகா தொலைக்காட்சிப் பேட்டியில் கூறிய கருத்துக்கள் தவறானவை என்றும் இந்த வேலைநிறுத்தங்களை தமது கட்சி ஆதரிக்கவோ இல்லை என்றும் தற்போதைய விலை வாசி அதிகரிப்புக்கு தாம் காரணமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசின் தவறுகளுக்கு தங்களைக் குற்றம் சாட்டுவதை ரணில் கண்டித்தார். தங்களைக்குற்றம்சாட்டுவதைவிடுத்து தேர்தல் வாக்குறுதிகளை சந்திரிகா நிறைவேற்ற வேண்டும் என்றும் செலவுகளைக் குறைத்து, வேலைவாய்ப்புகளை அதிகரித்து வெளிநாட்டு முதலீட்டைக் கவர வேண்டும் என்றும் ரணில் மேலும் கூறினார்.

## குடிவகை, சிகரெட் விலை அதிகரிப்பு

இலங்கையில்சிகரட், குடிவகைகளின் விலைகள் அதிகரித்துள்ளன. அடுத்த மாதம் முன்வைக்கப்படும் பட்ஜட்டுக்கு முன்பாக இந்த விலையுயர்வு அறிவிக்கப்பட்டிருக்கிறது. சகல வெளிநாட்டுக் குடிவகைகளின் விலையும் பத்து ரூபாயால் அதிகரிக்கப்படும்.

சிகரட் பக்கட்டின் விலை ஐம்பது சதத்தால் அதிகரிக்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்



ஸ்காபரோ பல்வைத்திய நிலையம்

# Scarborough Dental Office

## Dr.Athi K.Somasundaram

## டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,
கனடா தேசிய பல்வைத்திய சபை





திங்கள் முதல் சனி வரை
காலை 9- மாலை 9வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப் பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல் செய்து கொள்ளுங்கள்)

★ 24 மணி நேர
அவசர சிகிச்சை சேவை

**Tel:(416) 750 9969**
**Fax:(416) 750-9967**
2155 Lawrence Ave East,
Suite 10
(At Birchmount),
Scarborough

- Wheel Chair Access
- Free Parking




- Gum Treatment
- Root canals
- Crown & Bridges
- Cosmetic Dentistry
- Bleaching
- Dentures
- Surgery

★ அவசர சிகிச்சைகளுக்கு முன்னறிவிப்பு இன்றி சிகிச்சை வழங்கப்படும்

★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்

★ காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

★ சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கும் சிகிச்சை வழங்கப்படும்

Monday-Saturday
9 am-9 pm
Sundays
12 noon-5 pm
Sunday by appointment only
24 Hrs Emergency Service

# GOOD BYE BALDNESS

## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி




## ஒரு சிறு குமிழ் உங்கள் கேசத்தை வளரச் செய்கிறது

இந்த சிவப்பு நிறக் கிழங்கு இரத்த ஓட்டத்தை கூட்டுவதன் மூலம் மயிர் கொட்டுவதைக் குறைத்து புதிய மயிர் வளர்வதற்கு உதவுகிறது.
தலைமயிர் உதிர்வது பரம்பரையானது அல்ல. ஆண்களின் உடலில் தெஸ்தஸ்தரோன் அதிகமாகச் சுரப்பதால் இரத்த ஓட்டம் குறைகிறது. பெண்களில் அழுத்தம் காரணமாக இரத்த ஓட்டம் குறைகிறது. இருபது வருட ஆராய்ச்சியின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு ஐயாயிரம் பேருக்கு மேல் பரீட்சிக்கப்பட்டது இந்த குமிழ்.

**Tel:922-0478**
239 Carlton St
Toronto, Ont

# சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
# Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




**VITAMOL** சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.றொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.

## NERVOGEN NERVE FOOD




உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.


Universal Foods & Merchandise Co,
Toronto, Canada
(416) 535-8572

## CHATAK: CURRY EXCELLENT




**Chatak Madras Curry Powder** இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. **Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix** போன்றனவும் கிடைக்கும்.

## DR.ROBERT'S GLUCOSE




குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் றொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது. ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**BUDGET SUPERSAVINGS DISCOUNT**
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 537-0394

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# அசைவு



சிவதாசன்

புது வருட வாழ்த்துக்கள்!

## வாருங்கள் வடை பிடிப்போம்

நத்தார், புது வருட விடுமுறை சுகபோகமாகக் கழிந்து போனது. ஸ்தூல சரீரமும் சூட்சும சரீரமும் பாரபட்சமின்றி விருந்துகளை ஏற்றுக் கொண்டன. இவ்விரண்டுக்குமிடையேயான உறவு தாம்பத்தியத்தை ஒத்திருப்பதனாலோ என்னவோ அஸ்தமிக்காத ஆலிங்கனம் இவ்விரண்டையும் ஆனந்தமாக வைத்திருந்ததில் எனக்கும் மகிழ்ச்சி.

நாட்டு நடப்பைக் கொஞ்சம் மறந்து நண்பர்கள் உறவினர்கள் என்று சந்தித்துக் கொண்டோம். இலக்கிய நண்பர்களுடன் எண்ணப் பரிவர்த்தனை செய்து கொள்வதில் தான் எத்தனை இன்பம்!

நண்பர்கள் ஆனந்த் பிரசாத், நெவில், சேரன், செழியன், விஜி என்று அமர்க்களமாக இசைவிருந்து படைக்க, சூட்சுமம் இசைரசத்தில் நெகிழ, ஸ்தூலம் மதுவினில் மகிழ காலம் களிப்புடன் கழிந்து போனது. உண்டி கொடுத்த பெண்டிர்கள் நன்றிக்குரியவர்கள்.

பெண்கள் இருந்து மகிழ்ந்துண்ண, ஆண்கள் நள பாகம் செய்து ஒரு விருந்து வைக்க வேண்டும் என்பது எனது புது வருட விருப்பம்.

வாருங்கள் நண்பர்காள் வடை பிடிப்போம்.

## கறை படிந்த பக்கங்கள்

மதுரையில் ஒரு மாநாடு நடைபெறுகிறதாமே ? தமிழுக்கு ஒரு ஆராய்ச்சியாம். கேள்விப்பட்டீர்களா ?. ஈழத்தமிழர்கள் புறக்கணிக்கப் பட்டிருக்கிறார்களாம்.

நெஞ்சு கொதிக்குமோ இந்த நிலைகெட்ட மனிதரை நினைக்கும்போது?.

எனக்கொன்றும் இந்த மாநாட்டில் அதிகளவு அக்கறையில்லை. 'எங்கள் தமிழருக்கு' இப்படி நடந்துவிட்டதே என்று கத்தியழுது 'தேசீயகீதம்' பாடிவிடவும் எனக்கு இச்சையில்லை. விழா தமிழுக்குத் தானே. விஷம் ஏன் தமிழர்கள் மீது என்று தர்க்கம் பேசிவிடவும் நாட்டமில்லை.

பாரபட்சம் காட்டப் பட்டிருக்கிறது. ஏன்? எங்கள் பதில் என்னவா யிருக்கவேண்டும்?

பாரபட்சத்துக்கு சரித்திரமே இருக்கிறது என்று இலகுவாகச் சொல்லி விடலாம். ஈழத்து இலக்கியங்கள் அக்கரையை அடைவதில்லை என்று பலரும் குறைப்பட்டுக் கொள்ளலாம்.

ஒதுக்கப்பட்டோமா? ஓரங்கட்டப் பட்டோமா?. சொல்லமுடியாது.

சங்க காலத்து ஈழத்துப் பூதந்தேவனார் முதல் இந்தக் காலத்து கலாமோகனார் வரையில் இலக்கிய பாலத்தைக் கடந்துகொண்டுதானிருக்கிறார்கள். அது ஏன் ஒருவழிப் பாதையாக இருக்கவேண்டும்? யாராவது கேட்டார்களா?

ஈழத்து இலக்கியத்துக்கு தளம் குறைவாகத் தரப்பட்டிருப்பினும் இயக்கத்துக்கு தளம் தந்தது தமிழகம் தான். வெறும் அரசியல் நாடகமோ என்னவோ மக்கள் வரவேற்றவர்கள். மறுக்கக் கூடியதல்ல. காலம் மாறிவிட்டது. தேசீயம் எல்லைகளை மாற்றிக் கொண்டு விட்டது.

இதற்கு நாமும் தான் காரணம். ஏற்றுக் கொண்டேயாகவேண்டும்.

ராஜீவின் கொலைதான் இதற்கெல்லாம் காரணம் என்பதும் அதற்கு நாங்கள்தான் பொறுப்பாளிகள் என்பதும் முழுப் பூசணிக்காய் விவகாரம். மறைப்பதற்கு சோறே இல்லாதவாறு காரியங்களைப் பண்ணியிருக்கிறோம். இந்தியாவிலோ இராஜீவின் இரத்தத்தைத் தூசி தட்டி அரசியல் வியாபாரம் நடந்து கொண்டிருக்கிறது. ஜெயலலிதா அம்மன் சந்நிதியில் இந்த இரத்தம் நித்திய நைவேத்தியமாகப் படைக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது.

பட்டுக் கொண்டிருந்த மரத்திற்குப் பசளை போட்டது நாங்கள்.

மாநாட்டு விடயத்தில் இந்திய, தமிழக அரசுகள் மற்றும் விழாக் குழுவினர் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை. அப்பட்டமாகத் தெரிகிறது. பூ மாலை போட்டுப் புருஷரைக் கொல்லும் எம்மிடம், மிதி வண்டிகளைக் குண்டு–ஊர்திகளாகப் பாவிக்கும் எம்மிடம் மட்டும் என்ன நேர்மை இருக்கிறது?

நாம் நடந்து கொண்டது அரசியல் தந்திரமானால் அவர்களும் அதையேதான் செய்கிறார்கள். நாங்கள் தனுவைப் பாவித்தோம். அவர்கள் தமிழைப் பாவிக்கிறார்கள். நாங்கள் சரியென்றால் அவர்களும் சரி.

இனி என்ன செய்யலாம்?

சரித்திரத்தில் கறை படியாத பக்கங்கள் என்று எங்குமே இருந்ததில்லை. எங்கள் கறைகளை விடவும் இந்தியாவின் கைகளில் இரத்தக் கறைகள் ஏராளம். மதியாதார் வீட்டில் மிதித்துக் கொள்ளத் தேவையில்லை. அவர்களுக்கு எங்களைத் தேவையில்லாது போனால் எங்களுக்கும் அவர்களைத் தேவையில்லை. எங்கள் சுய மரியாதையை இழக்காது நாங்கள் பார்த்துக் கொள்வோம். எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் எங்களைச் செழிப்பாக்கும்.

இதையெல்லாம் சொல்லி சிந்தனைகளைத் தேசீய எல்லைகளுக்குள் சிறைப்பிடிப்பதில் பெருவிருப்பில்லையாயினும் சுயமரியாதை விசாரணைக்குட்படும் போது உலகப் பார்வையில் ஒடுக்கம் விழுவதைச் சகித்துக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. கவலை தான் நான் முனிவனல்ல.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவ வழி செய்தவர்கள் ஈழத்தமிழர்கள். உலக மாநாட்டையே நாம் தினம் தினம் நடத்திக் கொண்டிருக்கும் போது மதுரை மாநாட்டால் மனதை ஏன் தளரச் செய்ய வேண்டும்?

எழுந்து போங்கள். ஏராளம் சோலி உண்டு!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# நின்ஜா ஆமையாரின்

# Post Christmas Adventures...!

## You & Me ≠ யூமி

மொன்ரியால் மிராபெல் எயர்போர்ட் வரை போக வேண்டி வந்தது

"தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ளப் போகிறேன்..." என்றுவிட்டு மெட்ராஸ் போகும் பிளேனை நோக்கி ஓடினுர் அந்தப் பெண்.

பெண் தமிழ்ப்பெண்ணுகை இருக்கும் என்று நீங்கள் நினைத்தால் உங்களுக்கு மார்க் சைபர்.

மிஸ் யூமி ஒரு ஜப்பானிய பெண். மக்கில் பல்கலைக்கழகத்தில் தமிழாராய்ச்சி செய்கிருர். உத்தியோக பூர்வமாக அழைக்கப்படாவிட்டாலும் தமிழார்வம் காரணமாக தானே சொந்தச் செலவில் தஞ்சாவூர் செல்கிருர்.

கனடாவிலிருந்து தமிழ் ஆர்வம் மேலீட்டால் கொஞ்சப்பேர் உத்தியோகபூர்வமாக தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ள விண்ணப்பித்ததும். அனுமதி கிடைக்கவில்லை என்பதால் தமிழ் ஆர்வத்தை பரணின் மேல் போட்டுவிட்டது இதைப் படித்ததும் ஞாபகம் வந்தால் அதற்கு நான் ஜவாப்தாரியல்ல.

## மிருக ஸமாச்சாரம்

கடையில் தாயகத்தை வாங்கிக் கொண்டு திரும்பும்போது "திறப்பார்களா?" என்று கொண்டு வந்தார் அந்த தாயகபிமானி. கொஞ்சம் வயதானவர்.

"திறக்கவும் கூடும் திறக்காமல் விடவும் கூடும்..." என்று பதிலிறுத்துவிட்டு "எதை ஐயா?" என்று கேட்டேன்.

"கிளாலிக்கு பாதுகாப்பு கொடுத்து கொடுத்து ஏனடா தம்பி அவர்களும் கஷ்டப்பட்டு போற வாற சனத்தையும் கஷ்டப்பட்டு போக்குவரத்து செய்ய வைக்கவேணும்? பேசாமை ஆனையிறவை திறக்கிறதுக்கு ஏலுமான பேச்சுவார்த்தை வழியை பார்க்கலாம்தானே.... " என்ருர் பெரியவர்.

ஓஹோ... இது ஆனை.. புலி, சிங்கம் சம்பந்தப்பட்ட மிருக ஸமாச்சாரம்.


"ஐயா.. ஆனையிறவுப் பக்கம் கண்ணிவெடிகள் இருக்கின்றபடியால் மக்களின் பாதுகாப்பு காரணமாகத்தான் அதை திறக்க வைக்கிறதில் தாமதம் போலும்...." என்றேன்.

"கிளாலியில் மட்டும் ஆபத்து இல்லையோ..." என்று சீறினுர் பெரியவர்.

நான் நழுவிக்கொண்டேன்.

"எல்லாம் காசடா தம்பி ...காசு செய்யிற வேலை..." என்று கொண்டே அவர் போனுர்.

எனக்குப் புரியவில்லை. உங்களுக்குப் புரிகிறதா?



## (இல)வசமாக மாட்டினுர்கள்

ஒட்டாவாவில் ஒரு பல்கலைக்கழகம் சம்பந்தப்பட்ட 'அவரை' நான் பார்க்கச் சென்றபோது அவர் என்னைப் பார்த்து சொன்னது "இலவசப் பத்திரிகைகளை நம்பாதீர்கள்" என்ற பொன்மொழி. எதற்கென்று நான் கேட்க முன்னரே விபரமும் தந்தார்.

நவம்பர் மாதம் ஒட்டாவாவில் இந்திய நாட்டிய கருத்தரங்கு ஒன்று மூன்று நாட்களாக நடைபெற்றது... புரபொஸர் சுப்பிரமணியம் ஒழுங்குபடுத்தியிருந்தார். கடைசி தினத்தன்று கதக், குச்சுபிடி, ஒடிசி, பரதநாட்டியம் என பலவகை நாட்டிய வகைகள் போட்டி போட, பலத்த போட்டியின் பின் கதக் ஆடியவருக்கு முதலாமிடம், பரதநாட்டியமாடிய ஒரு பாரத தேசத்தவருக்கு இரண்டாமிடமும், ஒடிசி நடனமாடியவருக்கு மூன்ருமிடமும் வழங்கப்பட்டது. சபையோரின் பரிவுரையின் பின்னர் விசேடமாக சிருஷ்டிக்கப்பட்ட நாலாவது பரிசு ஒன்று ஈழத்தமிழர் ஒருவருக்கு வழங்கப்பட்டது.

அதற்கும் இலவசப்பத்திரிகைகளுக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கூச்சல் போடமுன் ஒருவிடயம். அந்தக் கருத்தரங்கில் ஈழத்தமிழருக்கு **முதல்பரிசு** கிடைத்ததாக அல்லவா இரண்டு இலவசப்பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

இலவசமாக ஏமாற்றியது யார் தவறு? இலவசமாக ஏமாந்தது யார் தவறு? என்று நான் மண்டையை உடைக்கவேயில்லை. ஏனென்ருல் இலவசப் பத்திரிகைகளைத்தான் நான் நம்புவதேயில்லையே...!

## Atwater காதல் கதை

நான் ஒரு துப்பறியும் நிபுணனுக்கும்.

அதுவும் காதல் விடயத்தில்.

கிறிஸ்மஸ் கழிந்ததற்கான பார்ட்டி ஒன்றில் என் பத்திரிகை நண்பர் ஒருவர் கவலையோடிருந்தார். விஸ்கி, வொட்கா, பியர் சேர்ந்து At waterஇல் (அதாவது தண்ணியில்) அவர் புலம்பியதன் சாரம் இதுதான். நண்பர் பலவருடங்களாக ரகசியமாக மானசீகமாக ஒருதலைராகம் பாடிய பெண்ணுக்கு போன் செய்தபோது. அங்கே ஒரு ஆண்குரல் போனை எடுத்துத் தன்னை பெண்ணின் காதலன் என அறிமுகம் செய்து விட்டு "வையடா போனை.." என்று சொல்லாத குறையாக... இப்போது நண்பர் புலம்புகிருர் "ஒரு நல்ல நண்பி என்று நினைத்தேனே...."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

என் மூளையின் ஷெர்லக் ஹோம்ஸ் பகுதியை துடைத்துவிட்டு சொன்னேன்:

1. நல்ல நண்பியாக இருந்தால் தன் காதலனைப் பற்றி முதலே உன்னிடம் சொல்லியிருப்பாள்.
2. அடிக்கடி நீ போன் எடுப்பதால் அதைத் தடுக்கத்தான் இந்த நாடகம் போட்டிருப்பாள்.
3. அவளுக்கு வெகுவிரைவில் திருமணம் செய்து வைக்கப் போகிறார்கள்.

(4. உண்மையிலேயே அது அவளது காதலனாகவும் இருக்கக்கூடும்..)

நண்பர் இப்போ Voltaire சொன்னதை திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறார். *"I Do not agree with a word of what you say, but I'll defend to the death your right to say it.."*

காதலென்றால் பெரும் அவஸ்தையென்று உன்னைக் கண்டதும் கண்டு கொண்டேன்...

(சம்பந்தப்பட்டவர்கள் யாரென்று யாருக்கும் சொல்லமாட்டேன். ஏனென்றால் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன்)

க்யூரியஸ்

புத்தாண்டைக் கொண்டாட ரொரன்டோ வந்தேன் என்று சொல்வதைவிட கியூரியஸின் இசைக்கடலில் ஒரு துரும்பாகித் தத்தளித்தேன் என்று சொல்வதே நன்று—

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்த கீபோர்ட், மிடி இன்டர்பேஸ் என்பவற்றுடன் மிராக்கல் பியானோ ரீச்சிங் ஸொஃப்ட்வேரையும் வைத்துக் கொண்டு ஒரு 'மாஸ்ட்ரோ' இசை ஞானியாகும் முயற்சியில் ஈடுபட்டுள்ள கியூரியஸைப்பற்றி இனி கியூரியஸிடம் புகார் செய்துதான் நிறுத்தவேண்டும். அதைவிட ஸொஃப்ட்வேர் பற்றி முழுவிபரங்களையும் சொல்லிக்கொடுத்துவிட்டு "Cabbage Townஇல் முதல் முதலாக மிடி இசை வழங்கும் கியூரியஸ்" என்று திருவாளர் வெண்ணிலா அவர்களை சூரியனில் கட்டுரை எழுதும்படியும் கேட்கலாம்....

## SUPER LEADS

ரொரன்டோவிற்கு வந்தால் எப்படியும் ஒரு கலைநிகழ்ச்சியாவது (பயந்து பயந்து.....) பார்த்துவிட்டுதான் வருவேன்.

இம்முறை டிசம்பர் 30 வெள்ளிக்கிழமை ஒரு மியூசிக் புரோக்கிராம் கிடைத்தது. சுப்பர் லீட்ஸ் இசைக்குழு. இதுதான் அவர்களது முதலாவது முழுநீள இசை நிகழ்ச்சியாம். சுருக்கமாக சொன்னால் நன்றாகவே இசைத்தார்கள்.

ரொரன்டோவில் நிறைய்யய்ய இசைக்கலைஞர்கள் இருக்கிறார்கள். நட்புரீதியிலும் தொழில் ரீதியிலும் கூட இங்கு நிறைய்ய்யய இசைக்குழுக்களும் இருக்கின்றன. அதில் இந்தக்குழு ரொம்ப இளைய குழு. வாத்தியக்கலைஞர்களும் சரி, பாடகிகளும் சரி வயதில் ரொம்ப ரொம்ப 'இளசு'! (ஹலோ.. நிஞ்சா ஆமையாரே. ... உமது வயதென்னவோ?)

மண்டபம் நிறைந்திருந்தது. மண்டபத்துள் வேறு இசைக்குழுக்களின் பிரபலங்கள், பாடகர்கள் என்பவர்களும் நிறையவே கண்ணில்பட்டனர். லேட்டாகவே நிகழ்ச்சி ஆரம்பித்ததால் நான் வரவும் நிகழ்ச்சி ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது. (டைமிங் சார்! டைமிங்)

மேடையில் பார்த்தால் அட நம்ம பாலா.... மொன்றியாலில் எந்த நிகழ்ச்சி நடந்தாலும் அங்கு தபேலா வாசித்து Theபாலா என்ற சிறப்புப்பெயரை தாயகத்திடம் பெற்ற அதே பாலா. இவரும் புலம்பெயர்ந்து ரொரன்டோ வந்துவிட்டார்.

முழு நிகழ்ச்சியும் ஜனரஞ்சகமாக போயிற்று. மேடை அறிவிப்பாளராக வந்த ரவி அச்சுதனை முன்பே சில வீடியோக்களில் பார்த்து ரசிக்க நிர்த்தாட்சண்யமாக மறுத்திருக்கிறேன். இந்த நிகழ்ச்சியில் அவர் அறிவிப்போடு இரண்டு பாடல்களும் பாடிச்சென்றார். ஆனால் அவர் இளையராஜா குரலில் பாடியபோது உண்மையிலேயே மிகவும் நன்றாக இருந்தது. காதல் கசக்குதையா.. என்று அவர் கசக்கியது அச்சா....அச்சா. ..! (ரவி அச்சாதான்.) ஆனால் அறிவிக்கும்போதுமட்டும் தமிழ் நாட்டு பேச்சுவழக்கில் கங்கை அமரன்போல பேசுவது கசக்குதைய்யா.... மிக மிக கசக்குதைய்யா....

பாடகர் அலெக்ஸ் மேடைக்கு வந்ததும் ஒரு பார்வையாளர் தலைவா.. என்று குழறி வாழ்த்தினர். (ரசிகர் மன்ற தலைமை போராளியாகவிருக்கலாம்) அலெக்ஸ் சிரித்துக்கொண்டே பாடி ஐமாய்த்துவிட்டார். (வருது வருது விலகு விலகு வேங்கய் வெளியய் வருது.) சௌந்தரராஜன் குரலுக்கு ஏற்றவரை தேடிப்பிடித்திருக்கிறார்கள். சௌந்தராஜன் போலவே ஒரு காலை மட்டும் கடுமையாக அவர் ஆட்டிக்கொண்டு பாடியதையும் கவனிக்கக்கூடியதாக இருந்தது.

"சித்திரை நிலவு சேலையில் வந்தது முன்னே.." என்று கௌரியும், குமாரியும் சிவப்பு நிற சேலையில் வந்து மிக அழகாகவும், ரசிக்கத்தக்க விதமாயும் பாடினர். 'சின்னப் புள்ள' சுகல்யா பாடுவதில் பெரிய புள்ளி. பாடகியர் அனைவருக்கும் கிட்டிய சாஸ்திரிய சங்கீதப் பயிற்சி நிறையவே கைகொடுக்கிறது. சுகல்யா வெவ்வேறு பாடகியரின் பாடல்களை பாடும்போது குரலும்கூட அதற்கேற்ப மாறுகிறது.

பாடல் தெரிவுகள் எல்லோரையும் திருப்திப்படுத்தியதா என்பது சந்தேகம். ஓரிரு பாடல்கள் கொட்டாவியை வரவைத்தன. பல பாடல்கள் மயக்கின. (குறிப்பாக ஏ... பாடல் ஒன்று..)

ரஹ்மான் பாடலுக்கு கொஞ்ச 'தோடுடைய செவியர்' மேடையில் ஆடியது ஜாலியாக இருந்தது. நோர்த் அமெரிக்கன் ரீ.விக்கும் தமிழக சினிமாவுக்கும் பிறந்த புதுவகையான ரசிக்கத்தக்க நடனவகை இது என்பது எனது பணிவான அபிப்ராயம். கௌரி மேடையில் 'ஆடவரலாம்....' என்று பாட ஒரு ஆடவர் மேடைக்கு சென்று கமல்ஹாசநடனம் ஆட... இதுவன்றோ சுப்பர் டான்ஸ்.

நிகழ்ச்சியை சோடை போகாது வைத்துக்கொண்டிருந்த பெரும்பங்கு வாத்தியக் கலைஞர்களுடையது. குழுவின் லீடர் குமரன் கிட்டார் வாசித்தார். (அந்த குறுந்தாடி மட்டும் மிஸ்ஸிங்) இடையிடையே பாடல்களையும் பாடினார். எல்லாப் பாட்டுக்களுக்கும் தலையை ஆட்டி இவர் கிட்டார் வாசித்ததே தனியாக ரசிக்கக்கூடியதாக இருந்தது. கீபோர் வாசித்த அஜித் அசத்திவிட்டார். மூன்று கீபோர்டிலும் அஜித்தின் இரண்டு கைகளும் ரொபோர்ட் போல விளையாடின. விஜிதகுமார் ட்ரம்ஸை வாசித்த விதத்தையும்குறிப்பிட வேண்டும். ரஹ்மானின் பாடல்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கம்பியூட்டர் மூலம் தந்த பின்னணி இசையை விஜிதகுமார் கையால் வாசித்தபோது அசலுக்கும் நகலுக்கும் வித்தியாசம் தெரியவில்லை என்பதே பாராட்டு. கொங்கோ வாசித்த ரெரன்ஸ், மற்றும் ஷெஹான் என்பவர்களும் கலக்கித் தள்ளினார்கள். (அதுசரி... சுப்பர் லீட்ஸுடன் மொன்றியாலுக்கு வந்திருந்த பாடகர் நிக்கலஸ் ஜீட் எங்கே?)

கடைசியில் நேரம் போதாமையால் அவசர அவசரமாக சுந்தரா.. என்று சுப்பர் போலீஸ் பாடலுடன் நிகழ்ச்சி முடிக்கப்பட்டது. எதுவித அடிதடிகளும் சுப்பர் போலீஸ் களேபரங்களும் இன்றி அமைதியாக ஒரு மியூசிக் புரோகிராம் வெகு நாட்களுக்கு பிறகு பார்த்திருக்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரம் நிகழ்ச்சியை நீடித்திருக்கலாமோ என்று தோன்றியது.

இந்தக் குழு நிட்சயமாக இன்னும் நிறைய சாதிக்கும் போலத்தான் தெரிகிறது.

## Will you marry me?

Will you marry me? என்ற ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சி புதுவருடத்தின் இரண்டாம் நாள் C.T.V. இல் காட்டினார்கள். Three's company கிரிஸ்டி (சூசன்)தான் நிகழ்ச்சித் தொகுப்பாளர்.

மேற்குலகில் என்னதான் காதலர்கள் என்றாலும்கூட "என்னை மணம்செய்வாயா?" என ஒருநாள் சம்பிரதாயபூர்வமாக அவர்களில் ஒருவர் propose பண்ணுவதென்பது ஒரு ஆனந்தக் கண்ணீர் வரவைக்கும் காதற்சடங்குங்க.. தன் மனதுக்குகந்தவன் "மணம் புரிவாயா கண்ணே...?" என மண்டியிட்டு கேட்கவேண்டும் என்பது மேற்கத்திய பெண்களின் கனவன்றோ! காதலன் பின் விலையுயர்ந்த நிச்சயதார்த்த மோதிரத்தையும் தந்து மேலும் மகிழ்விப்பான். (இதையே பெண்களும் ஆண்களுக்கு செய்வதுண்டு)

Will you mary me நிகழ்ச்சியில் இப்படிப்பட்ட ப்ரபோஸல்களை ரகசியமாக படம் பிடித்து சுவாரஸ்யமாக தொகுத்திருந்தார்கள். ஒரு காதலன் பெரும் விருந்து ஒன்றை ஏற்பாடு செய்து விட்டு, அங்கு ஏதேச்சையாக காதலியை வரச்செய்துவிட்டு, தான் பெரும் 'கேக்' பெட்டியுள் மறைந்திருந்து வெளியே வந்து காதலிமுன் மண்டியிட.. காதலி கண்களில் நீர்....! நடிகை ஒருத்தி தான் கலிபோர்னியாவிலிருப்பது போல புரடக்ஷன் மனேஜரான தன்னுடைய காதலனுக்கு டூப்விட்டுவிட்டு, ஷூட்டிங்கின்போது ஒரு பெரும் செட்டின் இடையே தோன்றி Will you mary me என்கிறாள். காதலன் திகைத்து பின் முத்தமிட... இப்படிப்பல... எல்லாவற்றையும் நேரடியாகவே படமாக்கியிருந்தார்கள் என்பதுதான் சிறப்பு...

ஹூம்.. (பெருமூச்சு) நான்கூட இப்படி கேட்கலாமா என்றுதான் பார்த்தேன். கேட்டிருந்தால்... No... No... No... No...
இல்லையெண்டு சொல்லுறியளோ....??

Books,
Flyers,
Business Cards,
Wedding Cards

**Blue Line Printing**

கண்ணைக் கவரும் வண்ணங்களில்
தரமான அச்சுவேலைகளுக்கு..

1000
FLYERS $21
ENVELOPES $35
BUSINESS CARDS $30
LETTERHEADS $25

Tel:299 5979
Fax:299 8171

335 Nugget Ave, Unit 6
(McGowan/Sheppard)
Scarborough



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பெண் சாதி

## மூர்த்தி

அந்தக் கவிதையை படித்ததும் திகைத்துவிட்டேன்.

கடவுளே... இந்தக் கவிதையை நான் எழுதி எத்தனை வருடங்களாயிற்று...! இது அவளுக்காகத்தான் எழுதுகிறேன் என்று யாருக்கும் தெரியாமல் எழுதி அவளுக்கே சமர்ப்பித்த கவிதையல்லவா...! இது எப்படி இங்கு பிரசுரமாயிற்று? அப்படியானால் எங்கே அவள்..?

ஹூம்... பத்து வருடத்துக்கு முந்திய என் வாழ்க்கைக்கதையில் ஒரு கவிதைக்காலம் அது.

"நீங்க நல்லா கவிதை எழுதுறீங்க.."

"சும்மா அப்பப்போ ஏதோ இப்படிக் கிறுக்கிறது."

அந்தக் கவிதைகளில் காதல் இருக்கும். ஒருத்திக்காக ஒருவன் ஏங்கும் வேதனையிருக்கும். கொடுப்பேன். சிரிப்பாள்.... மந்தஹாஸச்சிரிப்பு. எதுவித உணர்வுமின்றிய ஆர்வத்துடன் வாங்கிக் கொள்வாள்... ஏய்... பெண்ணே.... நீ மனதுள் என்னதான் நினைக்கிறாய். . சொல்லமாட்டாயா...? அடிக்கடி சமர்ப்பித்தேன். ஆனால்....

எத்தனையோ கவிதைகளுக்கு அப்புறமாகத்தான் தெரிந்துகொண்டேன் அவளது எதிர்கால கணவன் யாரென்று.

நிச்சயமாக இனி நான் அவளுக்கு இல்லை என்பது புரிந்து போயிற்று.....

ஆனால் அதற்காக என்னை நான் மாற்றிவிடத் தயாராகவில்லை... மீண்டும் எழுதுவேன். சமர்ப்பித்தேன்.

அவளும் எதுவித உணர்வுமின்றிய மந்தஹாஸச் சிரிப்புடன் வாங்கிக் கொள்வாள்...

இதெல்லாம் பத்து வருடத்துக்கு முந்திய கதை.

அவள் எப்போ இங்கு வந்தாள்....? எப்படி வந்தாள்....??

இந்தக் கவிதைகளை இன்னுமா அந்தக் கற்கண்டு ஞாபகத்தில் வைத்திருக்கிறது?

இன்னும் 'அவனுடன்தான்' இருக்கிறாளா....?

பரபரத்தது மனது.

போனை கையில் எடுத்தேன்...

"எப்பிடிக் கண்டுபிடிச்சீங்க...?"

"உந்தக் கவிதை உம்மை விட்டால் உலகத்திலே ஆருக்கும் தெரியப்போறதில்ல.. அந்த பேப்பருக்கு அடிச்சன்... உம்மடை கவிதையை குடுத்த ஆக்கள் எண்டு சொல்லி ஒரு நம்பர் தந்தாங்கள்.... அங்கை அடிச்சு உம்மடை இந்த நம்பரை பிடிச்சுட்டன்..."

"ஓமோம் அது நான் முந்தி தங்கியிருந்த வீடு.. அங்கையிருக்கிற அன்ரியும் அந்த பேப்பருக்கு அதிகம் எழுதிறவ..."

சிரித்தாள்.. அதே குளிர்காற்று.

பேசிக் கொண்டேயிருந்தோம். பேசிக்கொண்டேயிருந்தோம்.

ஒரு வார்த்தை நான் அவனைப்பற்றி கேட்கவில்லை. அவளும் சொல்லவில்லை...

என்று அவளை கடைசியாக பார்த்தேனோ அதற்கு முதல் நாள் நடந்தவரை பேசிக்கொண்டேயிருந்தாள். அடி அழுத்தக்காரி.. பிறகென்ன நடந்தது...? அவனெங்கே?? நானும் கேட்கவில்லை.. அவளும் சொல்லவில்லை...

"நீர் எங்கை இருக்கிறீர்...?"

பதில் சொன்னாள்.

"ஒரு நாளைக்கு உம்மை சந்திக்கவேணும்"

"கட்டாயம்... எப்ப வேணுமெண்டாலும் சந்திக்கலாம்"

குழம்பினேன்..

பொறு பெண்ணே... என் கவிதைகளை ஞாபகத்தில் வைத்திருக்கிறாயே.. உன்னை நான் எப்படி என் மனதுள் இறுக்கிக்கொண்டேனோ அப்படித்தான் நீயும் இருக்கிறாயோ? சொல் பெண்ணே..

அப்படியானால் 'அவன்'...?

"நாளைக்கு பின்னேரம் சந்திக்கலாமே...!"

இடத்தைச் சொன்னாள்...

வேலை முடிந்தது... காரை அசுரவேகத்துடன் வீடுவரை செலுத்தினேன்.. குளித்தேன்... முகத்தை ஷேவ் பண்ணிக்கொண்டேன்... தலையை வாரிக் கொண்டேன்.



. சில நரை மயிர்கள் கண்ணில்படுகின்றன.. முதுமைக்கு நரை அழகு என சமாதானப்படுத்திச் கொள்கிறேன்.

'அவன்' எப்படியிருப்பான்...??

அவள் சொன்ன காம்பஸுள் புகுந்தேன்.... ஏழாவது மாடி... வலப்பக்கம் திரும்பி கஃபெடேரியாவின் உள்ளே நேரே... அவளேதான்.... அது அவளேதான்....

"ஹாய்..."

"ஹலோ"

முன்னே சென்று அமர்ந்தேன். மாங்கனி கொஞ்சம் முற்றியிருந்தது. என்னை அசாதாரணமாகப் பார்த்ததுபோலத் தெரிந்தது...

"நம்பவே முடியுதில்லே..."

"இது மட்டுமில்ல வாழ்க்கையில எவ்வளவோ நடக்குது.. எதையும் நம்பமுடியுதில்லே.." சிரித்தாள்..

"நான் இப்ப இங்கை இருக்கிறன் எண்டு உமக்கு எப்பிடித் தெரியும்..?"

"அடிக்கடி பேப்பரில பாக்கிறனான்.. உங்கட பெயரில சில சில சோகக்கவிதையளை..."

மீண்டும் சிரித்தாள்...

"முந்தித்தான் மனதிலே சந்தோசம் இருந்தது. அதாலே சந்தோசமா எழுதினனான்..."

இப்ப சந்தோசம் இல்லையா என்று அவள் கேட்கவில்லை. என் வேலையைப்பற்றிக் கேட்டாள். என் தாயைக் கேட்டாள்.... எங்களோடு சேர்ந்து படித்த நண்பர்களைப் பற்றிக் கேட்டாள்.. பிறகுதான் கதீரனை கல்யாணம் பண்ணீட்டிங்களா.. என்றும் கேட்டாள்.

"எப்படி அந்தக் கதீரனைப்பற்றி உமக்குத் தெரிஞ்சுது..." வியந்தேன்.

" ஊரிலே சொன்னவை.. இப்ப எங்கை அவ?"

"கறுப்பும் வெள்ளையும் வேறை வேறை... எப்படிச் சேரும்?

"ஏன்?"

"வாழ்க்கையிலே எவ்வளவோ நடக்குது... எதையும் நம்பமுடியுதில்லே.." என்றேன். சிரித்தாள்.

என்னைப்பற்றிக் கேட்கிறாளே நானும் அவனைப்பற்றிக் கேட்போமா? என என் மனம் துருதுருத்தது.

ஆனால் இந்த அழுத்தக்காரியிடம் நானாக கேட்கப்போவதில்லை. அவளாகவே சொல்லட்டுமே...

கோப்பியை குடித்தோம்.

எதையோ முணுமுணுத்துப் பாடினாள்.

"இப்பவும் பாடுறனீரோ...?"

"சீ..ச்சீ... உங்கடை கவிதைக்கு நான் ராகம் போட்டனான்..."

"அதெப்படி அதையெல்லாம் ஞாபகம் வச்சுக்கிறீர்.?"

நிமிர்ந்தாள்.

என் கண்களைப் பார்த்தாள்.

"போவோமா...?"

**போனை** எடுத்தேன்.

"ஹாய்.."

"ஹலோ"

"எப்பிடி இருக்கிறீர்?"

"பரவாயில்லே.. நீங்க?"

பேசினோம். ஏதேதோ பேசினோம். எதுவுமே எம்மைப்பற்றியல்ல. எம்மைச் சுற்றித்தான் எத்தனை புதுமைகள்.. எத்தனை அழகுகள்.. எத்தனை பிரச்சனைகள் இருக்கின்றனவே! உலகத்தை ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு பேசுவதற்கா விடயமில்லே...

"உங்களுக்கு நிறைய விசயம் தெரிஞ்சிருக்கு.. நான் இன்னும் தெரிஞ்சு கொள்ள நிறைய விசயமிருக்கு..."

மகிழ்ச்சியாக இருந்தது...

"என்னட்டை கொஞ்ச புத்தகங்கள் கிடக்கு. தரட்டோ? படிச்சுப்பாரும்..."

"தாங்கோ.."

போனை வைத்ததும் பேனாவை எடுத்தேன். ஒருவித மூட் வந்தது. கவிதையாய் கிறுக்க ஆரம்பித்தேன்.

**ச**ந்தித்தோம். எப்போதோ அவள் எனக்குத் தந்த பாரதியார் கவிதைப் புத்தகத்தையும், இன்னோர் என்வலப்பையும் கொடுத்தேன்.

அதே மந்தஹாஸச் சிரிப்புடன் "எத்தனை கவிதைகள்?" என்கிறாள். கள்ளி. எதிர்பார்த்திருக்கிறாள்.

"மூன்று.." என்றேன்.

கண்களைச் சுருக்கிக்கொண்டு பாரதியார் புத்தகத்தை மட்டும் புரட்டிப் பிரட்டிப் பார்த்தாள். பிறகு கவிதைகளிருந்த என்வலப்பை எடுத்து ஹான்ட் பாக்குக்குள் வைத்தாள்.

ஏதேதோ பேசினோம். பிறகு புறப்பட்டோம். காருள் என் அருகில் நெருங்கி அவள் அமர்ந்து கொண்டது போலத்தெரிந்தது...

அவளது வீட்டருகே காரை நிறுத்தினேன்.

"உங்களிட்டை மன்னிப்புக் கேக்கவேணும்..."

அந்தக் கண்கள் ஈரப்பட்டிருப்பது மங்கிய வெளிச்சத்திலும் எனக்குத் தெரிந்தது.

"ஏன் ?"

"வருசக்கணக்காக இதை உங்களுக்கு சொல்லவேணும் என நினைச்சனான்... இப்ப சொல்லுறன். நீங்கள் எனக்கு முந்தி கவிதையள் தரேக்கை அவர்தான் என்னை லவ் பண்ணிக்கொண்டிருந்தவர். நானில்லை. அப்பிடி ஒருத்தர் எனக்கு இருக்கிறார் எண்டு ஏனோ நானும் உங்களிட்டை அப்ப சொல்லேல்லை. அப்பவெல்லாம் உங்கட பிரன்ட்ஷிப்தான் எனக்கு ஒரு தனிச் சுகமாய் இருந்தது. ஆனாக்கூட உங்களைப்பற்றித்தான் என்னால ஒருத்தருக்கும் சொல்ல முடியேல்லை. அதுதான் ஏனென்டுதான் இதுவரை தெரியேல்லை."

'அது' ஏனென்று எனக்குத் தெரியுமடி என்று கத்தவேண்டும் போல இருந்தது. கத்தவில்லை.

"நீர் எதையும் சொல்லத்தேவையில்லை. எனக்கு அதெல்லாமே விளங்குது. உம்முடைய அவரைப்பற்றி தெரிஞ்ச பிறகுங்கூட நான் உமக்கு கவிதையள் தந்தனான்தானே... ஏனென்டா நான் உமக்கு எதையாவது தரவேண்டும் எண்டுதான் முதல் துவக்கமே அடிமனதால ஆசைப்பட்டனான். என்ர அந்த ஆசையை வேற ஆராலும் நிப்பாட்ட முடியாது. என்ரை கவிதைகள் காதலைக் காட்டுதெண்டு உம்மட வீட்டில நினைச்சிடுவினமோ எண்டு மட்டும்தான் நான் அடிக்கடி பயந்தனான். ஆனா என்னாலை உமக்குத் தராமல் இருக்க முடியாமல் போச்சு..."

அமைதியாயிருந்தாள்.

"நான் உம்மை விரும்பினனான். உண்மையாகவே விரும்பினனான். அந்த உணர்ச்சிக்கு காதல், லவ் எண்டெல்லாம் வேற பெயருகளும் இருக்கு எண்டு என்ரை மனம் சொன்னாலுங்கூட பதிலுக்கு நீர் என்னை லவ் பண்ணவேணும் எண்டு நான் பெரிசா நினைச்சது கிடையாது. உம்மை நான் லவ் பண்ண எண்டு ஆசையாயிருந்தது. பண்ணினனான். அவ்வளவுதான்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ம்.. அது பழைய கதை...'

'உங்களிட்டை ஒண்டு கேட்டா கோபிக்க மாட்டீங்களே?'

'ஏன் உம்மட்டை என்ரை மனத்தை நான் சொல்லேல்லையெண்டு கேக்கப்போறீர்போல..? இஞ்சை பாரும்.. ஒருவேளை நான் அதை சொல்லி நீர் மறுத்திட்டா? அதைத்தான் என்னால தாங்கமுடியாது. என்னைப் பொறுத்தவரை நீர் என்னை விரும்புறதைவிட நான் உம்மை விரும்புறதைத்தான் பெரிசா நினைச்சனான்'

இருவரும் ஒன்றும் பேசாமல் அமர்ந்திருந்தோம்.

கத்தியால் வெட்டக்கூடிய களி போன்றதொரு மௌனம்.

'சரி.. இப்ப நான் உம்மை ஒன்று கேட்டா கோபிப்பீரோ?'

'இல்லை.'

'உம்மை நான் லவ் பண்ணுறன் என்று பதினைந்து வருசத்துக்கு முன்னம் சொல்லியிருந்தா நீர் எனக்கு ஓம் எண்டு சொல்லியிருப்பீரோ?'

'இல்லை.'

எனக்குத் தெரியுமடி அது ஏனென்று...

இறங்கிக் கொண்டாள்.

அதன்பின் ஒருவாரம் நான் போன் பண்ணவில்லை. நான் ஏன் போன் பண்ணவேண்டும்...? அவள் போன் பண்ணினால் என்ன குறைந்தா போய்விடுவாள் என்று நினைத்துக்கொண்டேன்.

ஊஹூம்... ஒருவாரமாயிற்று. தாங்க முடியவில்லை. போனைக் கையில் எடுத்தேன்.

'ஹலோ'

'ஹாய்'

'எப்பிடி இருக்கிறீங்க?'

'உம்மோட பேசமாட்டன்' என்றேன்.

'நீங்களே போன்பண்ணிட்டு பேசமாட்டேன் எண்டா..?'

'நீர் ஏன் போன் பண்ணவேயில்ல..'

'நீங்க பண்ணியிருக்கலாம்தானே'

'உண்மைதான்.. பண்ணேல்லை..'

'பிறகென்ன...'

'நான்தான் எப்பவுமே முட்டாளா போக வேணுமோ..? நீர் இப்பவாவது எனக்கு நீரா போன் பண்ணக் கூடாதோ..? கிட்டாதாயின் வெட்டென மறக்க வேண்டியதுதான்..'

'கொஞ்சம் பொறுங்கோ... இவ்வளவு நாளும் நீங்க பேசியதுக்கும் இண்டைக்கு பேசுறதுக்கும் குரலில ஒரு வித்தியாசம் தெரியுது. ஒன்று சொல்லுறன் கோபிக்க மாட்டியளே.. எதையோ நீங்க மனதுக்குள்ள வைச்சுக்கொண்டு பேசுறமாதிரி தெரியுது...'

உண்மைதானே..? என் குரல் தானாகவே ஒடுங்கிக்கொண்டது. இவள் என்ன எனது காதலியா அல்லது மனைவியா..? நானாகத்தான் இவளிடம் மயங்குகிறேன். நெருங்குகிறேன். இவள் எனக்கு அன்னியம் என்பதை மறக்காதே மடைப்பயலே.. கிடைத்த சுதந்திரத்தை காப்பாத்திக் கொள்ளு. குளிக்கப்போய் சேறு பூசாதே தம்பி...

அதன்பின்பும் பேசினோம். ஒருமணி நேரம் பேசினோம்.

பேச்சுமுடியும்போது அழைத்தாள்.

'நாளைக்கு பொங்கல். நல்லநாள். எங்கட வீட்டுக்கு சாப்பிடவாங்கோ...'

கதவைத் தட்டினேன். திறந்தாள்.

கோட்டைக் கழற்றிவிட்டு உள்ளே ரூமில் நுழைகிறேன்.

உள்ளே டிவி பார்த்தபடி ஒரு குழந்தை அமர்ந்திருந்தது.

புருவத்தை உயர்த்தியவாறு குழந்தையை பார்த்து சிரித்து ஹாய் என்கிறேன்.

'என் மகள்...' என்கிறாள்.

குப் என என் முகம் வியர்ப்பது எனக்கே தெரிகிறது.

எதுவுமே நடக்காததுபோல சாதாரணமாக 'ஷேரிகா.. டிவி பார்த்தது போதும். உள்ளுக்குள் போய் படி..' என்கிறாள். குழந்தை குதித்து உள்ளே போகிறது. அதே மந்தஹாஸச் சிரிப்புடன் என்னை பார்த்து 'என்ன குடிக்கிறீங்க கோப்பி.. டீ.. கொக்கோ கோலா.. ஒரேஞ் ஜூஸ்.. வைன்.. பியர் ?'

தாங்கமுடியவில்லை.

'அடுத்த 'ஸப்ரைஸ்' எத்தினை மணிக்கு வீட்டுக்கு வரும்?' என்று கேட்டேன்.

'வராது.. ஆனா டிவோஸ் பண்ணிட்டன்.. அதுக்குப்பிறகுதான் கனடாவுக்கு வந்தனான்'

எழுதிக்கொண்டு போன கவிதையைக் கொடுக்கவில்லை. திருப்பிக் கொண்டு வந்துவிட்டேன்.

எதிர்பார்த்திருப்பாளோ..?

தூக்கத்தில் புரளும்போது போன் கிணுகிணுத்தது.

'நான்தான்..'

'நீயா... என்ன அதிசயமா முதல்முறையா..'

'நேற்று நீங்க ஒரு கவிதையும் தராமல் போயிட்டீங்க.. இரவு முழுவதும் நித்திரை வரவில்லை. என்னைப்பற்றி முழுசா உங்களிட்டை சொல்லாம விட்டுட்டனே எண்டு இப்பதான் பயமா கிடக்கு...'

சாத்திரம் பேசுகிறாய் கண்ணம்மா சாத்திரமேதுக்கடி?

குரலை இறுக்கிக்கொள்கிறேன்.

'பதினைஞ்சு வருசத்துக்கு முன்னம் நான் சொல்ல நினைச்சதை, சொல்லாம விட்டதை இப்ப உமக்கு சொல்லலாமோ?'

மௌனம் அவளது பதில்.

'உமக்கு ஒரு அப்பாவா அண்ணனா நண்பனா இருக்க நான் ஆசைப்படுகிறன்... எல்லாத்துக்கும் மேலா சாகிற வரைக்கும் உம்மட கணவன் எண்ட பேரோடை உம்மோடை சேர்ந்து வாழ ஆசைப்படுகிறன். உம்மட பதில் என்ன?'

மீண்டும் மௌனம்.

'பேசாம இருந்தா என்ன? ஓமோ.. இல்லையோ?'

'ஓ...' மெல்லிசாக அவள் குரல் ஒலித்தது.

அப்பாடா... என் கண்கள் பனித்தன. இந்தக் கர்ணனுக்கு ராஜ்யம் கிட்டிவிட்டது. இருந்தாலும் இவன் மனதில் வடுவிருக்காதா...

கேட்டேன்.

'ஆனா இண்டைக்கும் என்ரை சாதி மாறேல்லையே. அண்டைக்கு இருந்த அதே சாதிதான்... இப்ப உம்முடைய சாதிகூட மாறேல்லை...'

'எல்லாம் மாறிட்டுது. இப்ப பெண் சாதி...!' என்றது மறுமுனை.

■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# காலமே க(வி)விதை

இக்கட்டுரைத் தொடர் முழுக்க புதுக்கவிதைகள் பற்றியே சொல்ல வேண்டிப் போய்விட்டது. ஆனாலும் இத் தொடர் புதுக் கவிதைகளின் பிரச்சாரமல்ல– அப்படிச் சொல்கின்ற போது மரபுக்கவிதையை தூக்கி வீசிவிடும் முயற்சியும் அல்ல என்பதையும் சொல்ல விழைவது புரியாதல்ல.

மேலும், இம் முயற்சியில புதுக்கவிதைகள் பூரணமான விளக்கத்துக்குட்பட்டுவிட்டதென்றோ, இவ்வளவுதான் புதுக் கவிதையென்றோ சொல்வதற்கு மில்லை, என்னால் முடிந்தது இவ்வளவுதான்.

புதுக் கவிதைகள் பற்றி சரியான அறிமுகம் பலருக்கு கிடைக்காததும், எனக்கும் இருந்திருந்த பல ஐயங்கள் இன்னும் சிலருக்கும் இப்போ இருப்பதை அறிந்து கொண்டதும், நான் சேகரித்துக் கொண்ட தகவல்களை எங்காவது சேர்த்து விடவேண்டுமென்ற தவிப்புடன் சங்கமித்தால இத்தொடர் கால்கோளிடப்பட்டது.

இவ்விடத்தில் இதற்கு ஊக்கங் கொடுத்த தாயக ஆசிரியர், சக எழுத்தாளர் சி.கிருஸ்ணராஜா ஆகியோர் நினைக்கப்படுகின்றனர்.

இத் தொடரில் எம் கவிஞர்களின் ஆக்கங்கள் உதாரணமாகவேனும் காட்டப் படவில்லை என்ற ஆதங்கம் உங்களுக்கு வந்திருக்கும் என்பது தெரியும், இருந்தும் இத்தொடர் கவிதா விமர்சனமாக மாறிவிடக் கூடாதே எனும் கவனமும் எது எதை தெரிவு செய்வதோ எதை எதை வாங்கிக் கட்ட நேரிடுமோ எனும் தயக்கமும் கூட இவ்விடத்தில் தலையை நுழைக்காததன் காரணம்.

இத் தொடர் புதுக் கவிதை பற்றிய கடலின் ஒரு துளி மட்டுமே– அணை கட்டிய போது அணிலின் பங்கு எனது.

எனக்குக் கிட்டியவற்றையே உங்களுக்குச் சேர்த்திருக்கிறேன்– அது உங்களுக்குப் போதாது என்பது எனக்குத்தெரியும். – நான் என் செய்ய?

இது ஒரு படியாகக் கூட அமைந்திட்டால்........

இக்கட்டுரைத் தொகுப்பு பலரையும் போய்ச் சேர வேண்டுமெனவே நோக்கங் கொண்டிருந்த போதிலும் சேர்ந்ததோ சேர(வி)ல்லையோ.. யாரறிவார்?

இங்கு பலருக்கு கவிதை பற்றிய ஆவல் இல்லை. அறிவதில் கூடத் தயக்கம்– "மரபு" கொடுத்த பயம் காரணமோ? –இதுபற்றி முன்பொரு முறை (ஐந்தாம் ஆண்டில் தாயகம்) தாயக ஆய்வொன்றிலும் குறிப்பிட்டிருந்தேன்.

அவர்களுக்காகவும்.......

(அவர்களுக்கு இது புதுக்கவிதைகள் பற்றிய

**அருண்**



ஆன்மீகம்



ஒலிபரப்புத்துறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அறிமுகமாகக் கூடக் கருதப்படக் கூடியதே)

சிலர் புதுக்கவிதை மீது காரணங் காணமுடியாத காழ்ப்புணர்வு கொண்டிருக்கின்றனர். இவர்கள் மரபை தலைமேல் வைத்துக் கூத்தாடும் ரகமோ?

அவர்களுக்காகவும்....

(புதுக்கவிதைகளின் தாற்பரியங்கள் தெரியக் கிட்டும்போது சீர்தூக்கிப் பார்ப்பதும் ஒருவகையில் ஆரோக்கியமானதே)

சிலர் புதுக் கவிதையென்றால் புரியாமல் எழுதுவதென்றும், வசனத்தை துண்டாடிப் பரப்பி விட்டு கவிதை என்கிறார்களே என்றும் வசன கவிதைகளும் புதுக் கவிதைகளே என்றும் தம் இஷ்டப்படி கருத்து வைத்துக் கொண்டுள்ளனர்.

அவர்களுக்காகவும்....

சிலர் எதை என்னமாதிரி யெனினும் எழுதி புதுக் கவிதைகளுக்குள் கவிதைகளாய் புகுத்தி விடலாம் என எண்ணித் தவறாய்ச் செயற்படுகிறார்கள்.

அவர்களுக்காகவும்........

சிலர் எல்லாவகையிலும் ஆற்றல் இருந்தும் கவிதை எழுதத் தயக்கங் காட்டுகின்றனர். ஏனெனில் கவிதை எழுதுவதென்பது ஏதோ பிறவியில் இருந்தே கிடைத்த வரப்பிரசாதம் எனத் தவறான எண்ணத்தில் உள்ளனர். இது ஒருவகையில் தாழ்வு மனப்பான்மையே. இவர்கள் தாம் பெற்ற ஊக்கத்தைக் கொண்டு கவிதை தர வேண்டும்.

அவர்களுக்காகவும்.....

சிலர் சில தகவல்கள் கிட்டாமல் தமக்குத் தெரிந்தவற்றில் மட்டுமே திரும்பத் திரும்ப அதே பாணிக் கவிதைகள் செய்து கொண்டிருக்கிறார்கள்

அவர்களுக்காகவும்...

(சில தகவல்கள் சில தூண்டற்பேறுகளைத் தந்திருக்கலாம்)

சிலர் தாம் படைத்துக் கொட்டுவனவே மா கவிதைகள் எனும் நினைப்பிலும் உள்ளனர். இது மனவருத்தப்படக் கூடியது.

அவர்களுக்காகவும்....

சும்மாவே இருந்திருக்கும் சிலரை உசுப்பி கவிதை எழுதும் ஆற்றலைக் கிண்டிவிட வேண்டுமென்பதற்காகவும்....

ஆக இவை எல்லாவற்றுக்குமாகவே இத் தொடர் கட்டுரை நோக்கியே கொண்டு வரப்பட்டது.

கவிதை பற்றிய ஆர்வம் எல்லோருக்குமே இருப்பதில்லை, உண்மையாய் இருப்பவர்கட்கு இது ஏதோ ஒரு அளவிலாவது, ஏதோ தூண்டுதலை ஏற்படுத்தியிருந்தால்.. சந்தோசம்..

தாயகத்தின் அரும(ரு)ந்த(ான) பக்கங்களை வீணடித்ததாக எவராலும் கருதிக் கொள்ளப்படும் பட்சத்தில்.. மன்னியுங்கள்.

இதே இடத்தில் இன்னுமொன்றையுங் கூறிக் கொள்ள வேண்டும், "புதுக் கவிதை" எனும் பெயர் பற்றி-இது மரபில் சாராத கவிதைகட்குக் கொடுக்கப்பட்ட பெயர் மட்டுமே "கீரி மலை" எனப்படுவது போல அதனால் இக் கவிதை பழையதாகும் போது பெயர் பொருந்துமா எனக் கேட்கக் கூடாது. "கீரி மலை" என்பது மலையின் பெயர் அல்ல என்பது போல் இதுவும்

ஓசை நயம், தாளலயம் இருந்தும் நாட்டார் பாடல்களும், தாலாட்டுப் பாடல்களும் மரபில் சேர்த்துக் கொள்ளப்படாதனவே. ஏனெனில் இசை நயம் மட்டும் மரபைத் தீர்மானிப்பதில்லை. அதே போல மரபு தவிர்த்ததால் அவை புதுக் கவிதைகளுமல்ல, ஏனெனில் மரபு புறக் கணித்தன எல்லாம் புதுக் கவிதைகளும் அல்ல.

புதுக் கவிதைகளுக்கென்றும் சில பண்புகளும் தாற்பரியங்களும் உண்டு. இவையே இதுகாறும் சொல்லப்பட்டிருந்தன.

அப்பாடா!




**பத்திரிகைத்துறை**




**வர்த்தகம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# யாழ்ப்பாணக் கோட்டையில் தோண்டிய கிணறு

## சிதம்பரம் ஞா.வடிவேலனார்

ஒல்லாந்துக்காரர்கள் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலத்தில் ஓர் கற்கோட்டையைக் கட்டினார்கள். அந்தக் கோட்டை தீவுப்பகுதி கோவிற்பற்றை இணைக்கின்ற பண்ணைத் தாம்போதியை அண்டின பிரதேசத்தில் இருந்தது. போத்துக்கீசரை விட ஒல்லாந்து தேசத்தார் நல்லவர்களாம். முப்பத்தேழு வருசம் தானாம் போத்துக்கீசர் இலங்கையை ஆண்டது. அந்தக் காலப்பகுதியில் அவர்கள் செய்த அநியாயம் கொஞ்ச நஞ்சமில்லையாம். ஆனா ஒல்லாந்து தேசத்தார் பறுவாயில்லையாம். இவர்கள் நூற்று முப்பத்தெட்டு ஆண்டுகள் இலங்கையை ஆண்டிருக்கினம். இவர்களின் ஆட்சிக்காலத்தில் தானாம் ஈழத்தில் இலக்கிய வளர்ச்சி வீறுடன் வளர்ந்தது என்று முனைவர் க.செ. நடராசா தனது "ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி"யில் சொல்லியிருக்கிறார்.

இப்படி ஒல்லாந்துக்காரர் மனுசரை மதிக்கிற பழக்கம் உள்ளவர்களாம். தமிழ் சனங்களுடன் அன்னியயொன்னியமாக வாழ்ந்தவர்களாம். தமிழன் விடுற கோணங்கி விளையாட்டுக்கள் எல்லாத்துக்கும் இவர்கள் ஓ. கேயாம்.

இதில் ஒரு ஒல்லாந்துத்துரை யாழ்ப்பாணத்து பனங்கள்ளுக்கும் கரையூர் விளாங்கொடுக்கா நண்டுக்கும் தன் உயிரையே கொடுப்பானாம். பங்குனி மத்தியான வெய்யிலுக்க தட்டக்கரைக் கரையில குந்தியெண்டு பனங்கள்ளை பிளாவில ஊத்தி ஊத்தி இவன் குடிச்சு சொர்க்கலோகம் போவானாம். ரேஸ்ருக்கு கொக்கறை, பன்னாடைகளை போட்டு எரிச்சு நண்டு சுட்டுத் தின்னுவானாம். ஆள் கொஞ்சம் வளர்த்தியாயும் சிகப்பாயும் பார்க்கிறதுக்கு இலட்சணமாயும் இருப்பானாம். சத்திரச்சந்தி மில் ஓனர் பொன்னம்மாவின்ர தாய்வழிப் பாட்டியைத்தானாம் இவன் வைச்சிருந்தவன்.

செங்கையாழியான் சொல்லுவார்: மில் பொன்னம்மாட்ட பல ஊர்தேசங்களிலும் இருந்தும் பலர் முறை வைத்து சரசமாட வண்டி கட்டிக்கொண்டு இரவு வழிய வாறதாம் எண்டு. இந்தக் கிழவிதானாம் அந்தக் கால சதிர் காறிகளிலேயே வடிவான ஆளாம். தலைமயிரின்ரை நீளம் முளங்காலுக்கு கீழ நிற்குமாம். இவாவை வைச்சிருந்த ஒல்லாந்துத்துரை சொல்லுவானாம் தன்ரை கோச்சு வண்டில் அராபிக் குதிரையின்ர வால் உன்ர தலைமயிரிட்ட பிச்சை வாங்கவேணும் எண்டு. அப்படி மனிசி வடிவு

பொன்னம்மா மில் வருசம் 330 நாளும் ஒரே குத்தலும் அரைத்தலுமாகத் தானாம் இருக்கும். பிறகு ஏதோ போதாக் காலத்துக்கு பொன்னம்மாவின்ர பேரன் கந்தையாச் செட்டியார் காலத்தில் விழுந்து போச்சாம். அந்த விழுக்காட்டுக்கு காரணம் வெள்ளைக்காறன்ர ஆட்சியாகவும் இருக்கலாம். வெள்ளைக்காறன் ஊரெல்லாம் பாணைப் போட்டான். அதோட கூத்தையும் போட்டான். ஆனா ஒல்லாந்துக்காரன் தமிழன் மாதிரி முறை வைத்துத்தான் போனான்.

கந்தையாச் செட்டியாற்றை பொருளாதார வீழ்ச்சியை யாழ்ப்பாணத்து பெரிய கடைச் சந்தி வழிய உலாத்தியண்டு திரிந்த கடைச்சாமி கண்டு இரங்கி ஒரு இரும்புத் துண்டைச் செட்டியாரிடம் கொடுக்க அது பொன்துண்டாக மாறியதாம். பிறகு கந்தையாச் செட்டி ஓகோ என்று பழையபடி எழும்பீற்றாராம். இப்படி ஆத்மஜோதி நா. முத்தையார் தன்ர "ஈழத்துச் சித்தரில்" பொன்னம்மா பரம்பரை பற்றி ஒரு இடத்தில சொல்லிறார்.

மில் பொன்னம்மாவின்ர பேத்தியை வைச்சிருந்த ஒல்லாந்துத்துரை தன்னிடம் வேலை பார்த்த சில தமிழர்களிடம் சொன்னாராம், ஒரு கிணறு கோட்டையினுள் கிண்ட வேண்டும் என்று அதற்குத் தமிழர்கள் சொன்னார்களாம் "கிணறு கிண்டுறது பெரிய வேலையில்லை. ஆனால் தமிழ் முறைப்படிதான் கிணறு வெட்ட வேணும். சாத்திரத்தில் வல்லவர்களின் உதவியுடன் முதலில் கிணறு எங்க வரவேண்டும் என்பதனை பிடிக்க வேண்டும். அப்படி பிடிக்காமல் நாங்கள் நினைத்தபடி கிண்டினால் கிணறு வெட்ட பூதம் வந்த மாதிரிப் பூதமும் வெளிக்கிட்டு எங்களையும் விழுங்கிப் போடும்" என்று.

அந்த ஒல்லாந்துத்துரை தமிழ் ஆக்களின் பூதம் பேய், பிசாசுக்கதைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பொன்னம்மாவின் பேத்தி மூலம் கேட்டு ஏலவே அறிஞ்சு வைச்சிருந்தவன். ஆகையால் கிணத்தை சாத்திர முறைப்படியே பிடிப்பம் என்று சொல்லி விட்டான். இருந்தும் அவனுக்கு யாழ்ப்பாணத்தவரின் சாத்திரத்தின்ர சுத்துமாத்து தெரியும். எனவே இந்தியாவில் உள்ள ஒரு நல்ல சாத்திரக்காரனை கொண்டு வந்து ஒருவருக்கும் தெரியாமல் கிணற்றைப் பிடித்து விட்டு அவனை இந்தியாவிற்கு அனுப்பிவிட்டான். அந்த ஒல்லாந்துத்துரை பின் சில மாதம் சென்ற பின் தண்டோரா போட்டான், கோட்டைக்குள் கிணறு தோண்ட வேண்டும், எனவே கிணறு பிடிக்கத்தெரிந்த சாத்திரிமார் எல்லோரும் வந்து கோட்டைக்குள் கூடவும் என்று. பல சாத்திரிமார் வந்தார்கள். ஒல்லாந்துத்துரை ஒரு கதிரையை போட்ட விட்டு உக்காந்திருந்தார். வந்த சாத்திரிமார் ஒவ்வொருவரும் கிணறு இங்க வரும், அங்க வரும் என்று புலுடா விட்டனர். அந்த நேரம் ஒரு கிழவன் தீவுப் பகுதியில் கிடந்து அதைக்கப் பதைக்க வந்தார். வந்தவருடைய மடி நிறைய ஏடு. காதுல எழுத்தாணி சொருகியிருந்தது. ஒல்லாந்துத்துரையும் கிணறு பிடிக்கிற சாத்திரியை முஞ்சில தெரியும் என்ற மாதிரி இவரைக் கண்டவுடன் எழுந்து மரியாதை செலுத்தி கிணத்தைப் பிடி என்று சொன்னாராம். அந்தக் கிழவனும் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு "மகாகனம் பொருந்திய துரையவர்களே! நீங்கள் இருக்கும் கதிரைக்குக் கீழேதான் கிணறு இருக்கின்றது. கதிரையைத் தூக்குங்கள்" என்றாராம். ஒல்லாந்துத்துரையும் எழும்பி அந்தக் கிழவனுக்குக் கையைக் கொடுத்து குலுக்கி கட்டியணைத்தானாம். காரணம் இந்தியாவில் இருந்து வந்த சாத்திரி கிணறு பிடித்த இடத்தில் தானாம் துரை கதிரையைப் போட்டு அமர்ந்திருந்தாராம். இப்படி ஒல்லாந்தரையும் வென்ற தமிழன் பெயர் பரியாரி வைரவன் என்று அவரின் வழித்தோன்றல்கள் குலமுறை கிளர்த்தல் இன்றும் யாழ்பாண தீவுப்பக்க ஊர் ஒன்றில் உள்ளது. ■



# நிம்மதி

சண்முகம்பிள்ளை ஊரில் நயினாராக இருந்து நிலபுலங்களை ஆண்டு, ஏழை எளியதுகளை மேய்த்துக் கொண்டு திரிந்தவர். அங்கே அவரைக் கண்டால் இந்த ஏழை எளியதுகள் இடுப்பில் துண்டை வைத்து கை கட்டி 'ஐயா' என்று சொல்லும் போது நெஞ்சை நிமிர்த்தி நடந்தவர். காலம் மாறி.. மகன் கனடா வந்து சேர்ந்தான். ஊரில் உள்ள கிழவர்கள் எல்லாம் கனடா வந்து சேர்ந்ததும் தன்னை ஸ்பொன்சர் பண்ணிக் கூப்பிடும்படி தொல்லை கொடுத்து ஒரு மாதிரி கனடாவும் வந்து சேர்ந்தார். வந்ததும் முதன் முதலாக ஜீன்ஸ், வின்ரர் கோட் சகிதம் ஒரு போட்டோ எடுத்து தலைமாட்டில் வைத்தும் கொண்டார்.

அவருக்கு 'இங்கே கண்ட சாதியளும் வந்து கனடாவை நாறடிப்பது' பற்றி எப்போதுமே கோபம் தான். தனக்குள் புறுபுறுத்துக் கொண்டாலும் யாரும் அவர் கருத்துக்களைக் கணக்கில் எடுப்பதில்லை. எடுக்க எங்கே நேரமிருக்கிறது?

ஊரில் காலையில் எழும்பி காணியை சுற்றி வந்து சுகம் கண்டவரை பெரிய அப்பாட்மென்ட் பில்டிங்கில் பத்தாம் மாடியில் ஒரு கோழிக்கூட்டுச் சைஸில் உள்ள அறையில் அடைத்து வைத்தால் எப்படி இருக்கும்? அதை விட அவருக்கு கடுப்பு ஏற்றுவது இங்கே யார் எந்த சாதி என்று அறிய முடியாதிருப்பது தான். ஊரில் உள்ளது போல குறிச்சி அமைத்து கனடாவில் தமிழரை சாதி சாதியாக பிரிச்சால் தான் சரி என்பது தான் அவரது கொள்கை. யாரைக் கண்டாலும் 'தம்பி நீர் ஊரில எவடம்' என்று பூர்வீகத்தை அறியாவிட்டால் அவருக்கு நித்திரை வராது.

சண்முகம்பிள்ளை ஒருநாள் எலிவேட்டரில் அவரது ஊரைச் சேர்ந்த கந்தப்பிள்ளையின் மகன் வடிவேலுவைக் கண்டார். 'எடே, நீ கந்தப்பிள்ளையின்ரை மோன் அல்லே'

'ஓமோம்'

'நீங்கள் எல்லாம் இங்க வந்திட்டியள்' சண்முகம்பிள்ளை நக்கலாகத் தான் கேட்டார்.

'ஏன் நாங்கள் வரக் கூடாதோ?' வடிவேலு கடுப்போடு கேட்டான்.

'எங்க இந்தக் கட்டிடத்திலேயோ இருக்கிறாய்?' சண்முகம்பிள்ளை பேச்சை மாத்தினார்.

'ஓமோம், பதினெட்டாம் மாடியில'

'கொப்பர் என்ன, இப்பவும் மரம் ஏறுறாரோ? ஆளுக்கு வயதும் போட்டுது'

'இப்ப அவை மரம் ஏறுறேலை. அவரை ஸ்பொன்சர் பண்ணியிருக்கிறன். அவரும் அம்மாவும் அடுத்த மாதம் வருகினம்'

சண்முகம்பிள்ளைக்கு ஷொக் அடித்தது.

போனார்.. வீட்டுக்கு.. 'நாங்கள் இப்ப வீடு மாற வேணும்'

'இதென்ன ஐயா, திடீரெண்டு மாறிறதெண்டா எங்க போறது'

'எனக்கு அதெல்லாம் தெரியாது, மாற வேணும். அவ்வளவு தான்'

'என்ன நடந்தது உங்களுக்கு?'

'ஊரில எங்களுக்கு கீழ இருந்தவங்கள் எல்லாம் இப்ப எங்களுக்கு மேல் மாடியில இருக்கவோ. அவன் எங்கட மரம் சீவின கந்தப்பிள்ளை பதினெட்டாம் மாடிக்கு வாறான், நான் பத்தாம் மாடியில அவனுக்கு கீழ இருக்கவோ'

★ ★ ★

இப்போது தந்தையின் தொல்லையால் மகன் வீடு ஒன்றில் பேஸ்மென்ட் வாடகைக்கு எடுக்க, நயினார் 'எப்பிடியெண்டாலும் எங்கட சாதியான்ரை வீட்டில நிலத்துக்குக் கீழ இருந்தாலும் பரவாயில்லை. அவங்களுக்கு கீழ இருக்கக் கூடாது' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி தூங்கிக் கொண்டிருக்கிறார்.

## பென் கூரியன் குட்டிக்கதைகள்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ரொரன்ரோவில் கலண்டர்கள்

# • சமர்

சிவப்பிரகாசம்

கோவில் கட்டினால் பிரச்சனை. கோவில் கட்டாதே என்றால் பிரச்சனை. நல்ல முகூர்த்தத்தில் கலியாணம் செய் என்றால் பிரச்சனை. வேண்டாம்...... 'வீக்கெண்ட்' செய்யலாம் என்றாலும் சிடுசிடுப்பு. பஞ்சாங்கம் சரி என்றால் பிரச்சனை. பஞ்சாங்கம் பிழை என்றாலும் கோபம். கருத்துகளுக்கு கதவடைப்பு செய்யும் ஒரு இனம் தமிழ் இனமாய் அமைந்து விட்டது. பலே ! அதுவும் ஒரு வளர்ச்சிதான்?

அந்த வரிசையில் இன்று கலண்டர்கள். 'எதுவுமே தனியுடமையாய் அமைந்தால் தன் தரம் குறைந்துவிடும் என்பது உண்மை' என்று நினைத்து பல பெண்களை ஒருவன் திருமணம் செய்து கொண்டானாம். அந்த மாதிரி, போட்டி என்பது பெட்டிக்கடை தொடங்கி கடவுள் வரை வந்த இந்தக் காலத்தில் கலண்டர்கள் வந்தது அதிசயம் இல்லை. ஒருவகையில் பல கலண்டர்கள் வருவதும் நல்லதுதான். ஆனால அநதக் கலண்டாகள வெறும திகதிகளை மட்டும் தாங்கி வருவதானால் எத்தனையும் வரட்டும். அதில் கருத்துச் சொல்லுவது தேவையல்ல. ஆனால் இந்துக் கலண்டர்களில் பல விஷயங்கள் இந்துக்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் காரணிகளாக இருக்கிறது என்பதை பலரும் அறிவோம். நட்சத்திரம் போன்ற விஷயங்கள் பொருத்த-முகூர்த்த-விரத-சிரார்த்த-விஷயங்களில பாதிப்புகளை ஏற்படுத்தும். இந்த முக்கியத்தை அறிந்திருந்தும் கலண்டரில் அவ்விபரங்களை தரும்போது சரியானது என்று கருதப்படும் 'பொதுமை' ஒன்றை தருவதற்கு கலண்டர் வெளிவிட்டவர்கள் எவ்வளவு துாரம் முயற்சி செய்தனர் என்பது கேள்விக்குறி. 'இவனை என்ன கேட்பது' என்ற தன்மை இல்லாமல் இந்து மதத்துக்காக, மக்களுக்காக 'எவரையும் எதையும் இறங்கிக் கேட்கலாம்' என்ற பக்குவம் இருக்க வேண்டும். வருமா?

விமர்சனங்கள் சிலவேளை முயற்சிகளின் உற்சாகத்தைக் குறைக்கலாம் அல்லது வர்த்தக ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பது கருதி 'கலண்டர் சீசன்' முடிந்த பிறகு இது எழுதப்படுகிறது. அதுவும் பாவனையாளர் பலருக்கு ஏற்பட்ட ஐயத்தினை நீங்க எவரும் முன்வராது மேலும் தெளிவற்ற நிலையை உருவாக்கி இருப்பதால். 'அது சரி, விமர்சனம் எழுத உமக்கு என்ன அருகதை' என்று விமர்சனம் பிழையானதே.

வழமையாக இலங்கையில் இருந்து வரும் கலண்டர்களை விட கனடாவில் இருந்தும் கலண்டர்கள் இம்முறை வெளிவந்துள்ளது. வழமைபோல கௌரி மங்கள சேவையின் மாதக் கலண்டர். அதைவிட இம்முறை ரொரன்ரோவுக்கு என்று கணித்து வாக்கிய பஞ்சாங்க தினக் கலண்டர்கள் இரண்டு. 'ஸ்ரீநிவாஸ்', 'கௌரி' என்பவை. இக்கலண்டர்களில் வெளித்தோற்றம் பற்றியோ, அமைப்பு, சுவாமிப் படங்கள் பற்றியோ இங்கு விமர்சிப்பது நோக்கமல்ல. வெளித் தோற்றங்களைக் கண்டு மயங்குதலிலும் உள்ளடக்கமே அவசியம் எனக் கருதப்படுகிறது. ஆனால் பொதுவாக பொதுமக்களைப் பொறுத்தவரையில் வெளிப்படத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது சகஜம். காரணம் என்னவெனில் இலங்கையில் வெளிவந்த வாக்கிய கலண்டர்கள் 'முக்கிய உள்ளடக்கத்தில்' வேறுபடுவது மிகமிக அரிது. எல்லாக் கலண்டர்களும் இலங்கையில் ஒரே ஒரு வாக்கிய பஞ்சாங்க அமைப்பை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் கனடாவில் நிலமை வேறு. உள்ளே உள்ள கணிப்புகளில் இரண்டு கலண்டர்களுக்கும் வேறுபாடு உண்டு.

இராகு காலம், சுபநேரம் போன்றவற்றில் சில நிமிட வித்தியாசமும், நட்சத்திர-திதி கணிப்புகளில் சில மாதங்களில் சிறிய வித்தியாசமும், வேறுசில மாதங்களில் பெரிய வேறுபாடும் காணப்படுகிறது. இதற்கான காரணங்களை இரண்டு கலண்டர் கணித்தவர்களையும் கேட்டேன். அவர்கள் கூறும் காரணங்களைப் பார்ப்போம்.

'ஸ்ரீநிவாஸ்' கலண்டர் கணித்தவரின் கருத்துப்படி ..... 'கணிப்புகளின் அடிப்படை அலகான நாடிவிநாடியை மாற்றும்போது சூரிய உதயத்தை கூட்டி மணி-நிமிடம் பெறப்படுவது இலங்கையில்

# காகிதத்தில் அசிங்கம்

கேட்கிறீங்களா!

'பால் கறுப்பு நிறம் அல்ல' என்று கூற கலாநிதிப் பட்டம் வேண்டும் என்று யாராவது கருதினால் இவ் செய்யப்படுகிறது. அவ்வாறு செய்யதால் ஒரே கணத்தில்(நேரம்) உலகின் வெவ்வேறு பாகங்களிலும் கிரகங்களின் பாகை(இடம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கணிப்புகளைத் தந்த முனிவர்கள் கண்ணீர்

வேறுபடும். ஆனால் அவ்வாறு நிகழ முடியாது. எனவே சூரிய உதய முறை தவறானது. முன்ப வருஷப்பிறப்பு விவகாரத்தில் இதைத் தெளிவாக விளக்கியிருக்கிறேன். பல இந்தியப் பஞ்சாங்கம்–கலண்டர்கள் பாவிக்கும் 'ஸ்டாண்டட் மணி' முறையே சரியானது' என்று கூறி தான் அந்த முறையில் சமஸ்காரம் செய்ததாயும் கணிப்புகள் துல்லியமான ஸ்புட முறையை அனுசரித்தது என்றும் கூறினார்.

'ஸ்ரீநிவாஸ்' கலண்டர் ஸ்புட வாக்கிய முறையில் தயாரிக்கப்பட்டு இந்திய மரபுப்படி தேசாந்தர சமஸ்காரம் செய்யப்பட்டது போல காணப்படுகிறது. ஸ்புட முறையில் கணிக்கப்பட்ட கலண்டர் இது என்று கூறப்பட்டுள்ளது. பொதுவாக, கலண்டர் கணிப்புகள் 'பஞ்சாங்க' வாக்கியத்தை அடிப்படையாக கொண்டன. அதனால் அவை ஸ்புட கணிப்புகளில் இருந்து சிறிய வேறுபாடு கொண்டிருக்கும். ஸ்புடம் என்பது இதுவரை காலமும் நுட்பமான ஜாதகக் கணிப்புகளுக்கே பயன்படுத்தப்பட்டது (ஆதாரம்: பாவாமிருதம், ஜாதக பாஸ்கரன், பரகிதம்(இரகு), வானசேகரம், பாஸ்கர பாவகம்).

பஞ்சாங்க, கலண்டர்களுக்கு ஸ்புடத்தைப் பயன்படுத்தலாமா? என்ற கேள்வி பலகாலத்தின் முன்னரே எழுந்தது. எப்படி ஜாதக ஸ்புடக் கணக்கும் பஞ்சாங்க கணக்கும் வேறுபடலாம் என்ற கேள்வியும் எழுந்தது. குழந்தை ஜெனனம் ஆகும்போது கிரகங்கள் நிற்கும் பாகையை அளக்கும் முறையும், உலக வழக்கத்துக்கான திதி, நட்சத்திரம், விரதம் ...... போன்றவற்றை அறிவதற்கு கிரக பலங்களை காண உபயோகிக்கும் முறையும் வேறாக அமைய வேண்டும் என்பதே இவற்றை எழுதி வைத்தவர்களின் நோக்கமாகும் என்று சமாதானம் கூறப்பட்டது (ஆதாரம்: கேரளத்துருவ உரை). ஆனால் அதுபற்றி எல்லோரும் உடன்படவில்லை. அது ஒரு புறம் இருக்க.

சூரிய உதய முறையில் ஒரு மரபும், பஞ்சாங்க கணிப்பில் ஒரு மரபும், தேசாந்தர சமஸ்காரத்தில் ஒர மரபும், விரத – சிரார்த்த திதி நிர்ணயத்தில் ஒருமரபும் .... இவ்வாறாக பல விஷயங்கள் கலந்துள்ளன.

சரியானது ஒன்றைத் தருவதற்கு பல முறைகள் கலப்பது தவறல்ல. ஆனால், அதற்குமுன் பல கால ஆய்வுகள், பல நூல் அறிவுகள் அவசியம். மரபுகள் மாற்றப்படும் போது அதற்கான காரணங்களை முன்வைப்பதும் மிகஅவசியம். பாதிய விளக்கங்கள், விவாதங்கள், கற்றோரின் கருத்துக்கள் தேவை. அதில் கலண்டர் கணித்தவர் கவனம் செலுத்தினாரா என்பதும் கேள்விக்குறி. இலங்கை மக்களே பாவனையாளர்கள் என்ற வகையில், அவர்கள் பாவித்த முறையில் இருந்து மாறுபட்ட ஒன்றை சமர்ப்பிக்கும் போது அது பற்றிய பூரண விளக்கம் தரப்படுவது அவசியமல்லவா?

கௌரி கலண்டர் கணித்தவரிடம் கேட்டபோது ......

'இலங்கை மக்கள் இத்தனை வருடங்களாக நம்பி வருவது யாழ்ப்பாண வாக்கிய மரபு. அந்த மரபையே இங்குள்ள பெரும்பான்மையான சோதிடர்கள் பயன்படுத்தி வருகின்றனர். பெரும்பான்மையான மக்களும் பயன்படுத்துகின்றனர். அந்த மரபை தவறு என்று சொல்லும் அளவுக்கு நான் இன்னும் வளரவில்லை. அவ் வழமைப் பிரகாரம் இந்த கலண்டர் கணிக்கப்பட்டுள்ளது. அதுவே இதன் தனிச்சிறப்பு. நாளுக்கு நாள் மரபை மாற்றுவது என்னைப் பொறுத்த வரையில் உசிதமாகத் தெனபடவில்லை' என்று பொருள்பட அவர் கூறினார்.

இலங்கைக் கலண்டர்கள் தேசாந்தர சமஸ்காரம் (இடவேறுபாட்டு மாற்றம்) செய்யப்பட்டால் கௌரி கலண்டர் அநேகமான இடங்களில் சிறிய வித்தியாசத்துடன் ஒத்துப் போகும். நட்சத்திரத்தில் இலங்கை வாக்கியத்துடன் சிறு வேறுபாடு பல நாட்களுக்கு ஸ்திரமாக உள்ளது. இதன் காரணம் பலத்துவயத்திலும் தினத்திருத்த சமஸ்காரத்திலும் 'யாழ்ப்பாண மரபு' சரியாக கடைப்பிடிக்கப்படாமையால் இருக்கலாம்.

திதியில் ஏற்படும் கணிசமமான வேறுபாட்டின் காரணம் ஊகிக்க முடியாது இருக்கிறது. வாக்கிய கணிப்பில் உள்ள வேறொரு முறையில் செய்யப்பட்டதாக இருக்கலாம். ஆனால் அது 'யாழ்ப்பாணக் கணக்கில்' வேறுபடுவதன் காரணத்தை அறிந்து நேர்ப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கலாமா?.

இவ்விரண்டு வாக்கிய கலண்டர்களையும் தவிர, மாத வாக்கிய பஞ்சாங்கக் கலண்டர் ஒன்று வெளியிடப்பட்டிருப்பதாக, கதைகள் உலவியதை அடுத்து அதைக் கணித்தவர் என்று கூறப்பட்ட கணிதரிடம் வினாவினேன். சிலர் வேண்டுமென்றே இந்தப் புரளியைக் கட்டவிழ்த்து விட்டதாயும், சும்மா இருந்த தன்னைப் பற்றி ஏன் இப்படிச் செய்தார்கள் என்றும் மிக மனம் நொந்து கொண்டார். வியாபார தந்திரங்களில் இப்படியான வதந்திகளைப் பரப்பி திசை மாற்றுவது கண்டிக்கத் தக்கது.

மொத்தத்தில், இவ்விரண்டு கலண்டரும் இலங்கைக் கலண்டர்களுக்கு அமைவாகக் கணிக்கப்படவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை ( இலங்கைக் கலண்டர் சரியா பிழையா என்ற விவாதம் இந்த விமர்சனத்தின் நோக்கமல்ல) இவ்விரண்டு தினக் கலண்டர்களும் கன்னி முயற்சியே. அதனால் சில குறைபாடுகள் ஏற்பட்டிருப்பது விமர்சிக்கத் தக்கதல்ல. அவை காலப்போக்கில் நிவர்த்தியாகும் என நம்புகிறேன்.. கனடாவில் வெளிவந்த 'கௌரி மங்கள சேவை', 'ஸ்ரீனிவாஸ்', 'கௌரி' என்ற கலண்டர்களில் முதலிரண்டும் ஐயர்கள் விளம்பரத்துக்காக வெளியிட்டவை போலத் தெரிகிறது. தினக்கலண்டர் இங்கு வெளியிட முயற்சித்தமை பாராட்டத் தக்கது. ஆரம்பத்தில் அங்கீகாரம் ஏற்படாவிடினும் எதிர்காலத்தில் கிடைக்கலாம். முடிந்த வரை மக்களைக் குழப்பாமல் இருப்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நல்லது. வியாபாரப் போட்டிக்காக ஒரு கலண்டரை மற்றொன்று கேவலப்படுத்துவதும் பத்திரிகைகளில் எழுதி சோதிடத்தையும் அதனுடன் சேர்த்துக் கேவலப்படுத்துவதும் இறுதியில் எதிலுமே நம்பிக்கை அற்ற தன்மையை ஏற்படுத்தும். இலங்கையில் எத்தனையோ கலண்டர்கள் வருகின்றது. ஒன்றுக்கு ஒன்று சேறுபூசவில்லை. இந்தியாவில் மாறுபட்ட கணிப்புகளுடன் பல கலண்டர்கள். அவர்கள் எப்போதாவது ஒன்றை ஒன்று வசைபாடிக் கொண்டதுண்டா? ஆனால் இங்கு கனடாவில் மட்டும் தளம்புவதற்கு காரணம் நிறைவு ஏற்படாமையோ? எதிரியைப் பழிப்பதால் தாம் செய்வதெல்லாம் சரி என்று யாராவது கருதினால் அது அவர்களின் அனுபவம் இன்மையே. திருக்கணித முறையில் தினக்கலண்டர் எவரும் இங்கே வெளியிடவில்லை. திருக்கணித முறையைப் பலர் இப்போது பின்பற்ற ஆரம்பித்திருப்பதால் அம்முறையிலான பஞ்சாங்கக் கலண்டர் ஒன்றை வெளியிட யாராவது முயற்சி செய்யலாமே.

இரு வாக்கிய கலண்டரும் வித்தியாசமான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டன. ஸ்புட வாக்கிய இந்திய மரபு ஒன்று: யாழ்ப்பாண பஞ்சாங்க வாக்கிய மரபு மற்றது. கொள்கை அளவில் எது சரியானது என்பதைக் கூறவேண்டும் என்றால் ....... பல சோதிட அறிஞர்களாலும் இது வரை முடிவு சொல்லப்படாதது அவ்விஷயம். பல தெளிவற்ற தன்மைகள் ........ குழப்பங்கள் போன்ற பிரமைகள் ......... தப்பான அர்த்தங்கள் ..... இவ்வாறு பலவும் சேர்ந்துள்ளது அவ்விஷயம். ஒரு சொல்லில் பதிலிறுப்பது அறிவற்ற செயல். அது பற்றி எழுதுவதானால் .......பல ஜோதிட விற்பனர்களின் கருத்துகளுடன் .... பல பக்கங்கள், பல வாரங்கள் ஆகும். 'தாயகம்' இடம் கொடுக்குமா என்பது சந்தேகம்!

ஹ சோதிடமே, நீ கனடாவில் வந்து மாட்டிக் கொண்டாய். அழிக்கப்படுமுன்னரே உன் கற்பை இழந்துவிடு. அதுதான் உன் கௌரவத்தைக் காப்பாற்ற ஒரே வழியோ?

■

*கவுன்ரர்பொயின்ற் சஞ்சிகையில் அக்டோபர்/நவம்பர் இதழில் விசேட நிருபர் எழுதிய இக்கட்டுரையின் முக்கிய பகுதிகள் இங்கே மறுபிரசுரமாகின்றன.*

# இனப்பிரச்சனை: ஒரு கடல் கடந்த பரிமாணம்

83 யூலைக்கு பின்பு ஆழமாகத் தனிமைப்படுத்தப்பட்ட தமிழர்கள் வெளியேறினர். இலங்கை அரசின் தொடர்ந்த குரூரச் செயல்களும் முட்டாள்தனமும் இந்த வெளிநாட்டுத் தமிழர்கள் மத்தியில் தமிழ் தீவிரவாதம் வளர வளமானதாக்கியிருந்தது. நீண்ட காலமாக புலிகள் நேராகவும் மறைமுகமாகவும் வெளிநாட்டுத் தமிழர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தியிருந்ததுடன் தன்னுடைய முத்திரையை அதில் பொறித்து ஒரு பல்தேசியக் கம்பனியின் அமைப்பாக மாற்றியிருந்தது. பாலசிங்கம் சொன்னது போல இது ஒரு மாபியா போன்ற அமைப்புத்தான். இது கலாசார நிகழ்ச்சிகள், மூதாட்டிகளின் பிக்னிக் முதல் கொண்டு பயமுறுத்தல், கொலை, ஆயுதக் கடத்தல், போதைப் பொருள் விற்பனை வரை உண்டு. போதைப் பொருள் கடத்தல் உலகளாவிய அளவில் காலத்துக்கு காலம் அக்கறையை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் இந்த அமைப்பு சில மதிக்கத் தக்க அமைப்புகளைக் கொண்டிருந்தது.

*ரொறன்ரோ: பாசிசக் கட்டுப்பாட்டின் இயக்கம்*

தமிழ் அதிருப்தியாளர்களினால் அமைக்கப்பட்டிருந்த தேடகம் நூலகம் எரிக்கப்பட்ட சம்பவம் ரொறன்ரோவில் பயமுறுத்தலும் பயங்கரவாதமும் எப்படியானது என்பதை கவனத்திற்கு கொண்டு வந்தது. இந்த சம்பவம் பாரிஸில் சபாலிங்கம் கொல்லப்பட்ட பின்னர் நடைபெற்றது. இந்த இரு சம்பவங்களும் சில வார வித்தியாசத்திலும் இரு கண்டங்களிலும் நடைபெற்றாலும் இவை அந்த பல்தேசிய அமைப்பின் செயற்பாடுகளே.

ரொறன்ரோவில் முக்கியமான தமிழ் அமைப்புகள் உலகத்தமிழர் அமைப்பு, தமிழ் ஈழச் சங்கம், சேக்கம், தமிழர் கூட்டுறவு அமைப்பு. வெளியில் பார்க்கும் போது இந்த அமைப்புகளில் செயற்படுவோர் வேறாகவே தோன்றினாலும் இவர்கள் கனடிய தமிழ் சங்கங்களின் சம்மேளனம் எனப்படும் FACT அமைப்பின் அங்கத்துவ அமைப்புகளே. தமிழர் கூட்டுறவு இல்லம், சேக்கம் அமைப்பு போன்றே தமிழ் படித்த மேல்தட்டு வர்க்க ஆண், பெண்களைக் கொண்டது. இந்த அமைப்பு தன்னுடைய சமூக நிகழ்ச்சிகளுக்கு கனடிய அரசின் உதவியைப் பெறுகிறது. சேக்கம் இலங்கை குடிவரவாளர்களுக்கு என்று அமைக்கப்பட்ட போதும் தற்போது தமிழர்களுக்கு மட்டுமே சேவையாற்றுகிறது. இது ஒன்ராறியோ அரசின் நிதியுதவியுடன் லான்ஸ்டவுனில் எட்டு மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டியது. தமிழர் கூட்டுறவு இல்லம் எனப்படும் இந்த கட்டத்தின் அத்தியட்சகராக முன்பு நைஜீரியாவில் பணியாற்றிய சிற்றம்பலம் உள்ளார். இவர் தமிழீழ சங்கத்தின் செயலாளருமாவர். இந்த அமைப்புகள் எல்லாம் ஃபாக்ட் அமைப்பின் கீழ் இருப்பதால் சாதாரண தமிழர்கள் அரச நிதி பெற்ற வீடுகளைப் பெறுவதில் புறக்கணிக்கப்படுவதாகவும் அங்கு விண்ணப்பம் செய்யவே பயப்படுவதாகவும் கூறப்படுகிறது.

தமிழீழச் சங்கம் முதலில் நாட்டைப் பிரிந்து வருந்தும் தமிழர்களுக்காக அமைக்கப்பட்டது. ஆனால் பின்னர் புலிகளின் தலையீட்டின் பின்னர் இது புத்துயிர் பெற்று பல பிரிவுகளைக் கொண்ட சமூக சேவை அமைப்பாக மாறியது. கனடிய அரசின் நிதியுதவி பெறும் அமைப்பாக இது மாறியது. கலாசார நிகழ்ச்சிகள், ஆலோசனை கூறுதல், குழந்தைகளுக்கான பாடசாலை போன்ற நிகழ்ச்சிகள் அங்கு நடத்தப்படுகின்றன. அங்கு சுமார் முப்பது பேர் வரை பணிபுரிவதுடன் அங்கு இயக்குனராக செயற்படும் சார்ல்ஸ் தேவசகாயம் மாதம் மூவாயிரம் டொலர்கள் சம்பளம் பெறுவதாக கூறப்படுகிறது. சமீபத்தில் கட்டடம் ஒன்றை வாங்குவதற்கு ஒன்ராறியோ அரசு நான்கு லட்சம் டொலர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வழங்கியதாக கூறப்படுகிறது. ஃபாக்ட் அமைப்பை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது உலகத்தமிழர் அமைப்பே. இது வெளியாகவே புலிகளின் அமைப்பாகும். இது பத்திரிகை வெளியிடுவது, விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது, பேச்சுப் போட்டிகள் நடத்துவது, மாவீரர் தினம் கொண்டாடுவது போன்ற செயற்பாடுகளில் வெளிப்படையாக ஈடுபடுகிறது. உலகத்தமிழரும் அரச நிதி பெறுவதாக கூறப்பட்ட போதிலும் அது நேரடியானதா அல்லது தமிழீழச் சங்கம் போன்றன ஊடாகவா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

சிலர் ஃபாக்ட் அமைப்பு புலிகளின் அமைப்பு அல்ல என வாதிடலாம். சில வழிகளில் இது உண்மையாக இருக்கலாம். இந்த அமைப்புகளில் இருக்கும் பெரும்பான்மையோர் (உலகத்தமிழர் தவிர) தங்களை புலிகளின் ஆதரவாளர்கள் என்று பகிரங்கமாக அறிவிக்கவோ, அல்லது புலிகளை நியாயப்படுத்தவோ போவதில்லை. உதாரணத்திற்கு, சாம் துரைசாமி என்ற தமிழீழச் சங்கத் தலைவரும் சார்ல்ஸ் தேவசகாயம் என்ற இயக்குனரும் எந்த விதமான கொள்கைச் சார்பும் இல்லாதவர்கள் என்று விபரிக்கப்படுகிறது. சாம் துரைசாமி இளைப்பாறிய ஸ்டேஷன் மாஸ்டர் என கூறப்படுகிறார்.

ஃபாக்ட்டின் செயற்பாட்டை நிர்ணயிப்போர் ஒரு சிறு கூட்டத்தினரே. இவர்களின் முடிவுகளை மற்றவர்கள் எதிர்ப்பதில்லை. அவர்கள் வெறுமனே பயன்படுவோர் மட்டுமே. ஃபாக்ட் நடத்தும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பிரபாகரனின் படங்களே கொண்டு செல்லப்படுகின்றன. யூலைக் கலவரம் பற்றி பத்தாண்டு நினைவுக்காக ஐ.நா முன் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் புலிகளுக்கு ஆதரவான சுலோகங்களே கொண்டு செல்லப்பட்டன. இவை அமைப்பாளர்களாலேயே தீர்மானிக்கப்பட்டன என்பதில் சந்தேகமில்லை.

கடந்த காலங்களில் ஒன்றுக்கு மேல்பட்ட தமிழ் தீவிரவாத அமைப்புகள் கனடிய அரசு, தொண்டர் நிறுவனங்களின் நிதியுதவியை நாடியிருந்தன. எண்பதுகளில் ஒரு தீவிரவாத அமைப்பு திருச்சபை அமைப்பு ஒன்றிடம் இந்தியாவில் உள்ள தமிழ் அகதி மீனவர்களுக்கு படகு வாங்க உதவி கோரியிருந்தது. ஆனால் அப்பகுதியில் அவ்வகைப் படகுகளால் மீன்பிடிக்க அனுமதி இல்லை.

87ன் பின்னர் புலிகளே தனித்த அமைப்பாக வந்த பின்னர் புலிகள் கடும் வேகத்தில் செயற்பட்டனர். இதில் முக்கியமான கே.பி என்பவர் புலிகளின் எல்லா நிதி செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருந்தார். ரொறன்ரோவில் இருந்த போது இவர் உலகத்தமிழர் அமைப்பின் ஈற்றன் அவனியூ அலுவலகத்தில் இருந்து செயற்பட்டார். எண்பதுகளின் இறுதிக் காலத்தில் இவர் முக்கியம் வாய்ந்த தமிழர்களைச் சந்தித்து அவர்களை அமைப்புகளை உருவாக்கி கனடிய அரசின் நிதி கிடைக்கக் கூடிய வழிகளில் விண்ணப்பிக்கும்படி வற்புறுத்தினார். ஆனால் அமிர்தலிங்கம் கொல்லப்பட்ட போது இதில் பின்னடைவு ஏற்பட்டது.

தமிழ் குழந்தைகளுக்கு தமிழ் கற்பிப்பது போன்ற முயற்சிகளில் உதவி செய்ய தமிழ் அமைப்பு ஒன்றை கனடிய அரசு சார்ந்த நிறுவனம் ஒன்று அணுகும் போது, வயதானவர்களிடம் 'ஐயா, நீங்கள் ஏன் போகக் கூடாது?' என்று கேட்கப்படும். பலர் இதில் சமூக சேவை செய்யும் நோக்கிலேயே கலந்து கொள்கிறார்கள். தமிழ் குழந்தைகளுக்கு தமிழ் கற்பிக்கும் பாடத்திட்டத்தில் கூட புலிகளின் கொள்கை நலன்களை கவனிக்க புலிகளின் பிரதிநிதி ஒருவர் அங்கு இருப்பார். சில ஆலோசனைகள் புலிகளுக்கு ஆட்சேபத்திற்குரியதாயின் 'ஏன் இது உங்களுக்கு வேண்டும்' என்று அவர் கேட்பார்.

தமிழீழச் சங்கத்தில் முக்கிய நிதிகளுக்கு பொறுப்பாக புலிகளின் பிரதிநிதிகளே உள்ளனர். உப தலைவராக இருப்பவர் புலி ஆதரவாளர் ஒருவரின் மனைவியே. இந்த ஆதரவாளர் காங்கேசன் சீமெந்து நிறுவனத்தில் பணிபுரிந்தவர். இவர் முன்பு சுதந்திரக் கட்சிக்கும் பின்னர் புளொட்டுக்கும் ஆதரவாக இருந்தவர் என்று கூறப்படுகிறது. இவர் பின்னர் நைஜீரியாவுக்கு சென்று அங்கிருந்து கனடா வந்தவர். கனடாவில் இவர் புலிகளுடன் நெருக்கமாகினார். தமிழீழச் சங்கச் செயலாளர் சிற்றம்பலம் உலகத்தமிழரின் பேச்சாளராகவும் உள்ளார். காமினிக்கு குண்டு வெடிக்கப்பட்ட போது, பி.பி.சி அவரை பேட்டி கண்ட போது, அவர் புலிகளுக்கு அதில் தொடர்பு இல்லை என மறுத்தார். தமிழீழச் சங்கம் நிதியுதவி சேர்ப்பதற்காக இந்திய நட்சத்திரங்களை அழைத்து நிகழ்ச்சிகள் நடத்துவதும் உண்டு. அகதிகளுக்கு என்று கூறி சேர்க்கப்படும் இந்த நிதி தமிழ் அகதி அமைப்புக்கே அனுப்பப்படுகிறது. இது ஏற்கனவே தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் என்ற பெயரில் உள்ள அமைப்புக்கு போட்டியாக புலிகளால் அமைக்கப்பட்ட அமைப்பாகும்.

மற்ற பல்லின அமைப்புகள், கனடிய அரச அமைப்புடன் இருக்கும் தொடர்புகள் ஃபாக்ட் அமைப்புக்கு ஒரு ஸ்திரத்தன்மையைக் கொடுத்திருக்கின்றன. அதிருப்தியாளர்களின் அமைப்புகள் தங்கள் செயற்பாடுகளுக்கு நிதி பெறவும் இந்த அமைப்பின் செயற்பாடுகளை எதிர்க்கவும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

உலகத்தமிழர் இயக்கம், அதன் பாசிச செயற்பாடுகள், கனடிய அரசு அதற்கு வழங்கும் உதவிகள் பற்றி கனடிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தப்பட்ட போதும் அவர்கள் ஆச்சரியம் தெரிவித்து அக்கறை காட்டிய போதும் அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதற்கு காரணமாக கூறப்படுவது: அரசியல்வாதிகளுக்கு வாக்குகள் தேவை. ஃபாக்ட் அமைப்பின் கீழ் இயங்கும் அமைப்புகள் மூலம் தங்களுக்கு பல்லாயிரக்கணக்கான வாக்குகள் கிடைக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அவர்களின் இலட்சியம் இலங்கையின் பிரச்சனையாக இருக்கலாம், ஆனால் சாதாரண கனடிய வாக்காளர்களுக்கு அதில் அக்கறையில்லை. அரச நிதியுதவியை வழங்குவதன் மூலமும் முக்கிய தமிழ் குழுக்களை அரவணைப்பதிலும் கனடிய அரசியல்வாதி இழப்பதற்கு எதுவும் இல்லை.

மற்ற குழுக்கள் ஒப்பீட்டளவில் எந்த பயனும் தராத ஒரு நேர வீண்படுத்தலே. தொகுதிகள் பெரும்பாலும் ஒரு சில நூறு வாக்குகளாலேயே வெல்லப்படுகின்றன. பிலியான கனடிய எம்.பிக்கள் எங்கள் பிரச்சனைகளில் கவனம் எடுப்பார் என்று எதிர்பார்ப்பது நியாயமற்றது. இதை விட அரச அலுவலகங்கள் சுலபமான வழியில் செயற்படவே விரும்புகின்றன.

சிக்கலாக தோன்றினாலும், ரொறன்ரோவில் உள்ள தமிழர்களின் சிக்கலான பிரச்சனைக்கு தீர்வு, எங்கள் நாட்டில் தான் உண்டு. ரொறன்ரோவில் தமிழ் குழுக்கள் தப்பாக கையாளப்படுகின்றதாயின் அதற்கான குற்றம் எங்கள் அரசியல்வாதிகளிலேயே சுமத்தப்பட வேண்டும். ●

# தமிழ் சினிமாவும் உலகத்தரமான படமும்..

யமுனா ராஜேந்திரன்

இப்போது ஆஸ்கார் விருது பற்றி அதிகம் பேசப்படுகிறது. அது போலவே இலக்கியத்தில் சினிமாவில் உலகத் தரத்திற்கு தமிழன் படைக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அது என்ன உலகத்தரம்? அந்த உலகத்தரத்துக்கான மதிப்பீடுகள் தான் என்ன? அந்த உலகத்தரத்துக்கான நிலவும் படைப்பு ஆதாரங்கள் எவை? அந்த உலகத்தரத்தை எவர் உருவாக்குகிறார்கள். அந்த உலக மதிப்பீட்டுக்கு பின்னால் செயற்படும் கலாசார அடிப்படை மதிப்பீடுகள் என்ன?

தீவிர சினிமாவைச் சேர்ந்த எந்தக் கலைஞனும் ஆஸ்கார் பரிசு அங்கீகாரத்தைப் பற்றி கவலைப்பட்டதேயில்லை. ஸ்த்யஜித்ரேயிலிருந்து இல்மஸ்குனே வரை இது பொருந்தும். அப்சர சுத்தமான ஆஸ்கார் விருதுகள் சமூகப் பிரக்ஞை மதிப்பீடுகள் கொண்டதல்ல முற்று முழுக்க தொழில் நுட்ப மதிப்பீடுகள் சார்ந்தது.

கலை மதிப்பீடுகள் சமூகப் பிரக்ஞை சார்ந்த மதிப்பீடுகள் கொண்ட திரைப்பட விழாக்களை பிரெஞ்சு/ அமெரிக்க/ ஜெர்மன்/ லண்டன் மாற்றுச் சினிமாவைப் பற்றி கவலைப்படுபவர்களே ஏற்பாடு செய்கிறார்கள். இங்கு தான் மூன்றாவது சினிமா அல்லது மாற்றுச் சினிமா பற்றிய கருத்தரங்குகள் நடக்கிறது.

பிரான்ஸ் கேன்ஸ் திரைப்பட விழாவில் எவர் தலைமையேற்கிறார் என்பதைப் பொறுத்தே அவ்விழாவின் திசைவழி தீர்மானிக்கப்படும். கோஸ்டா கார்வஸ் போன்ற இடதுசாரிகள் தலைமையேற்றால் மூன்றாமுலக மற்றும் சுதந்திர (independent) சினிமாக்கள் அதிகம் திரையிடப்படும். பிற வியாபார/ ஹொலிவூட் சார்ந்தவர் தலைமையேற்றால் ரொறன்ரினோவின் Pulp Fiction அல்லது மடோனாவின் In bed with madonna தேர்ந்தெடுக்கப்படும்.

இப்போது இந்த வருடம் ஆஸ்கார் பரிசுக்கு அர்ஜுன் நடித்த ஜெய்ஹிந்த், சங்கரின் 'காதலன்', ஞான ராஜசேகரனின் 'மோகமுள்' (தி. ஜானகிராமனின் நாவல்) படங்கள் அனுப்பப்பட்டிருப்பதாக செய்திகள் சொல்கின்றன.

ஜெய்ஹிந்த், காதலன் சார்ந்தவர்கள் என்ன மாதிரி 'சர்வதேச தர' அங்கீகாரத்தைப் பெற விழைகிறார்கள் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை. ஆனால் ஞான ராஜசேகரன் சிறந்த நாடகாசிரியர். நவீன கலை இலக்கிய பிரக்ஞையுள்ளவர். அவர் ஏன் இந்த அபத்தம் புரிகிறார் என்று தெரியவில்லை.

சர்வதேசத் தரமான படங்கள் என ஸில்வஸ்டர் ஸ்டலோன், ஸ்வாட்ஸநெக்கர், வான்டேம் போன்றவர்களின் படங்களை நினைத்துக் கொண்டிருப்போர் பற்றி நமக்கேதும் பிரச்சனையில்லை. அவ்வாறு நினைத்துக் கொள்ளட்டும்.

ஸத்யஜித் ரேயின் திரைப்படங்கள் அவர் சாவு வரை அமெரிக்காவில் எந்த திரையரங்குகளிலும் திரையிடப் படவில்லை. ஆஸ்கார் பரிசும் வழங்கப்படவில்லை. பிரெஞ்சு அதிபர் ரேயை வீடு தேடி வந்து கௌரவித்த பிறகு, குரேசோவா, கோடார்ட், பெலினி போன்ற கலைஞர்கள் அவரின் மேதைமையை கலைஞானமாய் உலகுக்கு சொன்ன பின்பு, பிரெஞ்சு, ஜேர்மன், பிரிட்டிஷ் கலைஞர்கள் அவரை கௌரவித்த பின்பு தான் தன்னை தன் மதிப்பீடுகளை கேவலமாக உணர்ந்த அமெரிக்கன், ரேயின் இறுதிக் காலத்தில் அவர் வாழ்காலச் சாதனைக்காக ஆஸ்காரைக் கொடுத்தான்.

அனைத்துக்கும் மேலாக அமெரிக்க ஆஸ்கார் விருதுக்கான மதிப்பீடுகள் அவர்களின் அரசியல் சார்ந்த, ஆதிக்கத் தன்மையான, வெள்ளைக் கலாசாரம் மேன்மையானது என்று நிறுவும் மதிப்பீடுகள்.

அமெரிக்க சமூக அமைப்பை கடுமையாக விமர்சிக்கும் படைப்பாளிகளின் படைப்புகளை அது கண்டு கொள்ளாது. ஒலிவர் ஸ்டோன், மாட்டின் ஸ்கூர்சீஸ், கொப்போலா போன்றவர்களின் பிரச்சனைப் படங்கள் அவர்களின் ஆலோசனைக்கு என்றும் எடுத்துக் கொள்ளப்படாது. பரிசீலனைக்கு ஆளாகி விருது பெறும் இவர்களின் படங்கள் கூட அதனது தொழில் நுட்பத்திற்காகவே இருக்கும். கறுப்பு இயக்குனர்களின் படைப்புகளேதும் பரிசீலனைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

ஆஸ்கார் பரிசுகளின் மதிப்பீடுகள் இத்தகையவை தான். யாரேனும் தமிழ் கலைஞர்கள் எவரும் இப்படிக் கேட்கலாம்? சினிமா ஒரு தொழில் நுட்பச்சாதனம், ஏன் தொழில் நுட்பத்திற்கு கொடுக்கப்படுவதை வரவேற்கக் கூடாது?

சினிமா தொழில் நுட்பச்சாதனம் தான். விஞ்ஞானம் போலவே மனித சாதனை தான். ஆனால் விஞ்ஞானம் மனிதனுக்கு எதிராக, சூழலுக்கு தீங்கு விளைவிப்பதாக, மெல்லக் கொல்லும் அணு உலைகளாக வடிவமெடுத்து விட்டதே! சினிமா கலைசாதனமும் கூட, மனிதனின் ஆன்மாவை அவன் உள் உலகை, ஆழ் மனதைப் பாதிக்கும் சாதனம். சாராம்சத்தில் மானுட விரோதமான தொழில் நுட்பம் சார்ந்த பிரக்ஞையும் அவனது ஆன்மாவைக் கொல்லும்.

ஆகவே தொழில் நுட்பத்தையும் மானுட விடுதலைக்கான கலை நடவடிக்கையையும் தனித்தனியே பிரித்து ஆராதனை செய்ய முடியாது. ஆயுத பூஜை மனித விமோசனத்திற்கு எதிரானது.

இதை உணர்ந்ததால் வியாபாரிகள் ஹாலிவூட்டையும் ஸ்டலோனையும் ரொறன்ரினோவையும் பம்பாய் படவுலகையும் ஜென்டில்மேனையும் பேசும் போது மனித வாழ்வில் அக்கறையுள்ளவர்கள் ஸத்யஜித்ரே பற்றியும் குரோசோவா பற்றியும் Battleship Potemkin பற்றியும் மகாநதி பற்றியும் கமல்ஹாசன் பற்றியும் நாம் பேச வேண்டியிருக்கிறது.

ஆகவே தான் நமது கலை மதிப்பீடுகளும் சரி, விமர்சன மதிப்பீடுகளும் சரி, மாற்று உலகை உருவாக்குவது எனும் அடிப்படையில் அமைகிறது.

இந்த நிலைப்பாட்டோடும் நாம் தமிழ் சினிமாவுக்கு வருவோம். ஐரோப்பாவில் மானுட விடுதலை சம்பந்தமான தத்துவ அரசியல் கலை மதிப்பீடுகள் கருத்தாக்கங்கள் அச்சமூகத்தின் பிரத்யேகமான கொந்தளிப்புகளின் அடிப்படையிலானவை. அதன் தனித்தன்மைகளோடு அது உலகத்தன்மைகளையும் கொண்டிருக்கிறது.

ஆக, ஐரோப்பிய மதிப்பீட்டில் பொதிந்துள்ள உலகப் பண்புகளையும் நமது மதிப்பீட்டில் பொதிந்துள்ள உலகப் பண்புகளையும் இணைக்க வேண்டும். நம் கலாசாரத்தில் பொதிந்துள்ள இந்த உலகப் பண்பு கூட நம் நெருக்கடிகள், கொந்தளிப்புகள் தனித்தன்மைகள் சார்ந்து தான் உருவாகின்றன.

உலகப் பண்புகள் என்று நான் குறிப்பிடுவது இவைகளைத் தான். மனித நேயம், சமத்துவம், சகோதரத்துவம், அன்பு, ஒடுக்குமுறை எதிர்ப்பு, மனிதப் பெருமிதம் போன்றவை.

இப்பண்புகள் தம்மை வெளிக்காட்டிக் கொள்ளும்போது, அவை தத்தமது சமுகத்தின் வேர்களையும் உள்த்தர்க்கங்களையும் (inner logic) கொண்டிருக்கிறது.

இந்நோக்கில் தமிழ் இலக்கியப் பிரதியையோ அல்லது தமிழ் சினிமாவின் ஒரு காட்சியின் ஒரு பிரேமையோ மேற்கத்திய கருத்தாக்கத்தின் அடிப்படையில் முழுக்கப் புரிந்து கொள்ள முடியாது.

எமது கலாசார/ அரசியல் அடிப்படைகளும் மேற்கத்திய கலாசார/ அரசியல் அடிப்படைகளும் இவை இரண்டுக்கும் இடையிலான பொதுப்பண்புகளும் கொண்டே நமது அணுகுமுறை உருவாக வேண்டும்.

இந்தப் பிரத்யேகமான உள்தர்க்கத்தையும் உலகப் பண்புகளையும் நினைக்கிற படைப்புக்களே உலகத்தரமானவை என்று நான் கருதுகிறேன்.

இதற்கு மிகச் சிறந்த உதாரணம் ஸத்யஜித் ரேயின் படங்கள். அப்படங்களின் ஒவ்வொரு பிரேமும் இது வங்காளிப் படம் என்று சொல்லும். ஆனால் இப்படத்தை புரிந்து கொள்வதில் உலகெங்குமுள்ள எந்த மானுட நேயமுள்ளவனும் சிரமப்படவில்லை. எளிமை அதுதான் உண்மை. அது தான் வாழ்வு. இது தான் ரேயின் படங்கள்.

இந்த தரிசனம் இல்லாத போது தொழில் நுட்ப ரீதியில் அசத்துகிறது. இசை அற்புதம், பாட்டு பிரமாதம், நடிப்பு ஜோர், நடனம் தூள் என்று தான் விமர்சனம் இருக்கும்.

மேலாக சினிமா என்பது பலவேறு கலைப் பண்புக்கும் இணைந்ததொரு நிகழ்வு. வாழ்வுக்கும் வாழ்வு சார்ந்த இந்தப் பல்வேறு கலைப் பண்புகளும் அதன் உள் தர்க்கத்துடன் இணைக்கப்பட வேண்டும். அப்போது எதுவும் தனித்தனியாக துருத்திக் கொண்டு நிற்காது.

இதையெல்லாம் புரிந்து கொண்டால் மட்டும் போதாது.

தமிழ் சமூகம்/ தமிழ் கலாசாரம் போன்றவற்றின் பிரத்யேகமான தன்மையையும் பார்க்க வேண்டியிருக்கிறது. இங்கே உலகத்தரமான படங்கள் பற்றிப் பேசுகிறவன் மிகுந்த சிரமங்களை அடைய வேண்டியிருக்கிறது.

நான் சொல்கிற இந்த உலகத்தரத்தை அடைய தமிழ் சினிமா கலைஞனுக்கு சில புரிதல்கள் வேண்டும்.

உலகப் பண்புகள் பற்றி தத்துவ/ அரசியல் தரிசனம் வாழ்வுக்கும் பலவேறு கலைப் பண்புகளுக்குமான உள்தர்க்கம்.

இந்த உள்தர்க்கத்தையும் பிரத்யேகத்தன்மையையும் இணைக்கும் சிந்தை.

இந்த மூன்று அடிப்படைகளும் தமிழ் கலாசார வாழ்வின் மீது, நிலவும் சமூகத்தின் மீது எழுந்து நிற்க வேண்டும்.

இந்த தர்க்கத்தை ஓரளவு உணர்ந்து வந்து படங்கள் என ஜெயகாந்தனின் உன்னைப் போல ஒருவன், கோமல்/ பாலச்சந்தரின் தண்ணீர் தண்ணீர், பாலு மகேந்திராவின் அழியாத கோலங்கள், கமல் ஹாசனின் மகாநதி போன்றவற்றைச் சொல்லலாம்.

இவைகளைக் கூட சர்வதேசியத் தரமான படங்கள் தான் எனச் சொல்ல முடியுமா?

முடியாது. உண்மைதான். நாம் விரும்புவது சர்வதேசத் தரமான படங்கள் தான். ஆனால் தமிழ்ச் சூழலில் அவ்வாறான படங்கள் இயக்குனர்கள் உருவாக முடியாது என்றே தோன்றுகிறது. இது இயக்குனர்கள் அல்லது கலைஞர்கள் பால் கொண்ட அவநம்பிக்கை இல்லை.

தமிழ் வாழ்வையும் அவர் தம் கலாசாரத்தையும் அரசியலையும் தத்துவத்தையும் கலை அழகியல் மதிப்பீடுகளையும் உலகப் பண்புகள் நோக்கியதாக உருவாக்க வேண்டும்.

இது அடிப்படையில் சமூகப் பிரக்ஞையுள்ள கலைஞர்களதும் இடதுசாரிகளதும் கலாசார அரசியல் நடவடிக்கையில் இருக்கிறது.

அதுவரை என்ன செய்யலாம்?

திராவிட இயக்கங்கள்/ தமிழ் சினிமாவை நாடகத்தின் நீட்சியாகப் பார்க்கின்ற சூழல்/ நாயக வழிபாடு/ தனித் தனியே பிரிந்திருக்கும் வெகுஜன ரசனை/ ஹொலிவூட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

நிக்கி தனது வீட்டுக் கதவைத் தட்டியபோது அதற்குள் இருப்பது யார் என்ற வினா என்னை அரித்தது. அது யாராக இருந்தால் எனக்கென்ன? எனக்குள் ஏன் இந்தத் துருத்தல்? வினாக்களுக்கான விடைகளைத் தேடாமல் விடுதலே நல்லது என நான் முடிவெடுத்தபோது கதவு திறபட்டது.
கதவைத் திறந்ததோ ஓர் இளம் பெண். நான்கு காலங்களில் நான் விரும்பும் தொடக்க, முடிவுப் பகுதிகளைத் தொலைத்ததால் துன்புறுவது போன்ற முகம்.

அவள் நிக்கியின் கன்னங்களிலே முத்தமிட்ட பின்னர் எனது கைகளைக் குலுக்குகின்றாள்.

யாரிவள்? மீண்டும் அளது முகத்தை நோக்கி எனது முகத்தை நிமிர்த்துகின்றேன். சிறுவனாக இருந்தபோது எனக்குள் கனவு வித்துகளைத் தாட்ட அழகிய முகங்களை நிமிர்ந்து பார்க்க அச்சம் கொண்டேன். முகங்கள் எனக்குத் தந்த தரிசனங்கள் பல. முகங்களது நிழல்களிலே நான் கவிதைகளைச் சுவாசித்தேன்.

நிக்கி என்னிடம் அவள் தனது ஒரேயொரு மகள் என்றும், அவளது பெயர் எஸ்தெல் என்றும் சொல்லி விட்டு, உட்காருமாறு என்னைக் கேட்டுக் கொண்டாள். சந்தோஷம் தவிர்ந்த யாவுமே அந்த வீட்டில் இருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. நிறையப் புத்தகங்கள் இருந்தன. எனக்குப் பிடித்தமான 19ம் நூற்றாண்டு பிரெஞ்சுப் படைப்பாளிகள் பலரது படைப்புக்கள் மிகவும் நேர்த்தியாக அடுக்கப்பட்டிருந்தன.
"மன்னிக்கவும் எஸ்தெல்... இந்தப் புத்தகங்களை நான் ஒரு தடவை புரட்டிப் பார்க்கலாமா?" எனக் கேட்கின்றேன்.

"Bien sure, faite comme chez vous" என்று குடும்ப ரீதியான ஒரு அனுமதியைத் தருகின்றாள்.

"இந்தப் புத்தகங்கள் யாவும் என்னுடையதல்ல, அவளுடையவை" என்ற நிக்கி, "வாலிபனே! என்னோடு சேர்ந்து ஒரு விஸ்கி எடுக்கிறாயா?" எனக் கேட்டபோது நான் மறுக்கவில்லை. அந்தத் தினம் எனக்குச் சற்றே திகிலூட்டும் தினமாக இருந்தது. எஸ்தெல் ஓர் அறையைத் திறந்து கதவைப் பூட்டிக் கொண்டாள்.

கீயோம் அப்போலியையரின் "படுகொலை செய்யப்பட்ட கவிஞன்" என்ற புத்தகத்தை ஒரு தடவை புரட்டிக் கொண்டேன்.

"கட்டாயம் சாப்பிட்டு விட்டுத்தான் போகவேண்டும்" - இது நிக்கி.

"எனக்குப் பசியில்லை ..... இன்னொரு சந்தர்ப்பத்தில் ...... " - இது நான்.

"கொஞ்சமாவது சாப்பிட்டுவிட்டு....." என அவள் மீண்டும் சொன்ன போது, "சரி" என்று தலையை ஆட்டிக்கொண்டேன்.

நிக்கியுடன் நிறையப் பேசவேண்டும் போல எனக்குப் பட்டது. அந்த இரவில், சற்றே போதை கலந்த இரவில், பேசாது விட்டு, இன்னொரு தினத்தில் பேசலாம் என எண்ணிக் கொண்டேன்.

விஸ்கி நாவில் கரைந்து, உடலைச் சூடாக்கியது. சில புத்தகங்களைப் புரட்டி, சில பக்கங்களில் விழிகளை மேய விட்ட பின்னர், உட்கார்ந்தேன். நிக்கி, குளிர்சாதனப் பெட்டிக்குள் இருந்து இறைச்சித் துண்டுகளை எடுத்தாள். இந்த நேரத்தில் தொலைபேசி அலறியது. நிக்கி பேசினாள்.

---

ஆதிக்கம்/ சினிமா வியாபாரிகள் என இவர்களுக்குள் இருந்து வரும் சிறு சிறு ஆரோக்கியமான முயற்சிகளை, சலனங்களை என்ன செய்யலாம்?

அம்ஸன் குமார் தனது சினிமா ரசனை புத்தகத்தில் தமிழ் சினிமாக்களைப் பற்றி பேசுவதையே தவிர்த்து விட வேண்டியதற்கான காரணங்களைச் சொல்லியிருக்கிறார்.

ஆனால் இந்தப் போக்கு சரியில்லை என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில் நாம் சினிமா பற்றி பேசுவதும் எழுதுவதும் தமிழ் பூமியில் கால் பதிக்கத் தான். நல்ல சினிமாவை மட்டுமல்ல, நல்ல வாழ்வையும் நாம் தமிழில் தான் உருவாக்க வேண்டும்.

இந்த இடைவெளியை நிரப்புவதற்கான சிந்தனையும் செயலுமே இச்சூழலில் தேவை.

இங்கே தான் middle சினிமா அல்லது சமாந்தரச் சினிமா கோட்பாடு வருகிறது. ஒரு வகையில் இது சமரச சினிமா தான். ஆனால் இந்த சமரசம் ரசனை மேம்பாட்டிலும் வெகுமக்கள் ரசனை மாற்றம் போன்றவற்றிலும் பங்கெடுப்பிலும் அடிப்படை கொண்டிருக்கிறது.

ஆகவே அத்தகைய படங்களை நாம் வரவேற்கவே வேண்டும். அதோடு உலகத் தரத்துக்கான களத்தை உருவாக்க கலாசார அரசியல் தளத்தில் நாம் செயல்பட வேண்டும்.

இந்நோக்கில் தான் ஜென்டில்மேனிலிருந்து நம்ம வரையும் பெரிய மருதுவிலிருந்து கருத்தம்மாவையும்நாம் வித்தியாசப் படுத்திப் பார்க்கிறோம்.

விமர்சகனும் சரி, கலைஞனும் சரி தமிழ் சூழலில் ஒரே நேரத்தில் இரு தளங்களில் செயற்பட வேண்டியிருக்கிறது.

ஒன்று உலகப் பண்புகள் கொண்ட உலகத்தரம் நோக்கிய படைப்புகள் பற்றிப் பேசுவது/ அறிமுகப்படுத்துவது/ தன்னளவில் அவ்வாறான படைப்புகளை உருவாக்குவது.

மற்றையது அத்தகைய பண்புகளுக்கான அரசியல் கலாசார சமூக அடிப்படை மாற்றத்தையும் உருவாக்குவது, அதைச் சொல்ல முயற்சிக்கும் படைப்புக்களை வரவேற்பது.

வானுக்கும் பூமிக்கும் இடைவெளி எப்போதும் அதிகமாகவே தான் இருக்கிறது.

நம்துரதிஷ்டம் இவைகளுக்கு இடையில் பூமியில் கால் பாவாமல் வானத்தில் சஞ்சரிக்கத்தான் வேண்டியிருக்கிறது. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net 



# தேவதைகளின் தனிமை

## க.கலாமோகன்

அந்தச் சம்பாஷணையில் அவள் அடிக்கடி உபயோகித்த வரி "முடியாது" என்பதாகும். யாருக்கோ, எதனையோ அவள் மறுக்கின்றாள் என்பது எனக்கு விளங்கியது. அவள் தன் அன்பை மறுத்தாளா? உடலை மறுத்தாளா? என்பது எனக்கு விளங்கவில்லை. தொடர்பு அறுந்தவுடன், நிக்கி மீண்டும் விஸ்கியை ஊற்றிக் குடித்தாள்.
இந்த நேரம் பார்த்து, அந்த வீட்டுக்குள் இருந்து ஓர் குழந்தை அழும் ஒலி என் காதில் விழுந்தது. நான் மீண்டும் பரபரப்பு அடைந்து கொண்டேன். குழந்தை அழுதது. எஸ்தெல் புகுந்த அறையிலிருந்தே சத்தம் வந்ததால் அது அவளது குழந்தையாகவேயிருக்கும் என நான் எண்ணிக் கொண்டேன்.

சில கணங்களில், இரவு உடையுடன், குழந்தையைத் தூக்கியபடி அவள் வெளியே வந்தாள். எழுந்து குழந்தையை எனது கரங்களில் பெற்றுக் கொண்டேன். அது புதிதாகப் பிறந்த குழந்தை. எனது கரங்களில் ஓர் பஞ்சு மெத்தை போல தவழ்ந்தது மட்டுமல்ல, தனது அழுகையையும் நிறுத்தி விட்டு என்னைப் பிரமிப்புடன் பார்த்தது. கன்னங்களை வருடினேன். காதுகளை மிகவும் அவதானமாகத் தொட்டேன். அது ஓர் பெண் குழந்தை. என்னைப் பார்த்துச் சிரித்தது. அதனது சிரிப்புக்குள் சில கணங்கள் என்னைத் தேடினேன். உலகத்தைத் தேடினேன்.

ஒரு வகையில் பார்த்தால் நாங்கள் அனைவருமே காணாமல் போனவர்கள்தாம். நாங்கள் எங்களை எங்களுக்குள்ளும் வெளியேயும் தேடுவதற்கு இதுதான் காரணமோ? என்னைத் தேடக்கூடாது எனப் பல தடவைகள் நான் முடிவெடுத்துள்ளேன். பின்னர் தான் என்னையுமறியாமல் நான் என்னைத் தேடிக்கொண்டிருந்த விஷயம் எனக்குத் தெரியவந்தது. இன்று இந்தக் குழந்தையின் பச்சைச் சிரிப்பில் ஏன் நான் என்னைத் தேடினேன் என்பது எனக்குத் துண்டாகவே விளங்கவில்லை.

சிரித்த குழந்தை அழுதது. வீரிட்டு வேறு அழுதது. எனது கறுப்புத்தாடி அதனைப் பயப்படுத்தி விட்டதோ என நினைக்கையில் "மாலைச் சாப்பாட்டு நேரத்தின் போது தூங்கி விட்டது. பசி, அதுதான் இந்த அழுகை" என்றபடி வந்த எஸ்தெல், குழந்தையை என்னிடமிருந்து பெற்று, கரைத்து வைத்த புட்டிப் பாலைக் கொடுத்தாள்.

எஸ்தெலுடன் சம்பாஷிக்க வேண்டும் போல எனக்குள் ஒரு விருப்பம் ஏற்பட்டாலும் அன்றைய தினத்தில் அதனைத் தவிர்த்துக் கொண்டேன். மனதுக்குள் மட்டும் ஒரு துருத்தல்.

நிக்கி என்னைச் சாப்பிட அழைத்தாள். அங்கே இரண்டு கோப்பைகள் மட்டுமே இருந்தன. "எஸ்தெல் சாப்பிடவில்லையா?" எனக் கேட்டபோது, அவள் ஏற்கனவே சாப்பிட்டு விட்டதாகச் சொன்னாள். அது அரைப்பதத்தில் வாட்டி எடுக்கப்பட்ட மாட்டுத் தொடை. முள்ளுக் கரண்டியின் துணையோடு கத்தியால் வெட்டியபோது இரத்தம் கசிந்தது. மிகவும் அமைதியாகச் சாப்பிட்டேன். நிக்கி அடிக்கடி என் மீது தனது முகத்தை நிமிர்த்திக் கொண்டாள்.

"இந்தச் சாப்பாடு உனக்குப் பிடித்துள்ளதா?" - இது நிக்கி.

"ஆம் பிரமாதமாக உள்ளது" எனச் சொல்லிக் கொண்டேன்.

சாப்பிட்டு முடிந்தது, எனது வீட்டுக்குச் செல்ல வேண்டும் என அவளுக்கு ஞாபகப்படுத்தியபோது,

"இந்த வீட்டை உனது வீடாகக் கருதிக் கொள். நீ எப்போதும் வரலாம்.... உனது வருகையை நான் விரும்புகின்றேன்" என நிக்கி சொல்லிக் கொண்டாள்.

அவளது கன்னங்களில் முத்தமிட்ட பின்னர், கைகுலுக்க எஸ்தெலைத் தேடினேன்.

"அவள் தூங்கி விட்டாள்" என நிக்கி சொன்னாள்.

வீடு வந்தேன். எனது காதலியும் ஆழமான தூக்கத்தில். தூங்கும் முகத்தில் சில முத்தங்களைக் கொடுத்துவிட்டு, சில பக்கங்களை எழுத, எனது மேசையின் முன் அமர்கின்றேன்.

ஆந்தையின் அதே பார்வை, அதே நிமிர்ந்த தோற்றம், நான் அதனைத் தியானிக்கின்றேன், அதற்கு அருகே ஓர் பேனா.....

அந்த இரவில் எஸ்தெலின் பெயரைக் குறிப்பிடாமல், அவளை நினைத்து ஓர் கவிதையை எழுதத் தொடங்கினேன்.

(இன்னும் வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# பாப்பரசர் நேரடியாக மன்னிப்புக் கோர வேண்டும் என பௌத்த அமைப்பு கோரிக்கை

தனது புத்தகத்தில் தெரிவித்த கருத்துக்களுக்கு பாப்பரசர் தானே மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று புத்த பிக்குகள் கோரியுள்ளனர். புத்த அமைப்புகளின் சம்மேளனத்தின் பிரதிநிதியான கலகே புண்ணிய வர்த்தன வத்திக்கான் மன்னிப்புக் கோரி விடுத்த அறிக்கை ஏற்றுக் கொள்ள முடியாதது என்று கூறினார். 'பாப்பரசர் பௌத்த மதம் பற்றி தப்பான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். வத்திக்கான் அதை வாபஸ் பெறவில்லை. அவர்கள் மன்னிப்புக் கோருகிறார்கள். இதை ஏற்றுக் கொள்ள முடியாது' என்று அவர் தெரிவித்தார்.

வத்திக்கான் விடுத்த அறிக்கையில் வத்திக்கானின் வெளிநாட்டுச் செயலாளர் கர்தினால் அன்ஜெலோ சொடானோ 'இலங்கை பௌத்தர்கள் புண்படுத்தப்பட்டது பற்றி வருந்துகிறோம்' என்று தெரிவித்திருந்தார். கொழும்பு பேராயர் மார்க்கஸ் பெர்னாண்டோவும் விடுத்த அறிக்கையில் பௌத்தர்களை இது சாந்திப்படுத்தும் என்று தெரிவித்திருந்தார்.

# அகதிகளை கடத்திய 6 பேர் கைது

இலங்கையிலிருந்து 200 அகதிகளைக் கொண்டு வந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் ஒல்லாந்தைச் சேர்ந்த ஐந்துபேர் கொண்ட குழு மீது அடுத்த மாதம் விசாரணை நடைபெறுகிறது. கடந்த அக்டோபர் மாதம் இவர்கள் கைது செய்யப்பட்ட விவகாரம் தற்போதே வெளியிடப்பட்டுள்ளது. இவர்கள் மீது மோசடி, கடத்தல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது.

போதைப் பொருள் கடத்தல் சம்பந்தமாக விசாரணை நடத்தப்பட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். இலங்கையிலிருந்து ரஷ்யா மூலமாக ஒல்லாந்திற்கு ஆட்களை இவர்கள் கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஒவ்வொருவரையும் கொண்டு வர இவர்கள் ஐயாயிரம் டொலர்கள் அறவிட்டதாகவும் இதில் ஆறுவது நபரைத் தேடி தேடுதல் நடப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கற்பழித்தலுக்கு எதிராக கடும் சட்டங்கள்

இலங்கையில் குழந்தைகள், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அதிகரித்ததால் அதற்காக கடுமையான சட்டங்கள் அமுலாக்கப்பட உள்ளன.

விரும்பி உடலுறவு கொள்ளக் கூடியதாக தற்போது இருக்கும் 12 வயது 16 ஆக அதிகரிக்கப்பட உள்ளது. அத்துடன் திருமண உறவில் நடைபெறும் பாலியல் வன்முறைகளும் குற்றமாக கருதப்படும்.

அத்துடன் பாதிக்கப்பட்டவர்களின் நலன் கருதி விசாரணைகள் இரகசியமாக நடைபெறும். தண்டனையாக ஐந்து வருடங்களும் கூட்டாக கற்பழித்தால் ஏழு வருடங்களும் தண்டனையாக வழங்கப்படும். இதை குறைவான தண்டனைகள் வழங்க நீதிமன்றத்திற்கு அனுமதி கிடைக்காது. அத்துடன் பாதிக்கப்பட்டவருக்கு நட்ட ஈட்டை கற்பழித்தவர் வழங்க வேண்டும். திருமணமான ஒருவர் மீது கற்பழிப்புக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டால் தான் நிரபராதி என்பதை குற்றம் சாட்டப்பட்டவரே நிரூபிக்க வேண்டும்.

தற்போது கற்பழிப்புச் சம்பவங்கள் அதிகரிப்பதால் இந்த புதிய சட்டங்கள் அமுலாவதாக நீதியமைச்சர் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

# 3 மொழிகளில் அரச பத்திரங்கள்

தற்போது சகல பத்திரங்களிலும் மும்மொழிகளில் விபரங்கள் இருக்க வேண்டும் என அரசு தற்போது கட்டளையிட்டுள்ளது. அத்துடன் அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களுக்கு அனுப்பப்படும் மொழியிலேயே பதில் அனுப்பப்பட வேண்டும்.

இந்த கொள்கை மீறப்படும் பட்சத்தில் உத்தியோகபூர்வ மொழி ஆணைக்குழுவுக்கு முறையிடலாம்.

முன்பு அரச ஆவணங்கள் சிங்களத்தில் மட்டுமே இருந்தன. இதனால் தமிழர்கள் பெரும் பாதிப்படைந்து வந்தனர்.

# மீண்டும் வீரப்பன் தப்பினான்

இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உட்பட மூன்று பணயக் கைதிகளைக் கடத்தி வைத்திருந்த சந்தனக் கடத்தல் வீரப்பன் மூன்று கைதிகளையும் தன்னுடைய ஐந்து சகாக்களையும் கைவிட்டு மீண்டும் தப்பியுள்ளான். 300 பொலிசார் கொண்ட படை நடத்திய தேடுதல் முயற்சியிலேயே வீரப்பன் தப்பியிருக்கிறான்.

# ஆயுதங்களை திருப்பிக் கொடுக்காத அரசியல்வாதிகள் மீது நடவடிக்கை

இலங்கையில் ஜே.வி.பி காலத்தில் அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களில் பல இன்னமும் மீளப் பெறப்படவில்லை. வழங்கப்பட்ட ஆறாயிரம் ஆயுதங்களில் 4700 இன்னமும் அரசியல்வாதிகளின் கைகளிலேயே உள்ளன. இதில் 1700 ரிவோல்வர்கள், 1700 ரிப்பீட்டர் துப்பாக்கிகள், 1400 துப்பாக்கிகள் என்பன அடங்கும்.

சகல கட்சி அரசியல்வாதிகளுக்கும் இவை வழங்கப்பட்டன. இந்த ஆயுதங்கள் பல மீளளிக்கப்படாததால் பல கொள்ளைகள், கொலைகள் இந்த ஆயுதங்களாலேயே நடத்தப்படுவதால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிசார் கூறியுள்ளனர். ஏற்கனவே 136 பேர் கைதுசெய்யப்பட்டதில் 143 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ATLANTIC AUTO CLINIC LTD

## 1960 LAWRENCE AVE EAST
## 755 8550 -CALL MIKE or RAJAN





**Car Certification 29.99**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

**Fuel Injections, Electronic and Electric**
திருத்துவதில்பலவருடம்
அனுபவம்உள்ளவர்கள்

**We use Quaker State Oil**




ஓம் ஸ்ரீசாயிராம்

# HEALTH FOODS HERBAL CLINIC

## ஆராக்கிய உணவு மூலிகை மருத்துவ நிலையம்

எங்களிடம் இறக்குமதி செய்யப்பட்ட
கீழ்க்கண்ட எண்ணெய் வகைகள் கிடைக்கும்;

- கூந்தல் வளர்ச்சித் தைலம்
- பொடுகுத் தைலம்
- பீனிசத் தைலம்
- கிரந்தி எண்ணெய்
- சருமத் தைலம்
- வாத நோவெண்ணெய்
- கடுக்காய்க் குளிகை
- முக்கூட்டுக் குளிகை
- கஸ்தூரி கோரோசனை மாத்திரை
- பேறுகால சரக்குத்தூள்

நாட்பட்ட சகல
நோய்களுக்கும்,
இயற்கை முறை
மருத்துவ ஆலோசனை
வழங்கப்படும்.

**மகப்பேறு இல்லாத
தம்பதிகளுக்கு
விசேடமான மூலிகை
முறைகள் உண்டு.**

**Director & Counsellor**
**Prof.Dr.(ms) A.Ganesaal**
12 St.Dennis Drive # 627
Don Mills. Ontario M3C 1G2
Tel: (416) 467 6393
FaX (416) 467-7270

## கம்பியூட்டர் ஜாதகம்

கம்பியூட்டர் முறையில் தமிழில் ஜாதகம்
பத்தே நிமிடங்களுக்குள்.
கணித முறையிலோ வாக்கிய முறையிலோ
கணித்துக் கொடுக்கப்படும்

★ எண்கணிதம் ★ திருமணப் பொருத்தம்
★ ஜோதிடம் ★ பெயரிடுதல்
★ கைரேகை ★ பெயர்மாற்றம்
★ கிரகதோஷ பரிகாரம்

முதலிய பிரச்சனைகளுக்கு பெண்டுல
சுழற்சியின் மூலம் துல்லியமான
அச்சொட்டான பலாபலன்கள் ஆராய்ந்து
கூறப்படும்.

# ஏ.ஆர்.கே மார்க்கட்

★ இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
★ பால் பழங்கள்,
உடன் மரக்கறி வகைகள்,
★ இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
★ கனடிய உணவுப் பொருட்கள்

## அனைத்தும் மலிவு விலையில்

★ தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின்
ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும்
விற்பனைக்கும் பெறலாம்
★ CD, Audio மலிவு விலையில்

# A.R.K MARKET

**31-35 St.Dennis Dr**


**(Don Mills/Eglinton)**

**(416) 421 3429**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அறு(சு)வை



# தனக்குத்தானே தண்டனை விதித்து முகாமில் சமைத்த கல்லாநிதி

## அறுஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

கடந்த வருடம் இறுதியாக வெளிவந்த மஞ்சரியில் சக இயக்கத்தவர்களின் செய்கையால் மனம் உடைந்த தலைவர் தனக்குத் தானே தண்டனை கொடுத்துள்ளார் என்ற தலையங்கத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்தவர்களில் ஒருவன் கியூறியஸ். என்னே பணிவு, என்னே அடக்கம் என்று புல்லரித்து மெய் சிலிர்த்துப் போய் உள்ளே பார்த்த போது, தலைவர் முகாம்களுக்குப் போய் முறை போட்டுச் சமைத்து தனக்குத் தானே தண்டனை கொடுக்கிறார் என்று இருந்தது. ஆகா.. என்ன தண்டனை!

அதைவிடத் தண்டனை, அதைக் கேள்விப்பட்ட தமிழ் மக்கள் மெய் சிலிர்த்துப் போய் இருக்கிறார்கள் என்ற கப்ஸா தான். சமபந்தி போஜனம் சாப்பிட்டது முதல் இன்னோரன்ன 'புரட்சிகரத் தண்டனை' கொடுத்த பல அரசியல்வாதிகளை கண்டு மெய் சிலிர்த்த பலரைப் பார்த்து நாங்கள் எப்போதோ மனம் வெறுத்திருக்கிறோம். வாத்யார் கூட சினிமாவில் குப்பை கூ(கொ)ட்டியவர் தான். அவர் தனக்குக் கொடுக்காத தண்டனையா? மீனவ நண்பன், ரிக்‌ஷாக்காரன், விவசாயி என்று.. இதைப் பார்த்து மெய் சிலிர்த்தவர்கள் எத்தனை பேர் வோட்டுப் போட்டு முதல்வராக்கினார்கள். இப்போது சரியான தண்டனை கிடைத்திருக்கிறது. ஜெயலலிதா முதல்வராகியிருக்கிறார். வினை விதைத்து இப்போது அறுக்கிறார்கள். இது அவர்கள் தங்களுக்குத் தாங்களே கொடுத்த தண்டனை.

★ ★ ★

கடந்த வாரம் வாஷிங்டன் போஸ்ட் செய்திக் குறிப்பு ஒன்றில் இப்படி இருந்தது... "Before lunch they were going to release two policemen," said negotiator Asirwathan. "After lunch he [Prabhakaran] said, `No, no, no. I'm very happy. You can have two more.' The whole tenor was very refreshing." In the end, four policemen were released.

புலிகள் இரண்டு பொலிசாரை முதலில் விடுவதாகச் சொல்லி மதிய உணவுக்கு பின்பு பிரபாகரன் 'தான் மகிழ்ச்சியடைவதாகக் கூறி' மேலும் இரண்டு பேரை விடுவித்ததாக பேச்சுவார்த்தைக்கு சென்ற ஆசீர்வாதம் கூறியிருக்கிறார்.

காரணத்தை யோசித்துப் பார்த்தால்.. தலைவர் தனக்குத் தானே தண்டனை விதித்துச் சமைக்கும் போது பேச்சுவார்த்தைக் குழுவுக்கும் அவரே சமைக்க வேண்டியதாயிருந்திருக்கும். பேச்சுவார்த்தைக் குழுவினர் சாப்பிட்டு முடிய.. சாப்பாடு எப்படி என்று கேட்ட போது 'பிரமாதம்' என்றிருப்பார்கள். தலைவரும் மகிழ்ச்சியில் மேலும் இரண்டு பொலிசாரை விடுவித்திருப்பார்.

★ ★ ★

என்ன பொருத்தம், நமக்குள் என்ன பொருத்தம்! நாம இரண்டு பேருமே ஒரே ராசி, நமக்குள் நிறையப் பொருத்தங்கள் உண்டு என்று போன தடவை சொன்னேனு.. இப்போது இன்னொரு பொருத்தம் வந்திருக்கிறது. கியூறியஸ் கூட முகாமுக்குப் போய் முறை போட்டுச் சமையல் செய்து தனக்குத் தானே தண்டனை கொடுத்தவன் தான்.

இதைக் கேட்டதும்.. அடடே.. இவனும் மாஜி இயக்கத்தவனா? இவன் எப்போது இயக்கம் வைத்திருந்தான், எப்போது தலைவனாய் இருந்தான் என்று ஆளுக்காள் முடியைப் பிய்த்துக் கொள்வீர்கள். அதொண்ணும் இல்லீங்க. . ஜேர்மனியில் அகதி முகாமிற்குப் போய் முறை போட்டு சமையல் செய்து எனக்குத் தானே தண்டனை கொடுத்ததைச் சொல்ல வந்தேன்.

சோதிடம் மாதிரி சமையல் என்பதும் ஒரு கலை என்று தான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதை தண்டனை என்று சொன்னதை இன்றைக்குத் தான் பார்த்திருக்கிறேன். பஞ்ச பாண்டவரில் ஒருவன் கூட சமையலில் பேர் போனவன் என்று கேள்விப்பட்டதுண்டு. அவனும் முகாமில் முறை போட்டுச் சமைத்து தனக்குத் தானே தண்டனை வழங்கிக் கொண்டவன்.

★ ★ ★

கலைக்கும் தண்டனைக்கும் இத்தனை பொருத்தம் இருப்பது எனக்குத் தெரியாது. தண்டனை கொடுப்பது ஒரு கலையாகத் தான் இருந்தது என்பதை துணுக்காய் முகாம் சித்திரவதைகள் பற்றி மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் எழுதிய அறிக்கையை வாசித்த போது தெரிந்தது. கிடங்குகளுக்குள் கிடந்தவர்களில் ஒருவர் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட, அவரது மலத்தில் ஒரு விரலை தொடச் செய்து பின்னர் மற்ற விரல்களால் சாப்பிடும்படி மிரட்டியது கூட ஒரு கலை தான். பாவம் அந்த கைதிகள். விசயம் தெரியாமல் வாயைத் திறந்தோ, மற்ற இயக்கங்களை ஆதரித்தோ தங்களுக்குத் தாங்களே தண்டனை வழங்கிக் கொண்டவர்கள் தான்.

சமையல் செய்வது தண்டனை என்று சொன்னதற்காக எங்கள் பெண்ணிலை வாதிகள் கொதித்தெழுந்திருக்க வேண்டும், காலம் காலமாய் எங்கள் தாய்மார் தங்களுக்குத் தாங்களே தண்டனை விதித்துக் கொண்டு சமையல் செய்து எங்களை வளர்த்தார்கள்.

**'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள்.
எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே.. சே! உயிர் எடுத்தோரே!

★ ★ ★

தமிழக வார சஞ்சிகைகளைப் பார்த்தால் சமைக்கின்ற கணவன்மாரைக் கிண்டல் பண்ணி பெரும்பாலான ஜோக்குகள் வரும், திருமணம் பேசும்போது மணமகனுக்குச் சமைக்கத் தெரியுமா என்று கேட்கிற பெண்கள், கணவனைச் சமைக்க விட்டு வெளியே கிளம்பும் பெண்கள் என்று இத்யாதி ஜோக்குகள்... பூஞ்சணம் பிடித்த சோறு மாதிரி புளித்துப் போயிருக்கும்.

கணவன் சமைப்பது என்பது ஒரு வகையில் அவமானத்திற்குரியதாகவோ, குறைவானதாகவோ கருதப்படுவதாகத் தான் இருந்தது. வெளிநாட்டு வாழ்க்கை என்றுவந்ததும் எல்லாருமே சமைக்க வேண்டிய நிர்ப்பந்தம். மனைவி வேலைக்குப் போனால்.. (அல்லது வீடியோ பார்த்துக் கொண்டிருந்தால்) கணவன் சமைத்தே ஆக வேண்டும்.

இதனால் சமையல் என்பது தங்களை அடிமைப்படுத்துவதன் சின்னம் என்பதற்காக சமைக்காமலே இருக்கின்ற பெண்(ணிலைவாதி)களும் உண்டு. பிறகு கடையில் யாராவது வெல்பெயர் எடுக்கின்ற பெண் சமைத்துக் கொடுத்ததை விலைக்கு வாங்கிச் சாப்பிட்டு பசியை ஆற்றிக் கொள்வதுமுண்டு... இது மறைமுகமாக பெண் அடிமைத்தனத்தை வளர்க்கிறது என்று அறியாமல்!

★ ★ ★

இயக்கத்திலிருந்தவர்கள் விட்டுப்போவதாக துண்டுகொடுத்த பின்னர், அல்லது ஏதாவது தவறுகள் செய்த பின்னர், அவர்களுக்குத் கோட்டை உடைப்பதோ, பங்கர் வெட்டுவதோ அல்லது சமைப்பதோ தண்டனையாக வழங்கப்படும்.

ஆனால் தலைவரே இறங்கி வந்து சமைக்கிறார் என்றால். . ஆகா! எத்தனை கொடுமையான தண்டனையை தனக்குத் தானே கொடுக்கிறார், பசுவின் கன்றை தேர்க்காலால் நசித்துக் கொன்றதற்காக தன் மகனை தேர்க்காலில் நசித்துக் கொன்ற மனுநீதி கண்ட சோழன் மாதிரி.. புறாவுக்காக தன் தசையை அரிந்து கொடுத்த சிபிச்சக்கரவர்த்தி மாதிரி.. தன்னை வருத்தி சமைக்கிறார்..

சமையல் எவ்வளவு கஷ்டமான தண்டனை.. ஆயுள் தண்டனை பெற்ற எங்கள் அம்மாமார் எங்களுக்கு அந்தப் புகைக்குள் நின்று 'அவித்துக் கொட்டும்' போது எங்களுக்கு அது தெரிந்திருக்கவில்லை. அதைக் கண்டு மெய் சிலிர்க்க முடியவில்லை. இப்போது தலைவர் சமைக்கத் தொடங்கியதும் மெய் சிலிர்த்துப் போய் விடுகிறது. ஆகா! எங்களுக்கு எவ்வளவு இளகிய மனது! இன்னொரு உயிர் அடுப்பங்கரையில் நின்று அந்த வெக்கைக்குள் வேர்த்துக் கொட்டக் கொட்ட சமைக்கும்போது அதை எங்களால் தாங்க முடியவில்லை... ஆனால் யாராவது பசியில் தோட்டத்தில் திருடியவனை கம்பத்தில் கட்டி நாய் மாதிரி மண்டையில் போடும் போதும் துவக்காய்க்குள் வைத்து இத்தனை உயிர்களை வதைக்கும் போதும் 'விடுதலைப் போராட்டத்தில துரோகி ஒழிப்பு அவசியம்' என்பதை ஓங்கிச் சொல்ல மட்டும் முடிகிறது.

★ ★ ★

நம்ம விடுதலைப் போராட்டத்திற்காக எதையும் நியாயப்படுத்த முடியும் என்பது இந்த வருட தொடக்கத்தில் தெரிந்தது. உலகத்தமிழர் சென்ற தடவை விற்ற கலண்டர்களில் பார்த்தீர்கள் என்றால்... புலிகளின் இயக்கத்தின் பிரிவுகளில் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் என்று ஒன்று இருப்பது தெரிந்திருக்கும். இந்த அமைப்பு வெளிநாடுகளில் பணம் சேர்க்கும்போது அது புலிகள் அமைப்பு என்பதைக் கூறாமல், ஏதோ அகதிகளுக்காக பணம்சேர்ப்பதாக மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது... ஏதோ அதில் சேர்க்கின்ற பணம் ஒரு சதமும் தப்பாமல் அகதிகளுக்காக போய் சேர்வதான பிரமையை ஏற்படுத்தி.

இந்த வருடம் உத்தியோகபூர்வமாக உலகத்தமிழரில் தாங்கள் இந்து, கிறிஸ்தவ கோயில்களில் புதுவருட தினத்தன்று பணம் சேர்ப்பதாகவும் அனைவரும் நிதியுதவும்படியும் கேட்டிருந்தார்கள். ஆனால் இம்முறை போன பக்தர்கள் பலர் இவர்களின் அடாவடித் தனங்களைக் கண்டு கடும் எரிச்சலில் தாயகத்திற்கு போன் பண்ணி தங்களுக்கு நடந்த நிகழ்ச்சிகளை தெரிவித்தார்கள்.

றிச்மண்ட் ஹில் ஆலயத்திலும் சரி, அந்தோனியார் கோயிலிலும் சரி.. வீதியோரங்களில் உண்டியல் சகிதமாக நின்று புலிகளின் கொடிகளை ஆட்டிக் கொண்டு கொடியும் விற்று அகதிகளுக்கு பணமும் சேர்த்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஒரு பக்தரின் கருத்துப்படி 'நான் கோயிலுக்குப் போறதோ, இவங்களால் வந்த துன்பம் காரணமாக நிம்மதி தேடித் தான். அங்கையும் இவங்கள் வந்தால் நாங்கள் நிம்மதி தேடி எங்க போறது' என்றார். பூஜை முடிந்து வெளியே வர வாசலில் நின்று பலாத்காரம் பண்ணும் பாணியில் அகதிகளுக்கு பணம் கேட்டிருக்கிறார்கள். அதற்கு மறுத்தவர்களிடம் 'அங்க சனம்' இருக்கிறது உங்களுக்கு தெரியாதோ' என்று கேட்டிருக்கிறார்கள். இதை கோயில் நிர்வாகத்திடம் சுட்டிக் காட்டி ஆட்சேபம் தெரிவித்த போது நிர்வாகம் பாராமுகமாக இருந்திருக்கிறது.

காசு பொக்கட்டில் இல்லை என்று கூறியவர்களிடம் கிண்டலும் கேலியுமாய் பேச்சு வேறு.

இன்னொரு பக்தரிடம் 'அண்ணை, உங்களுக்கு சில்லறை பாரமாயிருக்கும், தந்திட்டுப் போங்கோ' என்று கிண்டலாக.. சில 'தொண்டர்கள்' மிரட்டும் பாணியில் நிதி சேகரித்திருக்கிறார்கள். வேறு ஒரு பக்தர் 'நீங்கள் புலிகள் அமைப்போ?' என்று கேட்ட போது, இல்லை என்று கூறிய பின்பு தான் அவர் கொடுத்திருக்கிறார். அகதிகளுக்காக என்று கொடுத்த அவருக்குப் பிறகு தான் புரிந்தது, இது புலிகளின் பினாமி அமைப்பு என்று.

ஆனால் புலிகளின் கொடியைக் கூட 'தேசியக் கொடி' என்று கூறி விற்றார்களாம். மொத்தத்தில் அகதிகளுக்காக பணம் சேர்ப்பதாக சொல்லி மிரட்டிப் பணம் வாங்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை சமாதானம் வருவதற்கு முன்பாக பணத்தைச் சேர்க்கும் 'இறுதி யுத்தமோ?' என்னவோ. முன்பு எண்பதுகளின் நடுப்பகுதியிலிருந்து 'ஏவுகணை' வாங்க என்று பணம் சேர்த்தது முதல் எத்தனை இறுதி யுத்தங்களுக்குச் சேர்த்தார்கள். இப்போது அப்படியெல்லாம் சேர்க்க முடியாது. இதனால் அகதிகளுக்கு என்று பணம் சேர்க்கிறார்கள்.

அகதிகளுக்கு என்று பணம் சேர்க்கிறார்கள், சமாதானம் வந்தால் அகதிகள் பிரச்சனையே இருக்காதே. அப்படியென்றால் சமாதானத்தை நாட வேண்டியது தானே. பிறகெதற்கு அகதிகளைக் காட்டி இங்கே உண்டியல்? அங்கே 'சமாதானக் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு' இங்கே உண்டியல்! பொதுமக்களுக்காக அனுப்புகின்ற உணவுப் பொருட்களில் பத்து வீதத்தைப் பறித்து வைத்துக் கொண்டு அட்டகாசம் செய்பவர்கள் இங்கே அகதிகளுக்காக இரங்கிப் பணம் சேர்ப்பதைப் பார்க்கும் போது வேடிக்கையாய் இல்லையா?

★ ★ ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யாழ்ப்பாணத்திற்காக அனுப்பப்படும் உணவுப் பொருட்களில் பத்து வீதத்தை புலிகள் தங்களுக்கு பறித்துக் கொள்வது பற்றி முன்பு செய்தி வெளிவந்திருந்தது. அந்த உணவுப் பொருட்கள் தானே இன்று சமையல் தண்டனை வழங்கப்படுபவர்களுக்கு (தலைவர் உட்பட) வழங்கப்படுவதாக இருக்க வேண்டும்.

இப்படியான தண்டனையை எனக்கு நானே விதிக்க வேண்டிய காலத்தின் கட்டாயம் எனக்கு முன்னர் வந்தது. எனக்கு நானே தண்டனை விதித்த போதும் மெய் சிலிர்த்தார்கள்.. அது தான் என் சகோதரர்களைச் சொல்ல வந்தேன். எப்படியாக நாங்கள் சோறு தீத்தி விட்ட பிள்ளை அந்த நாட்டில் வைத்து தானே தனக்கு தண்டனை வழங்கி சமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் என்று தான்.

போய்ச் சேர்ந்தது ஒரு அகதி முகாம் போன்ற ஒரு கட்டடம். நம்ம அறையில் நம்மை முன்பின் அறியாதவர்களோடு வாழ வேண்டிய நிர்ப்பந்தம். இதனால் தொழிற் பங்கீடு. சமையல் முறை போட்டுச் சமைக்க வேண்டியதாயிற்று. இதெல்லாம் பத்து வருடத்திற்கு முன்னைய கதை.

அது ஒரு ஜாலியான அனுபவம் தான். நம்ம வீட்டில் என்றால் விறகு வாங்க வேண்டும், ஐம்பது யார் தொலைவில் இருக்கும் கிணற்றில் தண்ணீர் அள்ளி வர வேண்டும். அரிசி கல்லெடுத்து உமி எடுத்து பெரும் ஆரவாரங்கள் பண்ணி போட்டு, கஞ்சி குடித்து.. அது இங்கே ஐயர்மார் செய்வது போல பெரும் சடங்கு...

அங்கே.. சமையலறையில் பக்கத்திலே பைப்பில் தண்ணீர். மின்சார அடுப்பு. போதாக்குறைக்கு அரிசி கூட பெட்டியில் கிளிகை.. சிறிய பைக்கட்டுக்களில்... குத்தரிசி எல்லாம் கிடையாது. நம்ம கூப்பனுக்கு கிடைக்கிற வெள்ளைப் பச்சை அரிசி. அந்த பராக்கிரமபாகுவின் படம் போட்ட 'பெரக்கும் பால் டின்'னை சுவரில் தேய்த்துப் பெற்ற 'காக்கொத்துப் பேணி' எல்லாம் கிடையாது. தண்ணீரைச் சூடாக்கி.. பைகளை ஏதோ மீனைத் தூக்கிப் போட்ட மாதிரிப் போட.. இருபது நிமிடத்தில் சோறு தயார்.

அடுத்து கறி தான் விவகாரமான பகுதி. அங்கே மலிவானது பன்றி இறைச்சி. அந்தக் கொழுப்போடு வாங்கிக் கொள்ளலாம். (சில விண்ணர்கள் இதை விட மலிவான சூப் கோழியை வாங்கி இறைச்சிக்கறி வைத்தார்கள்.. இதை விட மலிவாக நாய் இறைச்சி விற்றாலும் வாங்கியிருப்பார்கள்) பிறகென்ன, உருளைக்கிழங்கு, வெங்காயம் எல்லாவற்றையும் போட்டு எண்ணெயை விட்டு வதக்கி, பன்றியைப் போட்டு பிரட்டி மிளகாய்த்தூளைப் போட்டால் கறியும் தயார். இங்கே சமையல் பெரிய பிரச்சனை இல்லை. சாப்பிடுவது தான் மிகப் பெரிய பிரச்சனை. நம்ம சமையல் தெரியும் தானே, தூள் அதிகமாய் இருக்கும், அல்லது உப்புக் கூடிப்போய் இருக்கும். இதை எப்படியாவது சாப்பிட வேண்டும். அதற்கும் சில மந்திர தந்திரங்கள் உண்டு.

இங்கே உள்ளது போல, தமிழ் மக்களுக்கு சேவை செய்வதற்காக அங்கே யாரும் மூலைக்கு மூலை கடை திறக்கவில்லை. ஒரு பாகிஸ்தானியர் ஒருவர் ஒவ்வொரு மாதமும் கடைசியில் ஒரு வாகனத்தில் இந்த 'இரத்தம் சொட்டும் இறைச்சியும், துடிக்கும் மீனையும்' தவிர மற்ற எல்லா பலசரக்குவகைகளையும் கொண்டு வந்து 'வணக்கம்' செய்வார். அவர் தான் எங்களுக்கு இந்த விநியோகம். அவரிடம் சட்னியும் ஊறுகாயும் வாங்குவோம்.

இந்த சட்னியும் ஊறுகாயும் கடைகளில் வாங்குகிற தயிரும் தான் நம்ம சாப்பாட்டை உள்ளே செல்ல வைக்கும். இதெல்லாம் பெரும் தண்டனைங்க.

அப்புறமாய் மாலையும் வரும்.. மாலையில் வழமை போல.. நூடில்ஸ். நாங்கள் நொப்ஹில் பார்ம் மாதிரி அங்கே இருக்கும் கடைகளில் போய் பொருட்கள் வாங்கும் போது அவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும். பெட்டிக்கணக்கில் அரிசி, பைக்கணக்கில் நூடில்ஸ். அள்ளிக் கட்டி வந்தால்.. எப்படி இருக்கும்.

பிறகென்ன? உருளைக்கிழங்கையும் பன்றி இறைச்சியையும் பொரித்து ஒரு புறமாய் வைக்கவும். அடுப்பில் நீரை வைத்து சுவிட்சைப் போடவும். தண்ணீர் கொதிக்கும் போது நூடில்ஸைப் போடவும். இதில் பதம் பார்ப்பது தான் கொஞ்சம் சிக்கலானது. அதற்கும் சில டெக்னிக்குகள் உண்டு. ஒரு நூடிலை எடுத்து சுவரில் எறிய வேண்டியது. சுவரில் ஒட்டிக் கொண்டு விட்டால் அவிந்து விட்டது. இப்படி ஆளுக்காள் சுவரில் எறிந்தே ஒரு முகாமே சாப்பிடக்கூடிய அளவு நூடில்ஸ் அந்த சுவர்களில் காய்ந்தபடி கிடந்தது.

இதையும் தொண்டைக்குள் இறக்க வேண்டுமே. தக்காளிப்பழ சோஸ் போட தன்னால் உள்ளே போகும். இது தான் நம்ம சமையல்.

சமையல் கலையை இவ்வாறு கற்றுக் கொண்டு நமக்கு நாமே தண்டனை கொடுத்துக் கொண்டிருக்க.. பெரும் கூட்டம் சேர்ந்தது. கியூறியஸ் தலைமையில் ஒரு கூட்டம். ஜாலியான கூட்டம். ஏற்கனவே அங்கு பந்தா காட்டிக் கொண்ட கூட்டங்களை எல்லாம் மிரட்டி வைத்து அட்டகாசம் பண்ணியது இந்தக் கூட்டம்.

அங்கு எந்த இயக்கம் வந்து கூட்டம் வைத்தாலும் நம்ம கூட்டம் போனால் பம்மாத்துக் கதை விட முடியாது. அங்கே இயக்கத்திற்காக மாதாந்தம் பணம் கொடுத்துக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் கியூறியஸும் அவன்தன் மச்சானுமாய் முதல் முதலாக மறுத்த பின்பாகத் தான் தாங்கள் கொடுப்பதை நிறுத்தினார்கள். இப்படியாக ஒரு கூட்டம் சேர்ந்ததும் கியூறியஸ் சமையல் தண்டனையில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு அதற்கான கணக்கு வழக்குகளை பார்த்துக் கொண்டான். மற்றவர்கள் தங்களுக்குள் முறை போட்டுச் சமைப்பதும் அடிபட்டுக் கொள்ளும் போது கியூறியஸிடம் விலக்குத் தீர்க்க வருவதுமாக இருந்தார்கள். சில நேரங்களில் அடுப்பில் இறைச்சி வேகும்போது சண்டை தொடங்கினால் இடையில் வந்து சேர்ந்து முறையிடுவார்கள். அவர்களைச் சமாதானப்படுத்தி யுத்த முனைக்கு வேறு யாரையாவது அனுப்பினால் தான் கறியை இறக்க முடியும்.

தலைவர் மாதிரி இறங்கி வந்து தண்டனை கொடுத்து சமைக்காமல் கியூறியஸ் தனக்கு தானே தண்டனை கொடுத்து சமைத்ததால் தலைவனானான். அறையில் பாணும் ஜாமும் வாங்கி வைத்திருந்தால் தன் பாட்டில் அது இருக்கும். யாராவது ஒருவர் சாப்பிட்டால் மற்ற எல்லாருக்கும் உடனே பசிக்கும். காலை எழுந்தவுடன் கியூறியஸின் அறைக்கு அந்தக் கட்டடத்தில் உள்ள அனைவரும் வந்து சேர.. எல்லாருக்கும் தேனீர் சப்ளை நடக்கும். நம்ம கூட்டத்தின் பொலிஸி இது தான். யாரும் வாலாம், தேனீர் குடிக்க விரும்பினால் வைத்து எங்களுக்கும் தந்துவிட்டுக் குடிக்கலாம்.

இந்த வழமையான சோறு, பாண், பன்றி இறைச்சி என்ற சமையல் பாகம் தவிர்ந்த மற்ற முயற்சிகளில் ஈடுபடுவது மிகவும் அபூர்வமானது. இதைவிட அந்த சோஸேஜ் தான் கொஞ்சம் வித்தியாசமானது. பன்றி இறைச்சியை அரைத்து நீளமாய் தடி போல் செய்யும் இதற்கு நம்மவர்கள் வைத்த பெயரே சுவாரஸ்யமானது. ஒரு தடவை யாரையோ குடும்பஸ்தர்களை வீட்டுக்கு அழைத்தவர்கள் 'மச்சான், இண்டைக்கு .... சமைப்பம்' என்று அப்பாவித்தனமாகச் சொல்லப் போக அந்தப் பெண் முகம் சுழித்ததும் உண்டு.

★ ★ ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இதன் பின்னால் கியூரியஸின் அக்கா குடும்பம் வந்து சேர்ந்ததும் திரும்பவும் இந்த நாக்குக்கு உயிர் வந்து சேர்ந்தது. பிறகென்ன? விதம் விதமான சாப்பாடு. நீண்ட காலத்திற்கு பின்னர்.

பின்னுளில் கனடா வந்து சேர்ந்த போது ஒரு விண்ணனுடன் சேர்ந்து வாழ வேண்டி வந்தது. இவன் சூப் என்ற பெயரில் வீட்டில் இருக்கும் எல்லாவற்றையும் போட்டு சூடாக்கி விட்டு தந்து விடுவான். இறைவன் நாமத்தை ஜபித்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டு குடித்து சப்பித் துப்ப வேண்டியது தான். தலைவிதி.

பின்னர் இன்னொருவனை வீட்டில் சேர்த்துக் கொண்டதில் வானத்தில் போன சனியனை ஏணி வைத்து இறக்கிய மாதிரி துன்பத்தை விலைக்கு வாங்கிக் கொண்டாயிற்று. அவனுக்கு நான் எப்படித் தான் சமைத்தாலும் பிடிக்காது. சீ.. சீ.. என்று தொணதொணத்துக் கொண்டிருப்பான். தான் சமைத்துத் தான் சாப்பிடவும் வேண்டும். அப்புறமாய் எல்லாருக்கும் போய் 'உவனுக்கு சமைக்கத் தெரியாது, உவன் வீட்டிலே சமைக்கிறேலை' என்று வேறு சொல்லுவான். ஊருக்கு கூட கடிதம் எழுதினன் என்றால் பாருங்களேன். இப்போது கண்டாலும் நிச்சயமாய் கியூரியஸின் சமையல் பற்றியும் இன்னோரன்ன விடயங்கள் பற்றியும் அவன் உங்களுக்கு சொல்லுவான். ஆனல் எனக்கு தான் சமறிக் காசு தர வேண்டும் என்பதை மட்டும் சொல்ல மாட்டான். அது தான் சொன்னேனே.. துன்பத்தை விலை கொடுத்து வாங்கினேன் என்று.

★ ★ ★

அவசியம் தான் மனிதனை கண்டுபிடிப்பாளனுக்குகிறது. தேவை என்னையும் ஒரு சமையல்காரனுக்கியிருக்கிறது. இப்போதும் அடிக்கடி எனக்கு நானே தண்டனை கொடுத்துக் கொள்வதுண்டு. இப்போது இங்கே எல்லாமே கிடைப்பதால் சமைக்க முடியாவிட்டாலும் பாணும், பருப்புடனும் சமாளிக்க முடிகிறது. இந்த சமையல் தண்டனையிலிருந்து தப்புவதற்காக இங்கே இடியப்பக் கடைகளில் காரில் வரும் பெண்கள் இடியப்பம் வாங்கிச் செல்கிருர்கள். ஒருவேளை வழியில் பெட்டியை எறிந்து விட்டு 'இஞ்சேருங்கோ. இண்டைக்கு இடியப்பம் அவிச்சிருக்கிறன்' என்று கணவன்மாருக்கு அவிக்கக் கூடும். யாருக்குத் தெரியும்?

★ ★ ★

தலைவர் சமையல் செய்து தனக்குத் தானே தண்டனை விதிக்கிருர் என்று வாசித்ததும் என் மனதிற்கு வந்தது ஒரு கதை தான்.

புலிகளின் குண்டால் இறந்து காமினி மேலுலகம் போனுர். மேலே போனல் சித்திரபுத்திரன் வாசலில் நின்ருர்.

'அங்க இருந்து தமிழ்சனத்துக்கு நீங்கள் பண்ணின அட்டகாசத்துக்கு உங்களுக்கு நரக லோகம் தான்' என்றபடி உள்ளே கொண்டு போனுர். 'ஏற்கனவே புலிகள் குண்டு வைத்து கொஞ்சப் பேரை இங்கே அனுப்பியதால் எமதர்மனுக்கு பாசக் கயிறு வீச தேவையில்லாமல் போய் விட்டது. சரி, உனக்கு ஒரு சலுகை. உனக்கு நீயே தண்டனை வழங்கிக் கொள்ள உனக்கு அனுமதி தருகிறேன். ஆனல் இங்கே ஏற்கனவே வழங்கப்பட்ட தண்டனைகளில் ஒன்றைத் தான் நீ தெரிவு செய்யலாம்' காமினிக்கு ஒரே குஷி. 'எப்படியான தண்டனை இங்கே கிடைக்கின்றன என்று பார்க்க முடியுமா?' என்று கேட்டார்.

'நோ, புரொப்ளம்' சித்திரபுத்திரன் உள்ளே ஒரு குயிக் ரூர் அடித்துக் காட்டினர். உள்ளே ராஜீவைத் தலைகீழாய் கட்டி சுட்ட இரும்புக் கம்பியால் குறி வைத்துக் கொண்டிருந்தார்கள். 'இது வேண்டாம்'.

அடுத்த அறையில் லலித்தை எண்ணெய்க் கொப்பரையில் போட்டு பொரித்துக் கொண்டிருந்தார்கள். 'இதுவும் வேண்டாம்'

அடுத்த அறையில் ரஞ்சன விஜேரத்தின.. நெருப்பில் மேல் வைத்த தட்டு ஒன்றில் ரொட்டி போல வாட்டப்பட்டுக் கொண்டிருந்தார். 'இதுவும் வேண்டாம்'

அடுத்த அறையில் பார்த்த காமினிக்கு இன்ப அதிர்ச்சி.. பிரேமதாசா மடோன்னவுடன் படுக்கையில் சல்லாபித்துக் கொண்டிருக்கிருர். Prema "in bed with madonna" 'ஆகா, பிரேமதாசா அதிர்ஷ்டசாலி. தனக்குத் தானே தண்டனை கொடுத்து மடோன்னவுடன் படுக்கையில் சல்லாபிக்கிருர்' என்று மனதில் நினைத்த காமினி 'எனக்கு இந்த தண்டனை தான் வேண்டும்' என்ருர். சிரித்துக் கொண்டே சித்திரபுத்திரன் சொன்னுர்.. 'தண்டனை பிரேமதாசாவுக்கு அல்ல, மடோன்னவுக்கு'

★ ★ ★

அது மாதிரி, தலைவர் தனக்குத் தானே தண்டனை விதித்து சமையல் செய்கிருர் என்றால்.. தண்டனை தலைவருக்கு அல்ல.. அதைச் சாப்பிடுகின்ற புலிகளுக்குத் தான்.

*This newspaper is published by Georgicka communications. A member of Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினல் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
Georgicka communications
P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.
Tel: (416) 920 9081
Fax: (416) 963 5738
E mail:71650.3216
@Compuserve.com

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை

## தாயகம் சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் ஒரே இடத்தில்! மலிவு விலைகளில்!!

# அன்ரனி பிறதர்ஸ்

முத்திரை, சிகரெட்,
போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்
TTC Tickets,
Lottery Tickets

உடன்
மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழ
வகைகள்


தமிழக,
இலங்கை,
கனடிய
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள்
அனைத்தும்

★ மலிவு விலையில்
லேசர் இசைத்தட்டுக்கள்
★ தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள் வாடகைக்குப் பெறலாம்

## ANTONY BROTHERS

வாரத்தில் 7 நாட்களும்
காலை 9 மணி முதல்
இரவு 11 மணி வரை

1472 Queen St West (Queen/Lansdowne)
Toronto, Ont. M6K 1M4
TEL:(416) 588-0733
TEL/FAX:(416) 516 3903




## ANTONY BROTHERS FASHION HOUSE

1484 QUEEN ST WEST
Tel:(416) 588 0310

சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
ஆண்கள், பெண்கள்,
குழந்தைகளுக்கான
உடைகள்

சுவாமிப் படங்கள்,
பரிசுப் பொருட்கள்,
பெண்களுக்கான அலங்காரப்
பொருட்கள், எவர்சில்வர்
பாத்திரங்கள், ஒலிப்பதிவு,
ஒளிப்பதிவு நாடாக்கள்

அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

SIVA'S TRADING CO LTD

ஸ்காபரோ நகரின் தன்னிகரற்ற
தமிழ் வியாபார நிலையம்

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

SIVA'S TRADING CO LTD
321-2739

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

அனைத்துப் பொருட்களும் மலிவு விலையில்

★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்) உடனுக்குடன் கிடைக்கும்

**3852 Finch Ave East (Kennedy/Finch)**
**Tel:(416) 321 2739**

# P.S.T.T

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

Video Transfer
(Any system)
$8.99